பக்கங்கள்: 20 விலை: 30.00

# தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:14 31.07.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052




ஹிஷாலினி ஒரு குறியீடு மட்டும் தான்

பக்கம் 12

**அவற்றோரன்ன இவற்றோரன்ன**

பேராசிரியர் அ.ராமசாமி

# பா.ரஞ்சித்தின் சார்பட்டா பரம்பரை: தலித் சினிமாவிலிருந்து விளிம்புநிலை நோக்கி




> **“வெற்றிப்படச் சூத்திரங்களில் முதன்மையாக இருப்பது எப்போதும் நாயக மையத்தை வளர்த்தெடுக்கும் சாகச சினிமாக்களாக இருக்கின்றன. இவ்வகைச்சினிமாக்களைத் தயாரிக்க நினைக்கும் தயாரிப்பாளர்கள், அச்சூத்திரத்தை வெற்றிகரமாகக் கையாள்வதில் திறமை பெற்ற இயக்குநர்களை நாடுகிறார்கள்.”**

இயக்குநர் பா. ரஞ்சித்தின் ஐந்தாவது படமாக வந்துள்ள சார்பட்டா பரம்பரை உலகத்தமிழ் பார்வையாளர்களையும் தாண்டிப் பலராலும் கவனிக்கப்பட்ட சினிமாவாக மாறியிருக்கிறது. அப்படி மாற்றியதன் பின்னணியில் இயக்குநரின் முதன்மையான நகர்வொன்றிருக்கிறது. சினிமாப் பார்வையாளர்களுக்கு நன்கு அறிமுகமான குத்துச்சண்டை சினிமா என்ற வகைப்பாட்டை, உள்ளூர் வரலாற்றோடு இணைத்துப் பேசியதே அந்த நகர்வு. தனது சினிமாவை, விளையாட்டு சினிமா என்ற வகைப்பாட்டிலிருந்து அரசியல் சினிமாவாகவும், விளிம்பு நிலைச் சினிமாவாகவும் மாற்றியிருக்கிறார். அது, அவரைத் தலித் சினிமா இயக்குநர் என்ற முத்திரையிலிருந்து, பொதுத்தள சினிமா இயக்குநர் என்ற அடையாளத்திற்குள் நகர்த்தியிருக்கிறது.

**ருசியும் ருசித்தல் நிமித்தங்களும்**

‘முதன்முதலாக’ என்ற சொல்லாட்சியோடு பொருட்களைக் காட்சிப்படுத்தி முன்வைக்கக்கூடிய விளம்பரங்களை வெகுமக்கள் ஊடகங்களில் பார்த்திருக்கிறோம். அதே விளம்பரங்கள் ‘இதுவரை நீங்கள் ருசித்தறியாத ஒன்று’ என்பது போன்ற தொனிகொண்ட விளம்பரங்களையும் முன்வைக்கின்றன. மனிதர்களின் ஐம்புலன்களோடு தொடர்பில்லாத பண்டங்கள் என்றால், ‘முதன்முதலாக’ என்பதும், மனிதர்களின் ஐம்புலன்களோடு தொடர்புடைய பொருட்களென்றால், ருசித்தலோடு தொடர்புடைய சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன.

ருசித்தல் - என்ற தொழிற்பெயர் நேரடியாக உணவோடும் உணவு சார்ந்த பண்டங்களோடும் மட்டும் தொடர்புபடுத்தப்பட்டால் ஐம்புலன்களில் ஒன்றான நாக்கின் நுண்ணுணர்வோடு முடிந்துவிடும். ருசித்தலின் வேர்ச்சொல்லான ‘ருசி’ நேரடிப்பொருள் தாண்டிய கலைச்சொல்லாகப் பயன்பாட்டில் இருக்கின்றது. அதன் மூலம் ருசி, நாக்கைத் தாண்டி கண், காது, மூக்கு, மெய் ஆகிய புலன்களின் நுட்பங்களைக் குறித்த சொல்லாடல்களுக்கும் உரியதாக மாறியிருக்கிறது. கலைகளில் உச்சமாக வந்துள்ள சினிமாக் கலையில் வெளிவரும் ஒரு நல்ல சினிமா, ஐம்புலன்களுக்குமான ருசிக்குத் தீனிபோடுவதோடு, ஆறாவது புலனான அறிவுத் தோற்றவியலுக்கும் காரணமாகிறது.

இணையவெளியில் வெளியான சார்பட்டா பரம்பரை, அதே இணையவெளியின் துணைப்பரப்பான சமூக ஊடகங்களில் பலவிதமாக விவாதிக்கப்படுகிறது. விவாதிப்பவர்கள் சினிமா என்னும் கலைப்பொருளாக முதலில் விவாதிக்கத் தொடங்கினார்கள். அந்த விவாதங்களில் புனைவின் சொல்முறை, பாத்திர உருவாக்கச் சிறப்புகள், உணர்வுருவாக்கமும் வெளிப்பாட்டு நுட்பங்கள், காட்சியுருவாக்கத்தில் இயக்கமில்லா மனிதர்களைத் தவிர்த்த பாங்கு, வண்ணச் சேர்க்கை மூலம் கால அடையாள உருவாக்கம் என்பதோடு, சார்பட்டா பரம்பரை நடைமுறை வாழ்க்கையின் பிரதிபலிப்பு என விவாதிக்கப்பட்டது. அந்த விவாதங்கள் ஒருசில நாட்களிலேயே, சினிமாவைத் தாண்டிய விவாதங்களாக நகர்ந்தன. அந்நகர்வில், சமூகவியலின் தரவாக, வரலாற்று நிகழ்வுகளாக, சமகால அரசியல் குறியீடுகளின் அலைவுகளாக என விதம்விதமாக மாறிக்கொண்டே இருந்தன. இந்த மாற்றங்களும் நகர்வுகளும் ஒரு திறமான வெகுமக்கள் சினிமா, வெகுமக்கள் உளவியலின் பரப்பாகவும் கண்ணிகளாகவும் மாறும் வித்தை எனவும், அதன் உச்சமான வெளிப்பாடாக மாறிவிட்டது சார்பட்டா பரம்பரை, எனவும் கணிக்கலாம். இதற்கு முன் இப்படியான விவாதங்களை உருவாக்கி நகர்ந்த படங்களாக இரண்டைக் குறிப்பிடலாம். அவைகளுள் ஒன்று கமல் ஹாசன் நடித்த தேவர் மகன் இன்னொன்று ரஜினிகாந்த் நடித்த பாட்ஷா. அவையிரண்டும் நடிகர் மைய சினிமாக்கள். சார்பட்டா பரம்பரை இயக்குநர் மைய சினிமா என்பதும் சொல்லப்பட வேண்டிய ஒன்று

**நடிக மையமும் இயக்குநர் மையமும்**

வெகுமக்கள் சினிமாவின் தயாரிப்பாளரும் இயக்குநரும் கண்ணுக்கும் காதுக்குமுரியதாகத் தனது படத்தை உருவாக்கவே பெரும்பாலும் நினைக்கிறார்கள். அந்த நினைப்பு ஏற்கனவே வந்த வெற்றிப்படச் சூத்திரங்களில் ஒன்றில் அவர்களது படத்தை உருவாக்கத் தூண்டுகிறது. வெற்றிப்படச் சூத்திரங்களில் முதன்மையாக இருப்பது எப்போதும் நாயக மையத்தை வளர்த்தெடுக்கும் சாகசச் சினிமாக்களாக இருக்கின்றன. இவ்வகைச்சினிமாக்களைத் தயாரிக்க நினைக்கும் தயாரிப்பாளர்கள், அச்சூத்திரத்தை வெற்றிகரமாகக் கையாள்வதில் திறமைபெற்ற இயக்குநர்களை நாடுகிறார்கள். ஆனால் தனது நுழைவைக் காட்ட நினைக்கும் ஒரு இயக்குநர் ஏற்கனவே அறிமுகமான வெற்றிச் சூத்திரங்களில் ஏதாவது சில வித்தியாசங்களோடு நுழைகிறார். அவ்வித்தியாசம் வணிக வெற்றியை உறுதி செய்யும் நிலையில் அதன் வழியாகத் தனது இயக்குநர் அடையாளத்தை நிறுவிக் கொள்கிறார்.

இயக்குநர் பா.ரஞ்சித்தின் சினிமா நுழைவும் அப்படியொரு வித்தியாசத்தில் தான் தொடங்கியது. முதல் படம் அட்டக்கத்தி தமிழில் அறிமுகமாகிய வட்டார சினிமா என்னும் வகைப்பாட் டின் புதிய வகை யினமாகத் தன்னைக்காட்டிக்கொண்ட படம். பாரதி ராஜாவினால் மதுரை வட்டார சினிமாவும், ஆர்.வி.உதயகுமாரால் கொங்குவட்டார சினிமாவும் அடையாளப்படுத்தப்பட்ட பின்னணியில் சின்னச் சின்ன வேறு-பாடுகளுடன் பல இயக்குநர்கள் பல்வேறு வட்டார சினிமாக்களை உருவாக்கி

▶ 09


லக்சனா பாலகுமாரன்



## சீன–அமெரிக்க

# பேச்சுவார்த்தையின் உள்நோக்கம்

# சீனாவை தோற்கடிக்கும் அமெரிக்க உத்தியாகுமா?







முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் காலத்தில் அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவுகள் கடுமையாக மோசமடைந்தன. குறிப்பாக வர்த்தகம், தொழில்நுட்பம், இணையப் பாதுகாப்பு, கோவிட் - 19 மற்றும் மனித உரிமைகள் உள்ளிட்ட பல விடயங்களில் இரு தரப்பினரும் முரண்பட்டுக் கொண்டதைக் காணமுடிந்தது. இந்நிலையில் அமெரிக்க மற்றும் சீன இராஜதந்திரிகளுக்கிடையே இரு நாட்டு உறவில் விரிசல்களைச் சரி செய்வது தொடர்பான பேச்சுவார்த்தை திங்களன்று (26.07.2021) ஆரம்பமாகியுள்ளது. பெய்ஜிங்கின் டியான்ஜினில் மூடப்பட்ட ரிசார்ட் ஹோட்டலில் அமெரிக்க துணை வெளியுறவு செயலாளர் வெண்டி ஷெர்மன் (wendy Sherman) சீனத் தரப்பின் ஸி பெங்யை சந்தித்தார். அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற ஆறு மாத காலப்பகுதிக்குப் பிறகு அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர் சீனாவிற்குச் சென்று நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவது முதல் முறையாகும். எனவே இக் கட்டுரையும் அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை மற்றும் சீனாவைக் கையாள அமெரிக்கா முன்னெடுக்கும் தந்திரோபாய நகர்வுகள் தொடர்பாகவும் தேடவுள்ளது.

சமீப காலமாக சீனா மீதான அமெரிக்காவின் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் பல மடங்கு அதிகரித்துள்ளது. அதே போன்று சளைக்காமல் சீனாவும் அமெரிக்கா மீது பொருளாதாரத் தடைகள் விதித்துக் கொண்டு வருகின்றது. ஆகவே சீனா - அமெரிக்கா நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத் தடைகள் மற்றும் அத்தடைகள் தொடர்பான பாதிப்புக்கள் மேலும் அத்தடைகளை நீக்குதல் ஆகியன இப் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்களாகின. குறிப்பாக ஜின்ஜியாங் மற்றும் ஹொங்கொங் விவகாரத்தில் அமெரிக்கா அதிருப்தி அடைந்து இருப்பதால் சீனாவின் மீது பொருளாதாரக் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. ஹொங்கொங் விவகாரத்தினை பொறுத்தவரை, கடந்தாண்டு சீன அரசாங்கம் சர்ச்சைக்குரிய ஹொங்கொங் தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இந்தச் சட்டத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா ஹொங்கொங்கிலுள்ள பல சீன அதிகாரிகளின் மீது பொருளாதார ரீதியாக தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. அத்தோடு மட்டுமன்றி அமெரிக்கா தன்னுடைய வணிக சமுதாயத்திற்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்துள்ளது. இதனையடுத்து அமெரிக்காவின் இந்தச் செயலுக்கு கடுமையான கண்டனம் தெரிவித்த சீனா, தற்போது அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் இருந்த வர்த்தக அமைச்சர் உட்பட 7 மூத்த அதிகாரிகளின் மீது பொருளாதார ரீதியாக தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. மேலும் சீனா, அமெரிக்க நிறுவனங்களின் சிலவற்றின் மீதும் பொருளாதார ரீதியாகத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்தத் தகவலை சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ள நிலையில் சீனாவின் இந்தச் செயலுக்கு அமெரிக்கா தன்னுடைய பதில்க் கண்டனத்தை அறிவித்திருந்தது.

ஜின்ஜியாங் விவகாரத்தினைப் பொறுத்தவரை அங்கு இனப்படுகொலை, மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு குற்றம் சாட்டி வருகின்றது. இதனால் அங்கு வர்த்தக நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு அமெரிக்கா கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதாவது சீனாவின் ஜின்ஜியாங் மாநிலத்துடன் விநியோகமும், முதலீட்டுத் தொடர்புகளும் வைத்திருக்கும் நிறுவனங்களும், தனி நபர்களுக்கும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

> “அமெரிக்கா உடனான உறவுகளைப் புதுப்பிக்க சீனா பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது. அப்போது ராஜதந்திரத்தின் உரிமையாளர் போல் அமெரிக்கா நடந்து கொள்வதாக சீனா தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. அமெரிக்காவின் தவறான செயல்கள் மற்றும் சீனா அக்கறை கொண்டுள்ள முக்கிய நிகழ்வுகளின் பட்டியலை வெண்டி ஷெர்மனிடம் ஸிபெங் கொடுத்தார்.”

எனவே சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் அடக்கவும் அமெரிக்கா முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டியதுடன் துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் அமெரிக்கா அதன் மிகவும் தவறான வழிகாட்டுதலையும் ஆபத்தான கொள்கையையும் மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் இச்சந்திப்பின் போது அவர் கூறிய உத்தியோகபூர்வ சுருக்கத்தின் படி, சில அமெரிக்கர்கள் சீனாவை “கற்பனை செய்யப்பட்ட எதிரி என்று சித்தரிக்கின்றனர். அத்தகைய அமெரிக்கர்கள் இரு தரப்பு உறவுகளின் முட்டுக்கட்டைக்குக் காரணம் என ஸீ குற்றம் சாட்டினார்.

மேலும் அமெரிக்கா உடனான உறவுகளைப் புதுப்பிக்க சீனா பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது. அப்போது ராஜதந்திரத்தின் உரிமையாளர் போல் அமெரிக்கா நடந்து கொள்வதாக சீனா தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. அமெரிக்காவின் தவறான செயல்கள் மற்றும் சீனா அக்கறை கொண்டுள்ள முக்கிய நிகழ்வுகளின் பட்டியலை வெண்டி ஷெர்மனிடம் ஸீ பெங் கொடுத்தார். அதில் இரு தரப்பு உறவில் நிலவி வரும் முட்டுக் கட்டைக்கு தீர்வு காண பல்வேறு நிபந்தனைகளை சீன அமைச்சர் விதித்துள்ளார். அதன்படி, சீன கம்யூனிஸ்ட் கட்சியினரின் குடும்பத்தினருக்கு அமெரிக்கா விசா வழங்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், சீனத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள், சீன மாணவர்களுக்கு விசா வழங்குவதற்கான கட்டுப்பாடுகள் போன்றவற்றை நீக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத் துறை இணை அமைச்சரிடம் சீனா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சீன அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை நீக்க வேண்டும் என்றும் அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியது.

சீன நிறுவனங்கள், மாணவர்கள், கல்வி நிலையங்கள் மற்றும் ஊடகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்கா முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் கனடாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹவாய் நிர்வாகி மெங் வான்ஷோவுக்கான ஒப்படைப்பு கோரிக்கையை வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் அமெரிக்கா, மனித உரிமைகள் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்த தனது கவலைகளை முன்வைத்தது. காலநிலை மாற்றம், ஈரான் மற்றும் வடகொரியா உள்ளிட்ட விடயங்களில் சீனாவின் ஒத்துழைப்பை அமெரிக்கா வலியுறுத்தியது. ஷெர்மன், ஹொங்கொங் மற்றும் திபெத் உள்ளிட்ட மனித உரிமைகள் பற்றிய கவலைகளை எழுப்பினார் எனவும் சின்ஜியாங்கில் நடந்து வருபவை இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்றும் ஷெர்மன் அழைத்ததாக பிறைஸ் கூறினார். மேலும் ஊடக அணுகல் மற்றும் பத்திரிகை சுதந்திரம் சைபர் ஸ்பேஸ் (cyber space) செயல்களில் சீனாவின் நடத்தை, தாய்வான், கிழக்கு மற்றும் தென் சீன கடல்களில் சீனாவின் நடத்தைகள் தொடர்பில் ஷெர்மன் உரையாடியதாகவும் பிறைஸ் கூறினார்.

மேலும் ஷெர்மன் சீனாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள அமெரிக்க மற்றும் கனேடிய குடிமகனின் வழக்குகள் குறித்து விபரித்தார். அத்துடன் Covid - 19 இன் தோற் றம் குறித்து சீனாவிற்குள் இரண்டாம் கட்ட விசாரணையை அனுமதிக்க வலியுறுத்தியதுடன் உலக சுகாதார நிறுவனத்துடன் ஒத்துழைக்க சீனாவின் விருப்பமின்மை பற்றிய கவலைகளையும் இப்பேச்சுவார்த்தைகளின் போது அமெரிக்கா வெளிப்படுத்தியது.

பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அசோசியேட்டட் பிரஸ்சுடன் (Associated press) ஒரு தொலைபேசி நேர்காணலில் ஷெர்மன் பின்வருமாறு கூறினார். “இது ஒரு செயல்முறை, நாங்கள் மற்றொரு படி எடுத்துள்ளோம். எந்தவொரு குறிப்பிட்ட விளைவுகளையும் எதிர்பார்க்காமல் இந்த உரையாடலுக்கு வந்தோம்.” அமெரிக்க - சீன உறவுகளுக்குப் பொறுப்பான மற்றும் வெளியுறவு மந்திரி வாங் யி ஆகியோருடன் ஷெர்மன் திங்கட்கிழமை தனித்தனி சந்திப்புக்களை நடத்தினார்.

எனினும் பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கிடையில் ஒரு சாத்தியமான சந்திப்பு குறித்து இரு தரப்பினரும் விவாதிக்கவில்லை என்று ஷெர்மன் கூறினார். எனவே இதிலிருந்து அக்டோபர் மாத இறுதியில் ரோமில் நடைபெறும் ஜி - 20 உச்சி மாநாட்டிற்கு சீனாவை ஓரங்கட்டலாம் என்று சில அரசியல் ஆய்வாளர்கள் ஊகித்துள்ளனர்.

எனவே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு இரு தரப்பினருக்கும் பரந்த உலகத்திற்கும் முக்கியமானது. டொனால்ட் டிரம்பின் கீழ் மோசமடைந்த உறவுகளை மேம்படுத்துவதற்காக பெய்ஜிங் அமெரிக்காவின் புதிய நிர்வாகத்திற்கு பலமுறை அழைப்பு விடுத்துள்ளது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீனா தொடர்பில் குறிப்பாக மனித உரிமைகள் மற்றும் பொருளாதாரத் தடைகள் தொடர்பில் தொடர்ந்து உறுதியான அணுகுமுறையை மேற்கொண்டுள்ளார். எனினும் உலக பூகோளமயமாக்கல் காரணமாக வல்லரசு நாடுகளும் தங்களின் ஸ்திரத்தன்மையினை பேணும் பொருட்டு இன்னொரு நாட்டில் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம், காணப்படுவதன் காரணமாக சீனா விவகாரத்தில் அமெரிக்கா ஒரு எல்லைக்கு மேல் பொருளாதாரத் தடைகளினை விதிக்க முடியாது. ஆகவே சீனா மீது மனித உரிமை மீறல், பொருளாதாரத் தடைகள் போன்ற தந்திரோபாயங்களினை பயன்படுத்தி கிளின்டன் காலத்தில் சீனாவை கையாண்டது போன்று இன்று பைடன் நிர்வாகம் கையாளுமா? என்பது சற்று கடினமான ஒன்றாக அமையும் என்பதே ஆய்வாளர்களின் அவதானிப்பாகவுள்ளது. ஆயினும் சீனாவின் பட்டுப்பாதை வளர்ச்சியின் வேகத்தினை தடுத்து நிறுத்த இப்பொருளாதாரத் தடைகள் சில சாதகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் அமெரிக்கா தனது வல்லரசினை நிலைநாட்ட எவ்வாறு பயங்கரவாதம், முதலாளித்துவம், தாராண்மைவாதம் ஆகிய உத்திகளைக் கையாண்டதோ அதே போன்று இப்போது இனப்படுகொலை, மனித உரிமைகளினையும் பைடன் நிர்வாகம் சீனாவுடனான அதிகாரப்போட்டிக்கு பயன்படுத்த முயற்சிக்கின்றமை இப்பேச்சுவார்த்தையின் உள்ளடக்கங்களிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# கொரோனாவுடன் விளையாடிய விளையாட்டை டெல்ராவுடனும் விளையாடப் போகிறோமா?

நாட்டில் கொரோனாக் கொத்தணிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் அரசும் தடுப்பூசிகளை மக்களுக்கு ஏற்றுவதில் தீவிரம் காட்டிவருகின்றது. தடுப்பூசியைப் போடுவதன் மூலம் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்பப்படும் நிலையில் தடுப்பூசி போட்டாலும் கொரோனாவின் திரிபு வைரஸான டெல்ரா தொற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது என்ற மருத்துவ நிபுணர்களின் கருத்து, மக்களை அச்சப்படவே செய்கின்றது. அதேவேளை இன்னும் சில நாட்களில் டெல்ரா பிரதானமான வைரஸாக மாற்றம் பெறலாம் என சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மக்கள் மிகவும் அவதானமாகச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தமது நாளாந்த கடமைகளைச் செய்யவேண்டும் என சுகாதாரப் பிரிவினர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் மக்கள் எந்தளவில் அக்கறை கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுகின்றார்கள்? என்பது கேள்வியாகவே உள்ளது. அச்சமான சூழல் ஒன்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வு மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது நாட்டில் இறுக்கமான சூழல் இல்லை என்பதனைச் சாதகமாகக் கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. திருமண நிகழ்வுகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், கோயில் திருவிழாக்கள் என்பவற்றினை வழமைபோல் வெகு சிறப்பாகச் செய்யும் நிலைமைகளைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிகழ்வுகளுக்குச் சில நிபந்தனை அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்ற போதும் அத்தகைய நிபந்தனைகளை கவனத்தில் கொண்டு செயற்படுகிறார்கள் இல்லை என்று சுகாதார உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

அண்மைக்காலங்களில் அதிகளவிலான மக்கள் பங்கேற்புடன் கோயில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றதனை அவதானிக்க முடிகின்றது. காவடி, அன்னதானம் எனச் சிறப்பாக நடைபெறும் இத்தகைய விழாக்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவில்லை. அண்மையில் யாழ்மாவட்ட அரச அதிபர் க.மகேசன் ‘யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறைகள் மோசமாக இருக்கின்றது. இதனால் கொரோனாத் தொற்று அச்சம் எற்பட வாய்ப்பு உள்ளது’ எனவும் தெரிவித்திருக்கிறார். ஆலயங்கள் என்பது மக்களின் மனதினை அமைதிப்படுத்தவும், அவர்களின் வாழ்வினை நல்வழிப்படுத்தவும், அதன்மூலம் சமூகத்தின் சீர்மியமான வாழ்தல் முறையைக் கட்டியமைக்கவுமான ஒரு நிறுவனம். ஆனால் கொரோனாக் காலத்து மக்களின் ஆலயம் சார்ந்த செயற்பாடுகள் அந்த மக்களை, மக்கள் வாழும் சமூகத்தினைப் பாதிப்புக்குள்ளாக்கத்தக்கதாக அமைவது கவலை அளிக்கிறது. இத்தகைய பாதிப்பானது அச்சமூகத்தோடு மட்டும் நிற்கக் கூடியதல்ல. அது பரவலடைந்து மேலும் பலரை, பல சமூகங்களை பாதிப்புக்குள்ளாக்குவதோடு ஒட்டுமொத்த நாட்டினையும் பாதிப்புக்குள்ளாக்கிவிடும் ஆபத்தும் இருக்கிறது. இது கடந்தகாலக் கொறொனாத் தொற்று அனுபவங்களின் வாயிலாக அறிந்து கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு அனுபவமும் எதிர்காலத்தில் நன்கு திட்டமிட்ட ஆரோக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வழிவகுக்கக்கூடியது. அந்த அனுபவத்தினைச் சரியாகக் கணித்து அதன்பாற்பட்டு செயற்படுவதன் மூலமே இது சாத்தியமாகும். ஆனால் இங்கு யாரும் அத்தகைய அனுபவங்களைக் கவனத்தில் எடுப்பதாக இல்லை. இவ்வாறு கவனத்தில் எடுக்காத செயற்பாடே இன்று நாட்டில் பல இடங்களை முடக்கத்துக்கு உள்ளாக்கவும் காரணமாக இருக்கின்றது. சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் மக்களின் விழிப்புணர்வற்ற செயற்பாடு காரணமாக புத்தாண்டுக் கொத்தணி உருவாகி அது இன்னும் நீண்டு சென்று கொண்டிருக்கும் நிலையில், மீண்டும் திருவிழாக்காலக் கொத்தணியொன்றை உருவாக்குவதற்கான செயற்பாட்டில் மக்கள் ஈடுபட்டு வருகின்றார்கள் போலவே தெரிகிறது.
சுகாதாரத்துறையினர் இவ் விழாக்களை முன்னெடுப்பதில் திருப்தியற்றிருக்கும் நிலையில் பல படித்தவர்கள் கோயில் விழாக்களை நடத்துவதற்கான அனுமதியினைப் பெறுவதற்கு தீவிரம் காட்டி வருவது வேதனையளிக்கிறது. அவ்வாறு பிரயத்தனப்பட்டு கோயில் திருவிழாக்களை முன்னெடுக்கத்தான் வேண்டுமா? கடவுளுக்குரிய வழிபாட்டினை அல்லது திருவிழாவினை முடிந்தளவு அமைதியாக முன்னெடுப்பதோடு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்வது தொடர்பாகவும் சிந்திக்கவேண்டும். அண்மையில் கைதடியில் ஒரு ஆலயத்தில் இவ்வாறான திருவிழா நிகழ்வின் போது சுகாதார நடைமுறையினைப் பின்பற்றாது வழிபாட்டில் ஈடுபட்டதாகவும் அங்கு வந்த சுகாதாரப் பரிசோதகரைக் கண்ட பக்தர்கள் ஓடி ஒழித்ததாகவும் அதேவேளை அவ் ஆலயத்தில் சுகாதார நடைமுறையினைப் பின்பற்றாது காவடி எடுத்த நபர் ஒருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இந்த நிலை ஏன்? ஒரு செயலைச் சரியாகவும் நேர்மையாகவும் அதற்கான ஒழுங்குடனும் செய்யும் போது இவ்வாறு அச்சப்படவும் தண்டனைக்கு உள்ளாகவும் தேவையில்லை. இப்படி ஒரு சூழ்நிலையில் ஆடம்பரமான நிகழ்வுகள் தேவைதானா? என்பதனை ஒவ்வொருவரும் சிந்திக்கவேணடும். கொரோனாவை விட மோசமான வைரஸ் டெல்ரா என்னும் போது கொரோனாவுடன் விளையாடிய விளையாட்டை டெல்ராவுடன் விளையாடாது இருப்பதே சிறந்தது. மீறினால் இவ்வாறான ஆடம்பரமான நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும், அனுபவிப்பதற்கும் நாம் இந்த உலகத்தில் இல்லாமல் போய்விடலாம் என்பதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட்டால் என்ன? ■

# பாடசாலை இடைவிலகல் சிறுவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது.

தந்திரன்

ஹிஷாலினியின் மரணம் நடை பெற்று கிட்டத்தட்ட இன்றுடன் 15 நாட்கள் நிறைவடைந்த நிலையில் இன்னும் மரணத்திற்கான சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை.
இந் நிலையில் குறித்த சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு மீண்டும் பரிசோதனை செய்யப்படும் நிலையில் ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி வேண்டி பல்வேறு போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு முறைப்படுத்தப்பட்ட பொறிமுறை இவ்விடயத்தில் அவசியமானதாக அவதானிக்கப்படுகிறது. இவ்வாறு இல்லாவிடின் சரியான நீதியினைக் கண்டடைய முடியாது போய்விடவும் கூடும்.

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படல் தொடர்பாக பல்வேறு சட்டங்கள் காணப்படுகின்ற போதும் இத்தகைய சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இந்த நிலையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுத்தல் செயற்பாடுகளுக்கு என்ன காரணம்? அதற்கான பின்னணி என்ன? இதற்கு யார் பொறுப்பு? என்கிற காரணிகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் பொருத்தமான முடிவுகள் எடுக்கப்படுதல் அவசியமானது.

இவ்வாறு சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாவதில் ஏதோவொரு வகையில் கல்வித்துறையினரும் காரணமாகின்றனர். பாடசாலையில் சிறுவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கான வாய்ப்பினை இழக்கின்ற நிலையில் அவர்கள் வேலைக்கு செல்லும் நிலையிலேயே இவ்வாறான நெருக்கடிக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். அண்மைய கணக்கெடுப்பின்படி பாடசாலையில் இருந்து இடை விலகும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக அவதானிக்கப் படுகின்றது.

இடைவிலக்கலுக்கான காரணங்களாக வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை, பாடசாலை தொடர்பாகவும் ஆசிரியர்கள் தொடர்பாகவும் மாணவர்களிடம் காணப்படுகின்ற மறை சிந்தனைகள், கல்வியில் விருப்பமின்மை, அதிகரித்த பணப் புழக்கங்கள், தொழில்நுட்பங்களுக்கு அடிமையாதல், அதனை கலாசார சீரழிவுகளுக்குப் பயன்படுத்தல் என பட்டியலை நீட்டிக் கொண்டே போக முடியும்.

இலங்கையில் மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கை கிட்டத்தட்ட 450000 மாக காணப்படுவதனை புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதில் 70 சதவீதமான மாணவர்கள் மலையகத்தையும் பின் தங்கிய பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்களாகக் காணப்படு கின்றனர். இந்த இடை விலகலுக்கு மத்தியிலேயே இலங்கையின் எழுத்தறிவு வீதம் 96 சதவீதத்தையும் தாண்டியதாக காணப்படுகிறது.

இத்தகைய பின்னணியிலேயே தான் மாணவர்களின் இடைவிலகலை கட்டுப்படுத்தாத பாடசாலைகள்- கல்வித் துறையினர் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப் படுவதில் மறைமுகமாக பங்களிப்புச் செய்கிறார்கள் எனக் கூற வேண்டியுள்ளது.




இலங்கைப் பாடசாலையின் உள்ளார்ந்த கட்டமைப்புக்களில் கட்டாயக் கல்விக்கென சமூகப் பங்களிப்புடனான கட்டாயக் கல்விக் குழு காணப்படுகிறது. இவை பெயரளவில் இயங்குகின்றதா? என எண்ணத் தோன்றுகிறது. எல்லாப் பாடசாலைகளும் இத்தகைய கட்டாயக் கல்விக் குழு கட்டமைப்பை கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. அதேவேளை பிரதேச செயலகங்கள் வாரியாகக் காணப்படுகின்ற சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நன்னடத்தை பிரிவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு, தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டிய தேவையை அண்மைக் காலமாக சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளின் தாக்கம் வெளிப்படுத்துகின்றது.

அத்தோடு இடை விலகல்களில் அதிகரித்த எண்ணிக்கையைக் கொண்ட மலையகப் பாடசாலைகளும் பின் தங்கிய கிராமப் பாடசாலைகளும் தம்மளவில் மாணவர்களின் கற்றலின் மீது அதிகரித்த அக்கறையைச் செலுத்த வேண்டும். இப்பிரதேச பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் மாத்திரமன்றி அவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

குறித்த பிரதேச மக்களுக்கான வேலைவாய்ப்புக்களை அரசியல்வாதிகளும் அரசாங்கமும் பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல் உழைப்புக்கேற்ற ஊதியத்தினைப் பெற்றுக் கொடுக்கவும் முன்வருதல் வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் மூலமே மீண்டும் ஹிஷாலினிகளின் மரணம் தொடர்வதனைத் தடுக்கவும் தவிர்க்கவும் முடியும். ■

# எழுத்தின் இயங்கியல்

## வரலாற்றை எழுதுதல்



ந.மயூரரூபன்

ஜெயபாலனின் தனித்துவமான மண் சார்ந்த, மக்களின் பண்பாடு சார்ந்த கவி மொழி எங்கிருந்து உருவாகியது.

என்கிற கேள்விக்கு,

“எனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது எனது மூதாதையரின் ஊரான நெடுந்தீவுக்கு வந்தேன். நாடு பிடிக்க வந்த போர்த்துக்கேயருக்கும் டச்சுக்காரருக்கும் எதிராகக் கிளர்ந்த என் மூதாதையர்களது கதைகளை இங்கு தான் அறிந்து கொண்டேன். இந்தத் தீவில் மக்கள், குறிப்பாக முதியவர்களும் பெண்களும் பேச்சு மொழியில் கவிதை கலந்து பேசுவதைக் கேட்டேன். எனக்குக் கவிதை சொல்லும் ஆற்றல் இப்படித்தான் வந்திருக்க வேண்டும்.”

இது வ.ஐ.ச. ஜெயபாலன் கூறியது
(இதற்கு மேல் பின்னொரு நாளில் பேசுவேன் - வ.ஐ.ச. ஜெயபாலன்)

வரலாறு என்பது எழுத்தின் இயங்கியலில் இரண்டறக் கலந்தது. வரலாற்றின் ஒவ்வொரு அடுக்கும் எழுத்தாளனின் கருத்துருவாக்கத்தில் பாரிய செல்வாக்கினைச் செலுத்துகிறது.

வரலாறு என்றால் என்ன என்கிற கேள்வி முக்கியமானது. ஆயினும் எல்லோராலும் அதற்கு ஒரே மாதிரியான பதிலை அளிக்க முடியாது. வரலாறு என்றால் கடந்த காலம் என்கிற புரிதல் எம்மிடமுண்டு. கடந்த காலம் வரலாறாய் ஆகிவிடுமோ என்பது மிக முக்கியமான விவாதம். கடந்த காலத்திற்கும் வரலாற்றுக்கும் பாரிய இடைவெளி உண்டு வரலாறு என்பது எழுத்தின் அரசியலால் சூழப்பட்ட ஒன்று.

ஒரு தனி நபரின் ஆசாபாசங்கள், செல்வாக்கு, அதிகாரம், விருப்பம், நிர்ப்பந்தம் என்பன ஒரு வரலாற்றை திரிபுபடுத்தவும், மாற்றியமைக்கவும் செய்துவிடும் சாத்தியங்களைக் கொண்டது. அதே போல் ஒரு சமூகம், குழு, இனம் வரலாற்றையும் வரலாற்றின் எச்சங்களையும் தன் குழு நலனுக்காக உருவாக்கவும் மாற்றியமைக்கவும் அல்லது பேணவும் கூடிய நிலைமைகளை நாம் சமகாலத்தில் காணக்கூடியதாகவும் உள்ளது.

எனவே வரலாறு என்பது வரலாற்றை எழுதுதல் மற்றும் வரலாற்றை ஆய்வு செய்தல் என்கிற செயற்பாட்டுக்குள் ஒட்டியிருக்கும் நேர்மைக்கும் நேர்மையீனத்திற்குமிடையில் பயணிக்கும் ஒன்றாகவே அடையாளங் காணப்படக் கூடியதாகும்.

“கடந்த காலம் என்பது ஒரு அயல் நாடு. அங்குள்ளவர்கள் எதையும் வேறுமாதிரி செய்கிறார்கள்.”
(எல்.பி.ஹார்ட்லி)

“கடந்த காலம் ஓர் அயல் நாடு. அங்குள்ளவர்கள் எதையும் நாம் செய்வதைப் போலவே செய்கிறார்கள்.”
(டக்ளஸ் அடம்ஸ்)

இதில் முதலாவது கூற்றை எழுத்தாளர் ஹார்ட்லியும் அடுத்ததை விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளர் டக்ளஸ் அடம்ஸ் உம் கூறியுள்ளனர்.

இவை இரண்டு மாதிரிக் கூற்றுகள். நான் இங்கு இவற்றைக் கூறுவதற்குக் காரணம், வரலாறு தொடர்பாக வேறுபட்ட புரிதல்கள் அல்லது எண்ணக் கருத்துகள் இருந்தாலும் இங்கு பொதுவான மையப்புள்ளி ஒன்றை அடையாளங் காணமுடிகிறது.

அது, ஒருவிதமான அந்நியத் தன்மை மற்றும் வியப்பு. இது நிகழ்வதற்குக் காரணம் மொழி, காலம், மனிதர்கள். இங்கு மொழி என்பது இரண்டு அடிப்படைகளில் புரிந்து கொள்ளப்படலாம்.

**01.** மொழியானது காலமாற்றத்தின் இயல்புகளால் கட்டுண்ட பாவனைச் சொற்கள், அர்த்த வேறுபாடுகள், வழக்குகள் என மாற்றங்கண்டு.

i. அர்த்தங்களை இழந்துவிடும் நிலை
ii. புரிதலில் சிரமத்தை ஏற்கும் நிலை
iii. அர்த்தம் உருவாக்கும் நிலை

என்பன ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் குறித்த மொழி சம காலத்தில் அது எழுதப்பட்ட அர்த்தத்தை அல்லது அந்த உண்மையை உணரப்படாமல் போய்விடுகின்ற அபாயம் ஏற்பட்டு விடுகிறது.

**02.** காலம் என்பது வரலாற்றின் அடிப்படைகளையே முழுமையாக மாற்றங்காண வைத்துவிடும் தன்மை கொண்டது.

நீண்ட காலம் என்பதும், அரசியல் மையமும், அதிகாரத்தின் எழுச்சியும், சில விடுபடல்களும் முற்று முழுதாக வரலாற்றின் புரிதலையே மாற்றிவிடும் நிலைக்கு கொண்டு வந்துவிடுகிறது. இலங்கையில் தமிழ், சிங்கள இனத்தவர்களின் வரலாறுகள் இன்று இந்த வரலாற்றின் விடுபடல்களில் நின்றே பேசப்படுவது கவனத்திற்குரியது. காலம் என்பது விடுபடல்களுடன் சேர்ந்து சில புதிய புனைவுகளையும் வரலாறாக்கிவிடும் அபாயத்திற்கும் துணைபோக வல்லது.

**03.** மனிதர்கள் என்று சொல்லுகிறபோது, மனிதர்களின் வாழ்க்கை முறை சார்ந்த அனைத்துக் கூறுகளும் இங்கு கவனிக்கக் கூடியது. சில நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் போன்றன இன்றுவரை தொடரும். ஆனால் சில கூறுகள் இன்று வழக்கிழந்து போய் விடுகின்ற சூழலில் அடையாளச் சிக்கல்களும் நம்பிக்கையீனங்களும் உருவாகின்ற ஏது நிலைகள் காணப்படலாம்.

இவ்வாறான ஒரு வரலாற்றை அல்லது அனைத்து வரலாற்றுக் கூறுகளையும் அணுகுவதென்பது மிக நுட்பமானதும் புறவயமானதுமான அணுகுமுறைகளைக் கோரி நிற்கும். ஏனெனில் வரலாற்றை மேம்போக்காகவும் அகவயமாகவும் ஒரு போதும் அணுக முடியாது. அவ்வாறு அணுகும்போது அது எமக்குத் தவறான தடங்களை நோக்கி வழிநடத்தும் வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும்.

உண்மையில் வரலாறு என்பது முடிந்து போன ஒன்றல்ல. அதற்கு ஒரு இயக்கம் உண்டு. அந்த இயக்கம் ஒவ்வொரு மனிதனின் இருப்பிலும் அக, புற நிலையில் செல்வாக்குச் செலுத்துகிறது. வரலாற்றுப் புரிதலற்ற ஒருவனுக்கும் வரலாற்றின் விளைவு நன்மையாக அல்லது தீமையாக அமையும் என்பது யதார்த்தமானது.

“வரலாறு என்பது நகர்ந்து கொண்டிருக்கும் ஊர்வலம்” என்ற கூற்றும் உண்டு. ஒரு நகர்ந்து கொண்டிருக்கின்ற ஊர்வலத்தின் இயல்புகளும் பாதிப்புகளும் ஒரு மனிதனுக்கு அல்லது ஒரு சமூகக்குழுவிற்கு ஏற்படும்.

வரலாற்று வடிவங்கள் அல்லது நாம் அணுகக்கூடிய வரலாற்று நிலைகள் எவ்வாறானவை ?

**01.** எழுதப்பட்டவை, **02.** அடையாளங்களாலானவை, **03.** வாய்மொழியாலானவை, **04.** யூகங்களாலானவை, **05.** புனைவுகளாலானவை

எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்ளகள், ஏடுகள் நிறையவே உண்டு. ஒவ்வொரு காலகட்டத்திலும் வரலாற்றெழுதிகள் செயற்பட்டுக் கொண்டே இருப்பர். இது வரலாற்று நூல்கள், ஆவணங்கள், ஏடுகளில் மிகுதி நான்கும் உள்ளடங்குவதற்கும் அல்லது நான்கில் சில சதவீதங்கள் கலந்திருப்பதற்கும் வாய்ப்புண்டு. எழுதப்பட்ட வரலாறுகளில் அடையாளங்கள், அடையாளக்குறிப் புகள், தொல்பொருள்கள், வரைபடங்கள், உருக்கள் என்பன குறிக்கப்பட்டிருக்கும்.

வாய்மொழிக் கூற்றுக்கள், நாட்டார் பாடல்கள் இணைக்கப்பட்டிருக்கும். சில யூகங்களால் கட்டியெழுப்பப்பட்டவையாக இருக்கும் சில புனைவுகளால் பூசி மெழுகப்பட்டவையாயிருக்கும். இங்கு எழுதப்பட்டவை பல நேரங்களில் தம் சார்ந்த அனுபவங்களாலும் தம் சார்ந்த அரசியல் நோக்கங்களினாலும் முற்றுகையிடப்பட்டதாக இருக்கும். அங்கு உண்மையும் இருக்கும் உண்மை போன்ற ஒன்றும் இருக்கும்.

“ இந்தத் தோல்வியில் புலிகளுக்குப் பங்கேயில்லையா? சகோதர விடுதலை இயக்கங்களை அவர்கள் ஆயுதப் பலத்தால் அகற்றியதும் ஈழப்பரப்பில் பிற அரசியற் போக்குகளைச் செயற்பட அனுமதிக்க மறுத்ததும் அப்பாவிச் சிங்கள மக்களையும் இஸ்லாமிய மக்களையும் அவர்கள் கொன்று போட்டதும் அவர்களைத் தனிமைப் படுத்தவில்லையா? சர்வதேச நாடுகளில் அவர்கள் செய்த பயங்கரவாத நடவடிக்கைகளும் கொலைகளும் போதைப் பொருள் கடத்தலும் ராஜீவ் காந்தி கொலையும் அவர்கள் தோல்வியில் முக்கிய பங்கு வகிக்கவில்லையா?”

என்ற கேள்விக்கு தீபச்செல்வனின் பதில்,

“ ஷோபாசக்தி! நீங்கள் விடுதலைப் புலிகள் தொடர்பான நிரந்தரமான எதிர்ப்பை வைத்துக்கொண்டு என்னுடன் பேசுகிறீர்கள். நானோ விடுதலைப்புலிகள் தொடர்பான எனது நிரந்தரமான விருப்பை வைத்துக் கொண்டு பேசுகிறேன். விடுதலைப்புலிகள் சிதைக்கப்பட்ட ஒரு சூழலில் தான் நீங்களும் நானும் பேசிக்கொண்டிருக்கிறோம். புலிகளைத் தாக்குவது மட்டும் தான் உங்கள் நோக்கம் போல எனக்குத் தெரிகிறது........

... விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்கள் என்று சொல்லிக் கொண்டு அரசையும் அரசின் படுகொலைகளையும் அரசின் யுத்தத்தையும் ஆதரித்தார்கள். இஸ்லாமியர்கள், சிங்களவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை நான் வளர்ந்த பிறகு தான் அறிந்தேன். அதை யார் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அப்பாவிச் சிங்கள மக்களையும் முஸ்லிம் மக்களையும் கொல்வது தீர்வல்ல என்று விடுதலைப் புலிகள் கருதியவர்கள் என்பதை நான் அறிவேன்..

என நேர் காணல் நீள்கிறது (ஈழத்து மக்களும் அவர்களது கனவுமே எனது ஆதர்சம், தீபச்செல்வன்.)

இந்த நேர்காணல், 2009 இறுதி யுத்தத்திற்குப் பின்னர் நிகழ்ந்தது. ஷோபா சக்தியும் தீபச்செல்வனும் சம காலத்தில் வாழ்பவர்கள். எழுத்தாளர்கள். ஆயினும் வெவ்வேறு அரசியல் நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களிடமிருந்து உருவாகும் பதிவுகள் நான் மேற்குறிப்பிட்ட வகையில் நிகழ்வதற்கான வாய்ப்புக்களே உண்டு. அது ஒரு காலத்தில் வரலாற்றுத் தன்மை அடையும் போது அங்கு உண்மையும் இருக்கும் புனைவும் இருக்கும்.

எனவே எழுதப்பட்டவை வரலாற்றுத் தன்மையாகிற போது, வரலாற்றை அறிதல், வரலாற்றைக் கற்றல், வரலாற்றை ஆய்வு செய்தல் என்பது கால நீட்சியில் பல்வேறு சந்தேகங்களையும், யூகங்களையும் உற்பத்தி செய்யக் கூடியதாய் அமைந்து விடுகிறது.

எழுத்தின் இயங்கியலில் வரலாற்றுப் பதிவுகள் மிகவும் முக்கியமானவை. அதே நேரத்தில் அவை ஓர் நெருக்கத்தையும் எதிர்பார்ப்புணர்வையும் உருவாக்கவல்லன. ஆயினும் அறியாமலேயே புலனாகாத வடிவில் அதாவது வாசிப்பவர் தெரிந்து கொள்ளாத முறையில் வரலாற்றின் சில சார்பு நிலை எழுத்துகள் அல்லது யூகங்களிலான பதிவுகள் ஒரு இனத்தைப் பற்றி ஒரு தேசத்தைப் பற்றி அவர்களது வாழ்க்கையைப் பற்றி தவறான படத்தையே வரைந்து விடுகிறது. ■

# விடியல்

விஷ்னுப்பிரியன்



பொழுது இன்னும் புலரவில்லை வெளியே படர்ந்திருந்த இருள் கறுப்புத் திரையாய் தன்னை மறைத்தது. விடிவதற்கு இன்னமும் நேரம் இருக்கிறதா? நாலு நாலரை மணிக்காவது எழுந்தால் தான் தேவையான வேலைகளை முடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போகலாம். மகேசனை எழுப்பித் தயார் பண்ணி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு போக வேணும்.

நோயாளி ஆகையால் அவனால் விரைந்து இயங்க முடியாது. அவசரப்படுத்தினாலும் கோபத்தில் சத்தம் போடுவான். எப்படியாவது புறப்படத்தான் வேண்டும். என்ற எண்ணங்களுடன் எழுந்து அறையின் மின் விளக்கைப் போட்டாள். மகேசன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். இரவு முழுக்க நோயின் வேதனையில் புலம்பிக் கொண்டிருந்தவன் இப்பொழுதுதான் நிம்மதியாக உறங்க ஆரம்பித்திருக்கிறான்..!

அவனைக் குழப்ப வேண்டாம் என எண்ணி அறையின் விளக்கை அணைத்து விட்டு சமையல் அறைக்குச் செல்ல தயாரானாள். நல்லைக் கந்தனின் கோவிலின், காலை நாலரைக்குரிய மணி அடித்தது. சமையல் அறையில் தண்ணீர் கொதிக்க வைத்து விட்டுக் குழியலறைக்குள் நுழைந்தாள். குளித்து முடித்து வெளியே வந்த போது மகேசன் எழுந்து உட்கார்ந்து இருந்தான். நெஞ்செலும்புகள் வெளித்தெரிய மெலிந்து வாடிப்போய் காணப்பட்ட அவனைப் பார்த்த போது கழிவிரக்கத்தில் ரதியின் மனதில் துக்கம் பொங்கிற்று. நல்ல நிலையில் இருக்கின்ற வருமானம் உள்ள மாப்பிள்ளை என்று சொல்லித்தான் அவனை அவளுக்குக் கட்டி வைத்தார்கள். புகைப்படத்தில் இருபத்தெட்டு வயதில ராஜா மாதிரித்தான் இருந்தான்.

நல்ல வேலையில் இருக்கின்ற சம்பாத்தியமுள்ள நல்ல பையன் என்று தான் அவளும் எண்ணி இருந்தாள். நாட்கள் போகப்போக அவன் ஒரு குடிகாரன் என்ற உண்மை அவளது நெஞ்சில் பாறையாய் விழுந்த போது அவள் உடைந்து போனாள். வீட்டிற்கு வந்த தனது தாய், தந்தையிடம் சொல்லிப் புலம்பினாள். தந்தை சதாசிவம் கோபத்தில் சத்தமிட்டார். "கிளிய வளர்த்துப் பூனையிட்ட கொடுத்திட்டமே" என்று அம்மா புலம்பினாள். மகேசனின் தாயார் ஏதோ சமாதானம் கூறினாள். அவளது கல்யாணத்தை ஒழுங்கு பண்ணின மகேசனின் தாய்மாமன் மகேசனை அழைத்து வைத்துக் கடுமையாக கண்டித்தார். "உன்னை நம்பி வந்த அந்தப் பிள்ளையும் கண்ணீர் வடிக்க வேணும் எண்டு இருக்கா உன்னட்ட வராமல் போயிருந்தா ஆரேன் சின்னத் தொழில் செய்யுற நல்ல ஒருத்தனக் கட்டிக் கொண்டு அவளும் நல்லா இருந்திருப்பாளே. உனக்கு மனச்சாட்சி இல்லையா" என்று அவர் சத்தம் போட குனிந்த தலை நிமிராது நல்ல பிள்ளை போல் இருந்தான். அந்தச் சம்பவம் நடந்த பின் ஒரு சில வாரங்கள் அவன் ஒழுங்காக இருந்தான்.


குடிப் பழக்கத்திற்கு அடிமையாய் போயிருந்த அவனால் குடியை விட முடியவில்லை. துன்பங்கள் தொடர்ந்தன. ஒரு நாள் இரவு குடித்து விட்டு வந்து படுக்கையில் விழுந்தவன் மறு நாள் காலையில் எழுந்து அறையை விட்டு வெளியே வருகின்ற வரை வாந்தி எடுக்கத் தொடங்கினான். "என்னப்பா செய்யுது" என்று கேட்டபடி அவன் அருகே அமர்ந்து அவன் தலையைப் பிடித்துக் கொண்டாள். இரத்தமே வாந்தியாக வந்ததைக் கண்டு "ஐயோ இஞ்ச பாருங்கோ மாமி இவர் இரத்தம் இரத்தமாய் சத்தி எடுக்கிறார்" என்று கூறினாள்.

அன்றைய தினத்தில் இருந்து கிட்டத்தட்ட ஒன்றரை மாதமாக மகேசன் ஆஸ்பத்திரிப் படுக்கையே கதி எனக் கிடக்க நேர்ந்தது. வைத்தியர்கள் "ஈரல் நல்லாப் புண்ணாய்ப் போயச்சு உங்கடை இவர் இனி குடியை நிப்பாட்டி ஒழுங்கா இருந்தால் தான் குடிக்கிற மருந்து வேலை செய்யும். இனி அவற்ற வாழ்க்கை அவர் எடுக்கிற முடிவில் தான் தங்கி இருக்கு" என்று தலை குனிந்து கண்ணீர் வடிக்கும் அபலை மனைவியிடம் வைத்தியர் சொன்ன போது அவள் நீர் நிறைந்த கண்களால் தன் கணவன் மகேசனை ஏறெடுத்துப் பார்த்தாள். ஒரு குற்றவாளியைப் போல தலை குனிந்து வெளியேறினான். அவர்கள் தொடர்ந்து ஒரு மாதத்திற்கு மேலாக வீடு ஆஸ்பத்திரி என்று அலைந்தார்கள்.

இப்போது ஒவ்வொரு மாதமும் கணவனை ரதி கிளினிக் அழைத்துச் செல்கிறாள். இதோ இன்று கூட அவர்கள் இருவரும் கிளினிக் செல்லத்தான் தயாராகிறார்கள். செய்து வந்த சத்தியங்கள் படி ஒழுங்காக இருக்கும் கணவனை அவளும் கண்ணும் கருத்துமாய் கவனிக்கிறாள். பழக்க வழக்கங்களில் இருந்து விடுபட்டவனாக சிந்திக்கின்ற மகேசனுக்கு உண்மைகள் தெளிவாகத் தான் தெரிகின்றன. சத்தியம் செய்து கொடுத்தது போல இனி ஒரு நாளும் போத்தலைத் தொட்டுக் கூட பார்க்காதவனாக அவன் வாழ்வானா? அந்த நல்ல மனைவியின் கனவுகள் நனவாகுமா? அவள் மனவுலகில் வீசும் வசந்தம் மெய் வாழ்க்கையில் நிலையேறுமா? ■

# நாக்கு

அகமதுஃபைசல்



"நாக்கைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்"? எனக் கேட்டார். "எப்போது நான் ரெயிலில் பயணம் செய்கிறேனோ அப்போதெல்லாம் அமைதியாக, யாருடனும் பேசாமலே செல்வேன். அப்படிப் பேசாமல் வருவதற்கு என் நாக்கு சம்மதிப்பதோடு எனக்கு ஒத்தாசையாகவும் இருக்கிறது. நான் நாக்கை "துள்ளும் மீன்" என்றுதான் சொல்வேன். அது சொற்கடலுக்குள் நீந்தி, துள்ளிக் குதித்து விளையாடுகிறது அல்லவா" என்று சொல்லிவிட்டு அவரைச் சிறிது நேரம் பார்த்தேன். "வாய்க்குள் இருக்கும் நாக்கு இப்படி ரெயிலில் பயணம் செய்ய நினைத்திருக்கும். அதுதான் எனது நாக்கை நானும், உங்களது நாக்கை நீங்களும் இந்த ரெயிலில் பயணம் கூட்டி வருகிறோம்" என்று சொன்னவர் நொடி கூடத் தாமதிக்காமல் என்னைக் கேட்டார் "நீங்கள் எழுத்தாளரா?" நான் சொன்னேன் "இல்லை" என்று.

"கரி நாக்கு" என்று சொல்வாளே உம்மா. அது எனக்கு திடீரென ஞாபகத்திற்கு வந்தது.

"எங்க பாட்டிக்கு கரி நாக்கு" என்று சொல்லி அவர் என்னை முந்திவிட்டார். "சொல்றது பலிக்கும்" என்று அவர் சொன்ன போது அவரது காவி நிறப் பற்கள் வெளியே தெரிந்தன. "மலைகள் போலவே இருக்கின்றன உங்கள் பற்கள்" என்றேன். "சொற்கடலுக்குக் காவலாக இருக்கிறது" என்றார். உடனே நான் நினைக்கிறேன் அவர் ஒரு எழுத்தாளன் என்று. அது அவருக்குப் பொருந்திற்று. எப்படித் தெரியுமா? "ஒரு நாள் முழுக்க நான் வானத்தைப் பார்க்காமல் இருந்துட்டேன். அது என் தாயை இழந்த நாள் போல் இருந்தது" என்றார். எனக்கு அவர் பேச்சைக் கேட்பதில் ஆர்வம் மூண்டது. "உங்களுக்கு அப்படி ஒரு அனுபவம்" என்பதோடு நிறுத்தினார். "அதை நான் இன்று அனுபவிக்கிறேன். என் தாயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள ஊருக்குப் போகிறன்" என்றேன். திடீரென அவர் ஜன்னல் வழியாக வானத்தை ஒரு தரம் பார்த்துக்கொண்டார். அப்போது நாக்கை வெளியே தொங்கவிட்டபடி ஒரு வயதானவர் தன் பிச்சைப்பாத்திரத்தை மேலும் கீழும் அசைத்துக்கொண்டு எங்கள் இருக்கையின் அருகில் வந்து நின்றார். "உங்களுக்கும் சேர்த்து நான் போடுகிறேன்" என்று அவர் தட்டில் ஐம்பது ரூபாவைப் போட்டார். இந்த ஐம்பது என் கையில் இருந்திருந்தால் காலை உணவை முடித்திருப்பேன். உணவில்லாமல், ருசி இல்லாமல் சொற்கடலுக்குள் எனது துள்ளும் மீன் சோர்வாகக் கிடக்கிறதே. என்று நான் நினைத்தது அவருக்கு கேட்டிருக்காது ஆனாலும், "சாப்பிட்டீங்களா" என்று எனைக் கேட்டார். நான் போலியாகத் தலையை ஆட்டினேன். அந்த வயதானவர் பிச்சைப்பாத்திரத்தை ஆட்டியது போல். "நான் இறங்க வேண்டிய வானம் வந்துவிட்டது" என்றார். "உங்கள் வானத்தில் நானும் இறங்குகிறேன்" என்றேன்.

"இது உங்க ஊரா?" எனக் கேட்டார். "ஒரு ஊரை வாங்கும் பணம் என்னிடமில்லை. இங்கிருந்து பஸ்ஸில் தான் போவேன்" என்றேன் சிரித்தவாறு. "சரி நான் தோசை வாங்கித் தர்றேன் வாங்கோ" என்றார் உரிமையோடு.

சாப்பிட்டு முடித்ததும் எனது துள்ளும் மீன் சொற்கடலுக்குள்ளிருந்து துள்ளி எழுந்து அவரைப் பார்த்து "நன்றி" என்றது. அவர் சிரித்தபடி பிரிந்து சென்றார். பஸ் ஏறி ஊர் போய்ச் சேரும்வரை ஏன் அவர் என்னுடன் வரவில்லை? அவர் நினைப்பாகவே இருந்தது. நாக்கை வெளியே தொங்கவிட்டபடி அங்கு வந்த முதியவர் இறங்கும் வந்தார். நான் பஸ்ஸினுள் அவரைத் தேடினேன். பஸ்ஸில் இருந்த அனைவரும் நாக்கை வெளியே தொங்கப்போட்டு என்னைப் பார்த்துப் பழித்தார்கள். நான் பஸ்ஸை விட்டிறங்கி அவருடைய வானத்தில் நடந்தேன். ஏதோ சிந்தனையில் நாய்கள் ஏற்றிச் செல்லும் பஸ்ஸில் ஏறியிருக்கிறேன் என்பதை நினைத்தவுடன் "திக்" என்றது. "அம்மாமாரே ஐயாமாரே தம்பிமாரே அக்காமாரே எல்லோரும் இங்கே வந்து பாருங்கள். இவர் சாதாரண மனிதன் இல்லை. இவர் நாக்கால் கேட்பார், காதால் பேசுவார். நான் சொல்வது பொய்யில்லை நீங்களே வந்து பாருங்கள்" என்று ஒருவன் எல்லோரையும் கூவி அழைத்துக்கொண்டு பஸ் நிலையத்தின் ஒரு ஓரமாக நின்றிருந்தான்.

அங்கு நின்றவர்களுடன் போய் நானும் நின்றேன். அவர் கையில் ஒரு புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு காதுகளால் வாசித்தார். நின்றவர்கள் கண்களால் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ■

# ஆளுமையும் நிருவாகமும் மொழியில் தங்கியிருப்பதா..?

அவதானி


> **தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும் புதிய செயலாளர் திரு. சமன் பந்துல சேன மக்களுடன் பணியாற்றுவதற்கு மொழி இடையூறாக இருக்காது என்று உறுதிமொழி தருகிறார்.**

நினைவாற்றல் மிகச்சிறந்த நண்பன். மாணவர்களுக்கு நல்ல நினைவாற்றல் இருந்தால்தான் நன்கு படிப்பார்கள். அவர்களுக்கு மாத்திரமல்ல கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அது அவசியம் வேண்டும்.

ஆனால், அந்த மாணவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி, தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் பெற்ற பிரஜைகளாகிவிட்ட பின்னர், அவர்களுக்கு நினைவாற்றல் இருக்கலாகாது என்று நினைப்பவர்கள்தான் அரசியல்வாதிகள்.

கட்சி விட்டு கட்சி தாவும் தலைவர்களும், புதிய கட்சி தொடங்கி தலைவர்களாகி விடுபவர்களும் கூட நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள விரும்புவதில்லை.

சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய தேர்தல் தொகுதிகளிலிருந்து 12 தமிழ்த்தேசிய பற்றாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானதாகவும், ஆனால் தற்போது அந்தத் தேசியப்பற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து ஆறாகிவிட்டதாகவும் பேசப்படுகிறது.




குறிப்பிட்ட 35 வருடங்களுக்கு முன்னர் "உந்தக் கண்டறியாத ஜனநாயக அகிம்சை அரசியல் எமக்கு சரிவராது, சிங்களவருக்குப் பாடம் கற்பிக்கவேண்டும்." எனச்சொல்லிக்கொண்டு வடக்கில் ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் எத்தனை?

இந்தப்பத்தியில் இடம்பெற்றிருக்கும் இயக்கங்களின் பெயர்ப்பட்டியலைப் பார்க்கவும்.

முப்பத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் பிறந்த குழந்தை தற்போது தேர்தலில் வாக்களிக்கும் உரிமையுடன் நடமாடிக்கொண்டிருக்கிறது.

> □ தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) □ ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் (EROS) □ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) □ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) □ தமிழீழ விடுதலை இராணுவம் (TELA) □ தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) □ தமிழீழ இராணுவம் (TEA) □ புரட்சிகர ஈழ விடுதலை இயக்கம் (RELO) □ தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) □ தமிழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) □ தமிழீழ விடுதலை தீவிரவாதிகள் (TELE) □ தமிழீழ புரட்சி அமைப்பு (TERO) □ தமிழீழ விடுதலை கெரில்லாக்கள் (TELG) □ தமிழீழ செம்படை (RFTE) □ தமிழீழ தேசிய இராணுவம் (TENA) □ தமிழீழ பாதுகாப்பு படை (TEDF) □ தமிழீழ கொரில்லா இராணுவம் (GATE) □ இலங்கை விடுதலை தமிழ் இராணுவம் (IFTA) □ தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் (TERPLA) □ கழுகு படை (EM) □ தமிழீழ விடுதலை நாகம் படை (TELC) □ தமிழீழ கொமாண்டோக்கள் (TEC) – உட்பட பல்வேறு இயக்கங்களும் தனி மனிதர்களும் 'தமிழீழம்' என்ற இலக்கிற்காக 'ஆயுதப் போரைத்' தொடங்கியிருந்தார்கள்.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர், வடக்கில் தற்போது எத்தனை கட்சிகள்? எண்ணிக் கொள்ளுங்கள்:

ஆனந்த சங்கரிக்கு ஒரு கட்சி, சம்பந்தனுக்கு ஒரு கட்சி, விக்னேஸ்வரனுக்கு ஒரு கட்சி, கஜேந்திரகுமாருக்கு ஒரு கட்சி, சிவாஜிலிங்கத்திற்கு ஒரு கட்சி, அனந்தி சசிதரனுக்கு ஒரு கட்சி, டக்ளசுக்கு ஒரு கட்சி, அங்கஜனுக்கு ஒரு கட்சி, வரதராஜப்பெருமாளுக்கு ஒரு கட்சி, முருகேசு சந்திரகுமாருக்கு ஒரு கட்சி, தருமலிங்கம் சித்தார்த்தனுக்கு ஒரு கட்சி, செல்வம் அடைக்கலநாதனுக்கு ஒரு கட்சி, சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு ஒரு கட்சி. இவை தவிர, சில தமிழ் சுயேட்சைக் குழுக்கள்.

இவர்கள் அனைவரது கட்சிகளும் கடந்த தேர்தலில் ஒரு சின்னத்திலோ அல்லது வேறு வேறு சின்னங்களிலோ போட்டியிட்டன.

அன்று ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் இருபதிற்கும் மேல். இன்று ஜனநாயகம் பேசும் கட்சிகள் பத்திற்கும் மேல் !

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் போர்க்காலத்திலேயே தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினை உருவாக்கிக்கொடுத்தார். அவர் இருக்கும் வரையில் கூட்டமைப்பிலிருந்தார்கள். அவருக்காக அல்ல, அவரிடமிருந்த ஆயுதத்திற்காக என்பதும் நகைமுரண். அவர் களத்தைவிட்டு மறைந்த பின்னர், கூட்டமைப்பு கூடிக்கலையும் கூத்தமைப்பாகிவிட்டது.

ஆனால், மக்கள் இவற்றையெல்லாம் - கடந்த காலத்தையெல்லாம் எளிதில் மறந்துவிடுவார்கள் என்ற தைரியத்தில் இந்தத் தலைவர்கள் இருக்கும் வரையில் மக்களால் எதுவும் செய்துவிடமுடியாது.

பன்னிரண்டாக இருந்த ஆசனங்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைந்து கழுதை தேய்ந்து கட்டெறும்பானதற்கு யார் காரணம்..? யார் பொறுப்பு ..?

தமிழ் மக்களா?, அல்லது சிங்களப் பெரும்பான்மையின் இனவாதமா..?

கடந்த 35 வருடங்களுக்கு முன்னரே ஈழத்தமிழ் மக்களின் வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வு தொடங்கிவிட்டது. கனடாவில் மாத்திரம் மூன்று இலட்சத்திற்கு மேல் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வாக்குகளைத் தமிழர் தரப்பு இழந்திருந்தாலும், தேய்ந்து கட்டெறும்பானதற்கு அவர்களைக் குறை கூறமுடியாது.

அவர்கள் கனடா, அமெரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட சில ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து அந்தந்த நாட்டின் மொழியைக் கற்றும் பேசியும் மூன்றாவது தலைமுறையையும் கண்டுவிட்டார்கள். அத்துடன் தேமதுரத்தமிழ் ஓசையை உலகெங்கும் பரப்பியும் வருகிறார்கள்.

சரி, இதுபோகட்டும். அண்மையில் ஒரே சமயத்தில் இரண்டு செய்திகளை வடக்கிலிருந்து அறிய முடிந்தது.

ஒன்று: யாழ்ப்பாணத்திற்குப் பிரதம செயலாளராக சிங்களவரான திரு. சமன் பந்துல சேன, நியமனமாகியிருக்கிறார். அதனைக் கண்டித்து தமிழ்த் தேசியத் தலைவர்கள் தரப்பு அறிக்கை விடுகிறது. அத்துடன் விரைவில் யாழ். அரச அதிபராகவும் சிங்களவரே வரப்போகிறார் என்று ஆரூடமும் கூறுகிறது.

இரண்டு: வடக்கில் ஒரு பிரதேசத்தில் வீடற்ற ஒரு ஏழைக் குடும்பத்திற்கு இராணுவத்தினர் புதிய வீடு ஒன்றைக்கட்டிக்கொடுத்து, இந்து சமய ஆசாரப்படி அந்தக் குடும்பம் குடிமனை புகுவிழா நடத்துவதற்கும் ஆதரவு வழங்கியிருக்கிறது.

ஆனால், இந்தச் செயலை அங்கு எந்தவொரு தமிழ்த்தலைவரும் கண்டிக்கவில்லை. கண்டும் காணாதது போன்று நகர்ந்துவிட்டனர்.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு யாழ். தேவி ரயில் வந்தபோதும் அந்த நிகழ்வையும் வடபகுதியில் தமிழ்த்தேசியம் பேசும் தமிழ்த்தலைவர்கள் புறக்கணித்தனர்.

இவற்றையெல்லாம் அவர்கள் வடக்கின் தமிழர்களுக்கு அதாவது தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நினைவாற்றல் இல்லை என நம்பிக்கொண்டு நடத்தும் அன்றாடக்கூத்து என்றுதான் நாம் அவதானிப்பதா..?

பல வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்திற்கு திரு. லயனல் பெர்னாண்டோ என்பவர் அரசாங்க அதிபராக வந்தபோது, அவரது சேவையை மக்கள் ஒன்று திரண்டு கொண்டாடினர். அவர் கலை, இலக்கிய ஆர்வலராகவும் திகழ்ந்தமையால், தென்னிலங்கையிலிருந்து சிங்கள எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களை வடக்கிற்கு அழைத்துவந்து, அங்கிருந்த இந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடவும், கருத்தரங்குகள் நடத்துவதற்கும் வழிகோலினார்.

அவரது தாயார் சுகவீனமுற்று மறைந்தபோது, எங்கள் மண்ணிலேயே அவரை அடக்கம் செய்யுங்கள் எனச்சொன்ன யாழ்ப்பாண மக்கள் பல நாட்கள் வெள்ளை - கறுப்புக்கொடியுடன் வீதியெங்கும் துக்கம் அனுஷ்டித்தனர்.

லயனல் பெர்ணான்டோவுக்கு முன்னர் 1968 காலப்பகுதியில் யாழ். அரச அதிபராக பணியாற்றிய வேர்ணன் அபயசேகரா என்பவர், மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயபிரவேசப் போராட்டம் வந்த போது, அடிநிலை மக்களுக்காக வாதாடியதுடன் இரண்டு தரப்பினருக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தவும் பாடுபட்டார்.

> **கட்சி விட்டு கட்சி தாவும் தலைவர்களும், புதிய கட்சி தொடங்கி தலைவர்களாகிவிடுபவர்களும் கூட நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள விரும்புவதில்லை.**

அவர் ஏற்கனவே கிழக்கிலும் தமிழ்ப்பிரதேசங்களில் அரச அதிபராக பணியாற்றி மக்களின் மனங்களில் இடம்பெற்றவர்.

இந்த வேர்ணன் அபயசேகரா சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து வந்து இங்குள்ள தமிழ்மக்களுக்காக ஒரு தமிழ் வானொலி நிகழ்ச்சியையும் உருவாக்கித்தந்துள்ளார்.

அவர் அன்று இட்ட அத்திவாரத்தினால், தற்போது பல தமிழ் வானொலிகள் அந்த நாட்டில் இயங்குகின்றன.

தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும் புதிய செயலாளர் திரு. சமன் பந்துல சேன மக்களுடன் பணியாற்றுவதற்கு மொழி இடையூறாக இருக்காது என்று உறுதிமொழி தருகிறார்.

ஏற்கனவே வவுனியாவில் பணியாற்றியிருப்பவர்.

இந்தப்பின்னணிகளுடன் வடக்கின் ஒரு தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர், "இலங்கை அரசு தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையை பயன்படுத்தி, சிங்களவர்களை முக்கிய பதவிகளில் அமர்த்துகிறது" என்று வேறு சொல்கிறார்.

தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைத்தவர்கள் யார்..? கடந்த தேர்தல் காலத்தைத் திரும்பிப்பாருங்கள். எத்தனை தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். எத்தனைபேர் முன்பிருந்த தங்கள் ஆசனத்தை இழந்தார்கள்..? என்பது புரியும்.

நினைவாற்றல் இருந்தால் யாவும் புலப்படும். ■

# என்ன உலகமடா பரமானந்தா?




● தமிழ்க்கவி

‘மன்னாருக் கோச்சியேற மனசு சரியில்ல, என் மனசுக் குகந்த பெண்ணே உன்னை மறக்கமுடியவில்லை’ காதலெண்டா அப்பிடித்தான். தான் நினைச்ச துணைய மறக்கேலாதுதான். ஆனா இப்ப உந்தப் புலுடாக் கதையள் ஒண்டுமில்ல. காதல்தான் கலியாணந்தான். எண்டைக்குக் கப்பும் வளையும் பொறுக்குதோ அண்டைக்கு வீட்டைப்பிரிச்சு கொட்டிப்போட்டு அவையவை பாட்டில போயிரலாம். ஆனாப் பாரடா பொடி! இன்னுஞ்சில பேருக்கு அது விளங்கேல்ல. எடேய் அந்த நாளையில என்ர அப்பு சொல்லுவார்” காதலக்கண்டதார் கத்தரிக்காயக் கண்ட தார் பதினாலு வயசில பத்துவயசுப் பெட்டையக் கொண்டு வந்து வீட்டிலயே விட்டிருக்கிறாங்கள். அது பேந்தப்பேந்த முழுசிக் கொண்டு, வீட்டு வேலையெல்லாஞ் செய்யிது. அவள் மாமிக்காறி எல்லாரும் சாப்பிட்ட பிறகு மிஞ்சிறத அங்கின கறிச்சட்டிக்க போட்டுப்பிரட்டி அந்தப் பெட்டையின்ர கையில குடுக்கிறாள். பாக்கப் பாவமாக்கிடக்கு.”

“ அதாமப்பா முறைப் பொம்பிளையாம் திரும்பி இந்தியாவுக்கு போக முதல் வயதாகிப்போமாம் அதான் மாமியாராக்கள் போன நேரம் அங்கயே செல்லத்தாலிகட்டி சேத்து அனுப்பிப் போட்டினமாம்” அம்மா விளக்கம் சொன்னா.. ‘கிடக்கிறதெல்லாங் கிடக்கட்டும் கிழவனத்தூக்கி மடியில வை’ எண்டானாம். கேளடா கதையநா.. உதை விட்டிட்டு ஒருக்கா சத்திய சோதனைய எடுத்துப் படிச்சுப் பாருங்க.. தெரியும் ஊரெல்லாம் ச்சைக், ஊரெல்லாம் என்ன ஊரெல்லாம் உலகமெல்லாம் போற்றுற மகாத்மா காந்திக்கு எப்ப கலியாணம் நடந்ததெண்டு. ஹிஹி..ஏன் ராஜாஜி.. அவரே சொல்லுறார் அந்தச் சின்னப் பெட்டைய என்ன பாடு படுத்தினன் எண்டு. எட யப்பா பதின்மூண்டு வயசில பிள்ளைப்பெத்தா அதை எப்பிடி வளக்கிறது. அது கிடக்கட்டும் அந்தப்பிள்ளையளின்ர வாழ்க்கை என்ன வாழ்க்கையடா..சிசிக் ஒரு படிப்பு, ஒரு விளையாட்டு ஒரு நாலு நல்லது கெட்டது. பொம்பிளையளுக்கு இந்த இறுக்கந்தான் கண்டியோ பெரிய உடைப்பா எடுத்துது.

எங்க இண்டைக்கு ஏதன் சொல்லட்டன் பாப்பம். பாதிக் கிழவியான பிறகுதான் கலியாணத்துக்கு ஓமெண்ணுற நிலைமையில பெண்டுகள் வந்திட்டினம் எண்டாலும் உந்தக் காதல் மட்டும் பதினாறு வயதில துவங்கீருது. என்ன இல்லையெண்ணப்போறியே? பதினாறு வயசில துவங்கினாத்தானே பிறகு பத்தொன்பதில மற்றது. சரிவராட்டி இருவத்தொண்டில அடுத்தது. ..கூ....ய்.. பொடிப்பிள்ளை உங்களையுஞ் சேத்துத்தான் சொல்லுறன். தனிய பெண்டுகள் பெடிச்சியள் என்னெண்டு காதலிக்கிறது. உங்கட சப்போட்டில்லாம. அந்தநாளையில காதலிச்சாலும் சரி அல்லது கலியாண மேடையிலதான் முதல்முதலா பாத்தாலுஞ் சரி கட்டினா கட்டினதுதான். இப்ப அப்பிடியே கையில ஒரு அண்டர்வேர் போன் இருந்தாக்காணும். என்னது அந்தப்பேர்தானே இழவு வாயில வருதில்ல. சொல்லு என்ன அன்டராய்ட்.டோ ங..அதுதான் அதுதான் பேரே பல்லை உடைக்கிறமாதிரி இருக்கு இதில பொடிபொட்டையள் விடுற சேட்டை வீட்டில உள்ள பெரியவைக்கும் பல்லை உடைக்கிறமாதிரிதான் இருக்கும்.

ஒரு பெட்டை போனில ஒரு நம்பரப் பிடிச்சுக் கதைக்க துவங்கினாள். எதிரில உள்ளவனும் கடலை போட்டான். இது ‘காதல் கோட்டை’ மாதிரி கண்ணால பாக்காம காதலாம். பேச்சா ஒரு ரெண்டு மாசந்தான். பொடியா நம்மாட் டாய் பாலும் பழமும் குடுத்து பன்னீரில குளிப்பாட்டி வைச்ச மூண்டு அண்ணனுக ளுக்கும் தண்ணி காட்டிற்று அவனோட ஊரைவிட்டே போட்டாளடா. எட தாலியக்கட்டுவாள் தாய்தேப்பனோட இருவது வரியம் இருந்தவள். ரெண்டுமாசத்தில காணாத காதலனோட பாஞ்சுட் டாளே. பிரச்சனை ஒண்டுமில்ல அண்ணன்மார் அழுது உக்கிலிட்டுந்தான் பாத்தாங்கள். வீட்ட வர மாட்டனெண்டு போட்டாள். அவன் காதலனைப் பாக்க மாட்டியள். ஒரு நுனிப்பனங்கிழங்கு போல ஒரு வாடல். என்னேயிற. முட்டுப்பட்ட குடும்பம். தங்கைக்காறி வருந்தக்கூடா தெண்டு இப்ப மாப்பிள்ளையையும் சேத்துத் தங்கட ஊருக்கு கொண்டு போயிருக்கிறாங்கள். மெள்ளக் காதைக் கொண்டா சொல்ல, பெடிச்சிக்கு ரெண்டு மாசம் முழுக்கு வரேல்லயாம்.

பின்னச் சொல்லுறாய் இப்ப குடும்பத்தை தாங்கிற பொறுப்பு ஆம்பிளைக் கெண்ணுறியே? கிடையாது. அவன் என்எஸ் கிட்டினன் பாடின மாதிரி ‘காலம்மாறிப் போச்சு அகப்பை கணவன் கையிலாச்சு’ பொம்பிளையளின்ர கையடிச்சுத்தான் கன குடும்பம் வாழுது கண்டியோ. படிச்சுக் கொண்டிருந்த பெட்டைய கூட்டிக் கொண்டு ஓடினவன் அவளின்ர படிப்பைப் பழுதாக்காம

> “அந்தநாளையில காதலிச்சாலும் சரி அல்லது கலியாண மேடையில தான் முதல்முதலா பாத்தாலுஞ் சரி கட்டினா கட்டினதுதான். இப்ப அப்பிடியே கையில ஒரு அண்டர்வேர் போன் இருந்தாக்காணும். என்னது அந்தப்பேர்தானே இழவு வாயில வருதில்ல. சொல்லு என்ன அன்டராய்ட்.டோ ங..அதுதான் அதுதான் பேரே பல்லை உடைக்கிறமாதிரி இருக்கு இதில பொடிபொட்டையள் விடுற சேட்டை வீட்டில உள்ள பெரியவைக்கும் பல்லை உடைக்கிற மாதிரிதான் இருக்கும்.”

கம்பேசு வரைக்கும் கொண்டுபோய் படிக்கவச்சு, இதுக்கிடையில பிறந்த பிள்ளையையும் பூனை குட்டி காவின கணக்கா கொண்டு திரிஞ்சு பாத்து வளத்தான் பாவி. அவா படிச்சு முடிச்சு கவண் மேந்து உத்தியோகம். இப்ப படிக்காத புரியன் தனக்கு கேவலமாமெண்டு எழுத்தை.. கலியாண எழுத்தைத் தள்ளுவிச்சுப் போட்டாளடா. பாவம் பிள்ளையள்தான் ஆளுக்கொரு கன்னையாப் போட்டுதுகள். பெடியனும் குடிச்சு வெறிச்சு திரியாம தன்பாட்டில உழைக்கிறான். காதல் காதலாம் காதல்.

எங்கடா வெளிக்கிடுறா? இரடா கதை சொல்ல. உவன் சின்னக்குட்டியின்ர பேரன் மயில்வாகனத்த தெரியுந்தானே? அவன்ர மேள் எங்கயோ வெளிநாட்டுக் கம்பனியில வேலையாமடா. அங்க வேலைய்யிற பெடியனொருத்தன் வரப்போக இருந்தானேல்லே.. ஙா.. விட்டிராத அவன்தான். அவனிப்ப ராப்பகலா அங்கதானாம் கிடக்கிறான். அவள் தாய்க்காறிதானே அவன்ர சேட்டுக் காச்சட்டையளையும் தோச்சுக் காயப் போடுறாளாம். அ..போடா அவள் சொறுணா கண்ணால பாத்தவளாம். நானும் என்ர துருதுருத்த வாய் கிடக்கமாட்டாமய்க்க அவளைக் கேட்டன் ‘என்னடி கலியாணம் இரகசியமா முடிச்சிட்டியளோ’ எண்டு. பாத்தா அவளும் அந்தப் பெடியனும் சோடியிலதான் கொத்துரொட்டி வாங்கக் கடைக்கு போனதாம் குட்டி சொன்னவன். பிறகு கேக்கயில்லயே .. அதூ..‘லிவிங் ரூ கெதராம்’ இருந்து பாக்கிறதாம் கலியாணந் தேவையெண்டா செய்வினமாம். வேண்டாமெண்டா விட்டிருவினமாம். தூ ‘இரப்பானப்பிடிச்சுதாம் பரப்பிராந்து அதயும் பிடிச்சுதாம் நழலையிச்சனியன்.’ தமிழருக்கு இந்த வாழ்க்கை தேவைதான். நீ என்ன நினைக்கிறியோ தெரியாது. ஆனாச் சொல்லுறன் ‘குலத்தில பிறந்து குரங்காட்டம் ஆடக்கூடாது’ எடேய் அவன் வெள்ளக்காறன் என்னத்தையுஞ் செய்து போட்டுப் போகட்டன். நீ ஆரெண்டத மறந்து போறதே. சும்மா விடு உந்தத் தட்டத்தை ஒருக்கா இஞ்சால தள்ளிவிட் டுப்போ..

# சித்த மருத்துவத்தில் கராம்பு

டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

மனிதனுக்கு நோய் ஏற்படுத்துகின்ற பற்றீரியா (Bacteria), பங்கசு (Fungus), வைரசு, (Virus) ஆகிய நுண்ணங்கிகளுக்கு எதிராகத் தொற்றுநீக்கி மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆய்வானது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்லாது இன்று உலகம் முழுவதிலும் இவ்வாய்வுகள் பரந்து விரிந்து பரவி வளர்ந்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. மூலிகை மருத்துவமானது உலகளாவிய ரீதியிலே Medicine, Natural Medicine, Alternative Medicine என்று பலவித பெயர்களைத் தாங்கிக் கொண்டு பிரபல்யம் அடைந்து வருகின்றது. இந்த வகையில் தமிழர் மருத்துவமாகிய சித்தமருத்துவத் துறையில் வேம்பு, மஞ்சள், அறுகு, உள்ளி, சந்தனம், மரமஞ்சள், மருதோன்றி, வெங்காயம், புங்கு, சாம்பிராணி, பற்படாகம், குங்கிலியம், மிளகு, வெற்றிலை, கோரை, கிராம்பு போன்ற பல்வேறு மூலிகைகள் தொற்று நோய் ஏற்படுத்தும் கிருமிகளுக்கு (Microorganisms) எதிராகத் தொற்று நீக்கி மூலிகைகளாகப் பயன்படுத்தப்படும்.

கிராம்பு கரியோபிலஸ் அரோமற்றிக்கஸ் (Caryophylus aromaticus) எனும் தாவரவியல் பெயரைக் கொண்டதாகவும் மிரிட்டேசியே (Myrtaceae) குடும்பத்தைச் சேர்ந்ததாவும் Clove என்னும் ஆங்கிலப் பெயரைக் கொண்டதாகவும், இலவங்க எனும் வடமொழிப் பெயரைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. அஞ்சுகம், திரளி, வராங்கம், கருவாய், உடற்கடம். சோசம் பேன்ற பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும் கிராம்பானது இந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து காணப்படுகிறது.

கிராம்பினை இரசாயனப் பகுப்பாய்வு செய்யும் போது Eugenol, Eugenitc Caryophyllin Volatile oil, tannic acid, Salicylic acid போன்ற பல்வேறு இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதோடு தொற்று நோய்



களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய சிறப்பான தொற்று நீக்கி (Antiseptic) மூலிகையாகக் காணப்படுகிறது.

கிராம்பானது பசியைத்தூண்டுவதாகவும் (Stomachic), வாயுவை அகற்றுவதுடன் (Carminative), இசிவகற்றியாகவும் (Antispasmodic), நறுமணமூட்டியாகவும் (aromatic), சித்த மருத்துவ உணர்வகற்றியாகவும் (Local Anaesthetic) பயன் படுவதோடு, பல்வலி தணிக்கும் மருந்தாகவும், பற்களில் காணப்படும் பற்றீரியாக்களுக்கு (Bacteria) எதிராகத் தொழிற்படக் கூடியதாகவும் இருப்பதனால் Clogard போன்ற பற்பசைகளில் கிராம்பு சேர்க்கப்படுகிறது, மேலும் கிராம்பானது வாசனைப்பொருளாக சவர்க்காரங்களில் பயன்படுத்தப்படுகிறது. கடுமையான பல்வலி ஏற்படுகின்றபோது பற்சூத்தை உள்ள பல்லின் மீது கிராம்பை வைத்துக் கடிப்பதனால் அல்லது கிராம்பிலிருந்து பெறப்பட்ட தொற்று நீக்கி எண்ணெயைப் (Antiseptic Clove oil) பாதிக்கப்பட்ட பல்லின்மீது வைப்பதன் மூலம் உடனடியாக பல்வலி இல்லாமற் போவதைக் காணக்கூடியதாக இருக்கும். தொண்டையில் ஏற்படும் தொற்று, இருமல், ஆஸ்துமா (Asthma), வயிற்றோட்டம், சிறுநீரகத் தொற்றுக்கள், விடக்கடி சுக்கில நட்டம், சுவாச குழல் அழற்சி (Bronchitis), பாரிச வாதம் (Paralysis), தலைச்சுற்று (Giddiness) தொண்டைப் புண் (sore throat), சமிபாடின்மை (Indigestion), சிபிலிஸ் (Seconary Syphilis), வாத நிலைமைகள் (Rheumatic pains), கிருத்தசி வாதம் (Sciatica), நாரிநோ (Lumbago) போன்ற நிலைமைகளுக்குத் தயாரிக்கப்படும் மருந்துகளில் கிராம்பு சேர்க்கப்படுவது சிறப்பானது.

இலவங்கச் சூரணம் எனும் மூலிகை மருந்தானது சுவாசப்பைக் குழாய் அழற்சி (Bronchitis) நிலைமைகளில் பயன்படுத்தலாம். கிராம்பை நீர்விட்டு மை போல அரைத்து நெற்றியில் தலைப்பாரம், நீரேற்றம் நீங்கும். பல்வலி நிலைமைகளில் மேலைத்தேய மருத்துவரால் பயன்படுத்தப்படும் “டென்ரோ” (Dento Toothache Drops) என்னும் திரவ மருந்தில் மென்தோல் (Menthol) 1% உம், பென் சோகேய்ன் (Benzocaine) 5% 2 கிராம்பு(Clove) 2.5% கறுவா (Cinnamon) 2% உம் Creosore 6.5% உம் , கற்பூரம் (Camphor)போன்றனவும் காணப்படுகின்றது.

எமது தேசத்தின் முதன்மையான மூலவளங்களில் ஒன்றான மூலிகை வளத்தினை விஞ்ஞான இரசாயனப் பகுப்பாய்வுகள் செய்து செயலாற்றல் திறனுள்ள தொற்றுநீக்கி மூலிகை மருந்துகளை உருவாக்குவது அவசர அவசியத் தேவையாக அமைகிறது.

அரச பதிவு இலக்கம் -10,294
கிளவ் வீதி, தெல்லிப்பளை.

இராஜேஸ்கண்ணன்



# அழகாக கதை சொல்லும் அலாதியான படைப்பாளி

## பவளவிழாக் காணும் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் குறித்த ஒரு நுனிப்புல் மேய்ச்சல்

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஆழத் தடம்பதித்த சிறுகதை எழுத்தாளர்களில் குப்பிழான் ஐ.சண்முகன் முதன்மையானவர்களில் ஒருவர். சிறுகதைப் புனைவில் மாத்திரமன்றி கவிதை, திறனாய்வு, சங்கீதம், மாற்று சினிமா, ஆன்மீகம் முதலான விடயங்களில் ஆழ அகலமான தனித்துவத்துடன் கூடிய கண்ணோட்டத்துடன் இயங்கி வருபவர். 1965 இல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவனாக இருந்த காலத்தில் அங்கு வெளியிட்ட கையெழுத்து சஞ்சிகையில் 'தமிழில் திறனாய்வு' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரையுடன் தனது இலக்கியப் பயணம் ஆரம்பமானதெனக் கூறுகின்றார். ஆரம்ப காலங்களில் மல்லிகை, ஈழநாடு, சிரித்திரன், அஞ்சலி, அலை, மங்கை, கற்பகம், வீரகேசரி முதலான சிற்றிதழ்கள், பத்திரிகைகளில் எழுதிவந்த இவர் 1966 இல் 'ராதா' எனும் பத்திரிகையில் 'பசு' எனும் கதையை எழுதியதன் மூலம் அறியப்பட்டவரானார்.

1946 ஆகஸ்ட் முதலாம் திகதியன்று சுன்னாகம் குப்பிழான் எனும் விவசாயக் கிராமத்தில் ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்த இவர், தனது உயர்தர வகுப்புவரை கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வியைக் கற்று வந்தார். ஆரம்பக் கல்வியை குப்பிழான் விக்னேஸ்வர வித்தியாசாலையிலும், இடைநிலையில் சிறிதுகாலம் புன்னாலைக் கட்டுவன் மெதடிஸ்த மிசன் ஆங்கிலப் பாடசாலையிலும், சாதாரணதர, உயர்தரக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்றிருந்தார். கிராமியச் சூழலில் புடம் போடப்பட்ட அவரது இளமைக்காலம் கொழும்பில் ஒரு வருடமும் பேராதனை யில் இரண்டு வருடமுமாக பல்கலைக்கழகக் கல்வி யோடு கழிந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பட்ட தாரியானார். தமிழ், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த கல்விசார் புலமை பெற்றிருந்தார். 1968 இல் உத்தியோகம் பெற்று கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். கல்முனைக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் கல்வி அலுவலகம் என்பவற்றில் பணியாற்றிக்கொண்டிருந்த இவர், 1984 மே மாதம் தொடக்கம் ஆசிரியச் சேவையில் ஆத்ம திருப்தியுடன் பணியாற்றத் தொடங்கினார். திருமணத்தின் பின்னர் வடமராட்சியின் கரணவாய் கிராமத்தில் வாழ்ந்துவரும் இவர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்று, ஓய்வு பெற்ற ஆசிரியையான மனைவி புனிதவதி அவர்களுடன் எளிமையானதும் இயல்பானதுமான வாழ்வு தரும் மகிழ்வுடன் வாழ்ந்துவருகின்றார்.

1975 இல் 'அலை' வெளியீடாக 'கோடுகளும் கோலங்களும்' முதல் சிறுகதைத் தொகுப்பாக வெளியிடப்பட்டது. 1976 இல் அது சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. 1982 இல் 'நர்மதா' வெளியீடாக 'சாதாரணங்களும் அசாதாரணங்களும்' எனும் சிறுகதைத்தொகுதி வெளியானது. தொடர்ந்து 'நிகரி' வெளியீடாக 'அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள்' (2003), 'புதிய தரிசனம்' வெளியீடாக 'உதிரிகளும்' (2006), 'காலச்சுவடு' வெளியீடாக 'ஒரு பாதையின் கதை' (2014), 'சித்தம் அழகியார்' வெளியீடாக 'பிரபஞ்ச சுருதி' (2015), 'ஜீவநதி' வெளியீடாக 'ஒரு தோட்டத்தின் கதை' (2018) ஆகிய நூல்கள் வெளிவந்தன. பிரபஞ்ச சுருதி கவிதை நூல். அறிமுகங்கள்- விமர்சனங்கள்- குறிப்புகள்- பத்தி எழுத்துகளின் தொகுப்பு நூல். ஏனையவை சிறுகதைகள். இந்நூல்கள் குப்பிழான் ஐ.சண்முகனின் பல்துறை அடையாளத்தை காட்டுவன. ஆயினும், சிறுகதை எனும் இலக்கியத் துறையில் அவரது இடம் தனித்துவமானது.

உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் மாவை நித்தியானந்தன், சிலோன் விஜயேந்திரன் போன்றவர்களோடு கூடி 'யாழ் இலக்கியக் கழகம்' என ஓர் அமைப்பின் மூலம் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். பின்னர் அ.யேசுராசா, தில்லைக் கூத்தன், சாந்தன் முதலானவர்களுடன் இணைந்து 'கொழும்பு இலக்கியக் கழகம்' மூலமாக செயற்பட்டு வந்தார். தீவிரமான இலக்கியம் குறித்த கருத்தாடல்களில் அத்தகைய கழகங்களின் செயற்பாடுகள் இவரது இளமைக் காலத்திலேயே சந்தர்ப்பங்களை கொடுத்திருந்தன. இதன் ஓர் அம்சமாகவே 'அலை' சிற்றிதழின் ஆசிரியர்களில் அ.யேசுராசா, ஜீவகாருண்யன், மு.புஸ்பராஜன் ஆகியவர்களுடன் சேர்ந்து இயங்கிய வகையினை குறிப்பிடலாம். 'பிரபஞ்ச சுருதி' எனும் இவரது கவிதைத் தொகுப்புக்கு அணிந்துரை எழுதிய யோகேஸ்வரி சிவப்பிரகாசம் யாழ் இலக்கிய நண்பர்கள் கழகத்திலும், இலங்கை வானொலி இளைஞர் மன்றத்திலும் முகிழ்நிலை எழுத்தாளர்களாக சண்முகன் உட்பட தாம் பலரும் வ.இராசையா அவர்களின் வழிகாட்டலில் இயங்கிய அனுபவங்களையும் கூறுகின்றார். ஒரு படைப்பாளின் கருத்து நிலை மற்றும் படைப்பாக்க கொள்கை உருவாக்கத்தில் அத்தகைய கழகநிலைப்பட்ட அல்லது இயக்கநிலைப்பட்ட செயற்பாடுகள் முக்கியமான பங்கு வகிப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

படைப்பாக்க கொள்கையில் படைப்பின் அரசியலிலும் முதன்மையானது அதன் அழகியலே என்பதற்கு முதன்மையளித்து இன்றுவரை கலை நேர்த்திமிக்க படைப்புகளை தொடர்ந்து தந்துகொண்டிருப்பவர். தன் அழகியல் சிரத்தையால், படைப்பின் வெற்றி படைப்புகளின் அளவினால் கணிக்கப்படுவதில்லை என்று வலுவாக நம்புபவர். படைப்பின் அழகியல் மொழிவழி வசமாக்கப்படும்போதுதான் படைப்பு நின்றுநிலைக்கும் எனும் கருத்துடையவர். புறவுலக சித்திரிப்புகளைக் காட்டிலும் அகவுலகத் தேடல்களே படைப்பின் பயனாக விரிவுபெற வேண்டும் என்பதில் நுணுக்கமான பார்வை உடையவர். இவரது படைப்புகள் பற்றிய மதிப்பீடுகள் பலவும் இதனையே சாரமாக சொல்கின்றன. எழுத்தாளர் மு.புஸ்பராஜன் 'சண்முகன் என்ற பெயர் குறிப்பிடப்படும் போதெல்லாம் இவரது அழகிய அலாதியான அந்த நடை கூடவே எழுவதைத் தவிர்க்க முடியாது. இவர் கதைகளில் சங்கீதத்தின் இனிய ஓசை பல்வேறு விதங்களில் கேட்டுக் கொண்டிருக்கிறது' என்று கூறுவார். எழுத்தாளர் குந்தவை 'இளைஞர்களின் மன அவசங்கள்-அவர்களால் வெளிப்படுத்தி உணர்த்திக் காட்ட முடியாத சோகங்கள்- எதிர்பார்ப்புகள் இவற்றினால் அவர்களிடையே எழும் நடைமுறைக்கு ஒத்துப்போகாத பிடிப்பற்ற தன்மை, இவற்றை அழகுணர்ச்சியுடன் சித்திரிக்கும் கலைஞர்' என்று குறிப்பிடுகின்றார். கருணை யோகன் என அறியப்பட்ட செ.யோகராசா அவர்கள் 'இவரது பாத்திரங்கள் எழுத்தாளனின் எந்தவித தலையீடுமின்றி தங்களைத் தாங்களே இயங்க வைக்கின்றன' என்றார். எழுத்தாளர் அ.யேசுராசா 'கலையுலகின் நவீன திரைப்படங்களின் தாக்கத்தை சண்முகனின் பிற்பட்டகாலக் கதைகளில் காணலாம். பளிச் பளிச்சென சண்முகன் கதையை நடத்திச் செல்லும் பாணி அலாதியானது' என்று விதந்துரைக்கிறார். குப்பிழான் ஐ.சண்முகன் பற்றிய மூத்த எழுத்தாளர்களின் இத்தகைய கணிப்பையே இன்று எழுதிக் கொண்டிருக்கும் இளந்தலைமுறை எழுத்தாளர்களும் கொண்டுள்ளனர். 'மொழிக்கும் வடிவத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அழகியலை முன்னிலைப் படுத்தும் படைப்பாளிகளில் ஒருவராக குப்பிழான் ஐ.சண்முகன் இருக்கிறார். தனிமனித உறவுகளையும் உறவுச் சிக்கல்களையும், அக உலகையும் பேசுவதிலும் அதற்கான கவித்துவமான மொழிநடையைக் கையாண்டு அழகியல் ரீதியாக ஓர் இலக்கியச் செல்நெறியை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும் திகழ்கிறார் என்று அருண்மொழிவர்மன் முன்வைக்கும் மதிப்பீடுமுக்கியமானது. 'ஈழத்தின் மூத்த கதைசொல்லிகளில் ஒருவரான குப்பிழான் ஐ.சண்முகன் திரைமொழி, ஒளிப்பதிவு பற்றிய பிரக்ஞை உள்ளவர். இவரது அனேகமான கதைகளில் அவர் காட்சிகளை தேர்ந்த ஒளிப்பதிவாளர் நகர்த்துவது போல் நகர்த்தியிருப்பதை அவதானிக்க இயலும்' என்று அனோஜன் பாலகிருஷ்ணன் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது. இங்கு குறிப்பிட்ட மதிப்பீடுகள் யாவும் சண்முகன் அவர்களின் படைப்பாக்க கருத்து நிலை பற்றிய கால முழுமைக்குமான கருத்துநிலையின் மதிப்பீடாகவே அமைந்துள்ளன.

மிக மிருதுவான ஊடாடல் கொண்ட சண்முகன் அவர்கள் தன்னோடு பழகுபவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தாது கருத்துப் பகிரும் பக்குவம் மிக்கவர். தான் கொண்ட படைப்பாக்க கொள்கைகள் மற்றும் கருத்து நிலைகளை சமரசம் செய்து கொள்ளாத போதிலும் தன்னிலும் வயதில் குறைந்தவர்களின் தொடர்பிலும் மிகுந்த நாகரிகத்தையும் கண்ணியத்தையும் கடைப்பிடிப்பவர். அவரது அறிமுகங்கள் - விமர்சனங்கள் - குறிப்புகள் எனும் நூலில் வந்துள்ள பத்திகளை படிக்கும் போது இது நன்கு புலப்படும். மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளிலுள்ள நலிவை வெளிப்படையாக விமர் சிக்கும் அதேவேளை இளைய படைப்பாளிகளின் சிறப்புக்களை மனந்திறந்து பாராட்டுகின்ற பக்குவம் விரவிக்கிடக்கக் காணலாம்.

பவளவிழாக் காணுகின்ற குப்பிழான் ஐ.சண்முகன் அவர்களின் படைப்புகள் தொடர்பில் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் தங்கள் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களுக்கான ஆய்வுகளை வரையறுத்த அளவில் செய்துள்ளனர். எனினும், அவரது படைப்புகள் குறித்து விரிவான ஆய்வு நோக்கிலான எழுத்துக்கள் இன்னும் வெளிவரவேண்டிய தேவை உள்ளது. படைப்பாளிகளை அவர்கள் வாழும் காலத்திலேயே கொண்டாடுதல் என்னும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெடுப்புகளில் இந்தச் சிறு பதிவும் ஒன்றாகின்றது. இந்தப் பதிவில் சண்முகனது படைப்புக்கள் குறித்து விரிவான குறிப்புகள் வந்துசேரவில்லை. பதிவுகள் அவ்வப்போது அவர்களை நினைக்க வைக்குமே ஒழிய ஆய்வுகளைப் போல காலநீட்சிக்கும் அவர்களது பெருமையை நிலைநிறுத்தாது. இதனால் குப்பிழான் ஐ.சண்முகனது படைப்புகள் குறித்து விரிவான ஆய்வுகள் வெளிவரவேண்டிய தேவை உள்ளது என்பது உணரப்படலாம். ■



தரிசனன்

# நிலைக்கண்ணாடி

## விம்பம் - 08



# நடைமுறை வாழ்க்கையும் அன்பாயிருத்தலும்

மனித வாழ்க்கையை அழகுபடுத்துவதிலும் அர்த்தமுள்ளதாக்குவதிலும் சில அவசியமான அடிப்படைப் பண்புகள் உள்ளன. யாராயிருப்பினும் அவர் எந்த நிலையிலிருப்பினும், அடிப்படை இயல்புகளைப் புறந்தள்ளி வாழும் வாழ்க்கை உயிரற்ற யந்திரீகமான ஒன்றாகவே இருக்க முடியும். அத்தகைய அடிப்படை இயல்புகளிலொன்றே அன்பு செய் தல் எனும் தொழிற்பாடு ஆகும். அந்த அன்பு என்னும் இவ் அன்பு செய்தல் அனைத்து உயிர்களிடையிலும் ஒரு பிணைப்புச் சக்தியாய் இயங்கிக் கொண்டிருக்கி றது. ஆறறிவு மானுடமும் அதனைக் கொண்டாடி மகிழ்கிறது. அதே போல் ஐந்தறிவு உயிர்களும் தம்மிடையே அந்த உணர்வைக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களுக்குக் கூட அன்பை உணரும் இயல்பு உண்டென மனித அறிவியல் கண்டறிந்து வெளிப்படுத்தியிருக்கிறது. நாம் வளர்க்கும் நாய்க்குட்டி நாம் காட்டும் அன்பை மகிழ்ந்து ஏற்பதும், பதிலுக்குத் தனது அன்பை வெளிக்காட்டிக் கொண்டாடுவதும் நாம் நேரில் காணுகின்ற அன்பு சார்ந்த அனுபவம் ஆகும். அதே போல் அன்பை வெளிக்காட்டும் வகையிலான எமது நடவடிக்கைகளை ஒரு செடி உணர்ந்து கொள்வதும் அதற்கேற்ப எதிர் வினைகளை வெளிக்காட்டுவதும் சாத்தியமான ஒன்று என்பதை விஞ்ஞானிகள் நிறுபித்திருக்கிறார்கள்.

இதிலிருந்து நாம் அறிவதென்ன? அன்பு என்னும் உள்ளார்ந்த உணர்வு உயிர் கொண்ட அனைத்தையும் தொடவல்லது என்பதையும் ஏதோ ஒரு வகையில் யாவுமே அன்பின் தேவையைக் கொண்டிருக்கின்றன என்பதைத்தானே - இதனைப் புரிந்து கொள்கின்ற நாம் நம்மையொத்த மனிதர்களின் அன்பின் தேவையை எவ்வளவு ஆழமாக உணரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

எமது சூழலில் நிலைத்திருக்கின்ற சொந்தங்கள் அனைத்தும் அன்போடு வாழ்கின்ற ஒரு பொதுத் தன்மையை கொண்டிருப்பதை நாம் நேரிற் காண்கிறோம். அதிலொரு புதுமையும் இல்லை. தாயும் தந்தையும் பிள்ளையும் சகோதரரும் அன்பின் பெயரால் இணங்கி இனிதே வாழ்வதென்பதும் நாம் அறியாத தல்ல. ஆனால் அந்த அன்பைப் பரிமாறிக் கொள்வதும்- தருவதும் - பெறுவதும் தேவையான விதத்தில் தேவையான நேரத்தில் சரியான முறையில் பரிமாறிக் கொள்ள முடிகிறதா? என்பதே இங்கு பிரதானமான கேள்வியாகின்றது.

எமது நேசத்துக்குரியவர்களுடன் எப்போதுமே அன்புணர்வுடன் நடந்து கொள்கிறோமோ? அதாவது அன்புக்குப் பாத்திரமான ஒருவரின் கஸ்டத்தில், அவரின் துயரில் எவ்வளவு தூரம் நாம் பங்குடையவராக இருக்கிறோம். அவர் தனது கஸ்டங்களை மறந்து வாழக்கூடிய ஆற்றுப்படுத்தலை எமது அன்பின் மூலம் செய்கி றோமோ? என்பதனை நாம் சற்று சிந்திக்க வேண்டும். அதேபோல எமக்கு உவப்பில்லாத ஒரு செயலை எமது நேசத்திற்குரியவர்கள் செய்யும் போது அவரை எவ்வாறு நாம் எதிர்கொள்கின்றோம். எமது அன்பின் நிமிர்த்தம் அவரை மன்னிக்கின்றோமா? அல்லது அவரை அன்பு காட்டுதல் மூலம் வழிப்படுத்த முனைகின்றோமா? என்ப தனை ஆழமாக சிந்தித்தால் அன்பால் எவற்றினை யெல்லாம் செய்ய முடியும் என்று புரிந்து கொள்ள முடியும்.

அதே வேளை ஒரு குறித்த நிலையில் ஒரு குறித்த நபர் ஒரு குறித்த விடயம் தொடர்பாக அப்படித்தான் நடந்து கொள்ள முடியும் என்ற புரிதலோடு நாம் அனுகியது உண்டா? எமக்குச் சௌகரிய மாக உள்ள சந்தர்ப்பங்களில் ஒருவரை மன்னித்துக் கொள் ளவோ புரிந்து கொண்டு நடத்தவோ தயாராக உள்ளோம் ஆனால் சில பொழுதுகளில் அவற்றினை உதறித்தள்ளி பிறரை பிறரை துன்புறுத்த முனைகிறோம். உண்மையான அன்பு எவரையும் துன்புறுத்தாதது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதானமாக செயற்பட முனைப்புக் கொள்ள வேண்டும். உண்மையான அன்பு நிதானத்தினை ஏற்படுத்தக் கூடியது.

இந்த இடத்தில்தான் அன்பு காட்டுதல் என்ற செயற்பாட்டுக்கும் அடிப்படையில் ஒரு அறிவு சார்ந்த விழிப்பு நிலை வேண்டப்படுவதை உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாகிறோம். நமது வீடுகளில் நம்மோடு வாழ்கின்ற வயோதிபரான தாத்தாவோ பாட்டியோ நமது அன்பிலோ பரிவிலோ தங்கியிருப்பர் எனில் அங்கு நமது அன்பு புரிதலுடனும் பொறுமையுடனும் தொழிற்பட வேண்டிய தேவை இருக்கிறது. உதவி பெறும் நிலையில் உள்ளவர்களது உள நிலையைப் புரிந்து கொள்ள எமது உறவாக உள்ளவர்கள் தயாராக இருக்க வேண்டும். அன்பு தொழிற்பட வேண்டும். அன்பு செலுத்தப் பழக வேண்டும். இந்த அடிப்படையில் தான் அன்பு என்பது அமைதியையும் சமாதானத்தினையும் வாழ்வினையும் கட்டியெழுப்புவதற்கு பெருந்துணையாக அமைகிறது. அன்பு செய்வோம். ■

---

பா.ரஞ்சித்தின்

## சார்பட்டா பரம்பரை:

# தலித் சினிமாவிலிருந்து விளிம்புநிலை நோக்கி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பட்டார்கள். அவையெல்லாம் தமிழ்நாட்டின் நிலவுடைமைச் சாதிகளில் ஒன்றைக் குறிப்பிட்ட வட்டாரத்தின் முழு அடையாளமாக மாற்றிக் கட்டமைத்தன. அதன் தொடர்ச்சியாகப் பா. ரஞ்சித்தின் அட்டைக்கத்தியும் மெட்ராஸும் சென்னைப் புறநகர் சினிமாக்கள் என்ற வெளிசார் அடையாளத்தோடு/ நிலவியல் வட்டாரத்தோடு வெளிவந்தன. இந்நிலவியல் பின்னணிக்குக் குறிப்பான நிலவுடைமைச்சாதி அடையாளம் கிடையாது. அதற்குப் பதிலாகச் சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும், தூரத்து மாவட்டங்களிலிருந்தும் சென்னைக்குக் குடிபெயர்ந்த உதிரித் தொழிலாளிகளின் கலவையான அடையாளம் உண்டு. உதிரித் தொழிலாளர்களின் கலவையான அடையாளத்தை - தலித் அடையாளத் திரட்சியாக்கியது தமிழகத் தேர்தல் அரசியல்.

சாதியப்படிநிலைகள் மற்றும் ஒடுக்குதலை விவாதப்பொருளாக்கிய தலித் அரசியல் பின்னணியைப் பொதுப்பரப்பாகவும், அதிலிருந்து விடுபட நினைக்கும் புதிய தலைமுறை இளைஞர்களைக் குறிப்பான பாத்திரங்களாக்கியும் அவரின் முதலிரண்டு படங்களும் வெளிப்பட்டன. அவ்வெளிப்பாட்டில் சென்னையின் விளிம்புநிலை மக்களின் விளையாட்டுகள், திருமணச் சடங்குகள், உணவுமுறைகள், மதுபான விருப்பங்கள், வாசகசாலை முயற்சிகள் போன்ற வெளிசார் அடையாளங்களின் மீது ஈர்ப்புகளும், சாதிசார்ந்த ஒடுக்குமுறைக்கெதிரான மனக்குமுறல்களும் இருந்தன. திரும்பத்திரும்ப அங்கேயே சுற்றிச்சுழல வேண்டியதன் மீது அதிருப்தியும் இருப்பதாக அவை காட்டின. தங்களின் இரட்சகர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்ட உள்ளூர்த் தலைமைகளின் மீது அதிருப்தி இருப்பதையும் அவை சொல்லத் தவறவில்லை. இந்த வித்தியாசமான கவனப்படுத்துதல்கள் வழியாகவே இயக்குநரின் அடையாளம் உருவாகியது. தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பின் அவர் வழக்கமான சூத்திரத்தை இயக்கும் இயக்குநராக மாறினார், மாற்றப்பட்டார். நட்சத்திர நடிகர் ரஜினிகாந்தை மையமாக்கி, அநீதிகளை எதிர்க்கும் வழக்கமான வணிகவெற்றிச் சூத்திரத்தின் வெளிப்பாடுகளாகக் கபாலியையும் காலாவையும் தந்தார். இவ்விரண்டிலும்கூட 'புதிய வெளிகள், ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து ஒரு நாயகன்' என்ற அவரது அடையாளங்கள் தொடரவே செய்தன.

**கவனிக்கத்தக்க திருப்பம்**

பா.ரஞ்சித்தின் இயக்குநர் பயணத்தில், சார்பட்டா பரம்பரை இன்னொரு திருப்பம். இத்திருப்பத்தில் அவர் முழுமையான இயக்குநர் சினிமாவைத் தருபவராக மாறியிருக்கிறார். சார்பட்டா பரம்பரை, இடியாப்ப நாயகர் பரம்பரை என்ற இரண்டு குத்துச்சண்டைக் குழுக்களின் போட்டி, வெல்வதன் மூலம் நிலைப்படுத்திக்கொள்ளல் என்ற முரண் உருவாக்கப்பட்டாலும், முழுமையாக இருநிலை எதிர்வுக் கதைப்பின்னல் இல்லை. அதேபோல் ஆரம்பம், முரண், சிக்கல்கள், உச்சநிலை என்ற நாடகக் கட்டமைப்புக்குப் பதிலாக, இரட்டை உச்சநிலை கொண்ட கதைப்பின்னலை முன் வைத்துள்ளார். ரங்கன் வாத்தியாரின் சார்பட்டா பரம்பரையின் சார்பாகக் களமிறங்கத் தயாரிக்கப்படும் கபிலனின் முதல் வெற்றி ரோஸை (டான்சிங்) வீழ்த்துவதில் வெளிப்படுகிறது. அதன் தொடர்ச்சியில் திரும்பவும் ரங்கன் வாத்தியார் அரசியல் சார்பு காரணமாகச் சிறைக்குப் போகும்போது சார்பட்டா பரம்பரை திரும்பவும் வீழ்ச்சியைச் சந்திக்கிறது. அந்த வீழ்ச்சியின் எழுச்சியின் உச்சமாக வேம்புலியை வீழ்த்துவதற்குத் தயாராவது அமைக்கப்பட்டுள்ளது. நாயகனின் எழுச்சி, எழுச்சி என நகரும் வணிக சினிமாவில் 'வீழ்ச்சியும் எழுச்சியும்' என்பது இன்னொரு புதுமை.

மையப் பாத்திரத்தின் வீழ்ச்சியின் பின்னணியில் இருப்பது சார்பட்டா பரம்பரையின் வீழ்ச்சி மட்டுமல்ல தமிழ்நாட்டு அரசியல் மாற்றமும் என்பதாகப் பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. தந்தையால் குத்துச்சண்டையில் வாய்ப்புக் கிடைக்காத நிலையில் அரசியல் ஈடுபாட்டால் தந்தையின் எதிர்த்தரப்பு அரசியல்வாதியாகிறான் மகன். அந்த அரசியல் அவனையும் அவன் சார்ந்த திரளையும் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களாக மாற்றுகிறது. இந்தியாவில் திருமதி இந்திரா காந்தியால் அறிவிக்கப்பட்ட அவசரநிலை, அதனை எதிர்த்த கலைஞர் மு.கருணாநிதி அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சிக்கலைப்பு, தொடர் கைதுகள், வாக்காளர்கள் மொத்தமாக மாறுதல், திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து புதிய கட்சியாக எம்.ஜி.ராமச்சந்திரனின் அ.தி.மு.க. உருவாக்கம் என அனைத்தும் சின்னச்சின்னக் காட்சிப்படுத்தலின் வழி விரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சிப்படுத்தல்கள் ஒவ்வொன்றும் இயக்குநர் பா. ரஞ்சித்தின் சினிமா மொழியின் தேர்ச்சியைக் காட்டக் கூடியனவாக இருக்கின்றன. அத்தோடு எப்போதும் நாயகன், வில்லன் என்ற இரட்டை எதிர்வுக் கட்டமைப்புகொண்ட கதைப் பின்னலுக்குப் பதிலாக தனித்தனிப் பாத்திரங்களையும் முழுமையான பாத்திரங்களாக உருவாக்கியிருப்பதும் பொருத்தமான நடிப்பைக் கொண்டு வருவதில் காட்டியுள்ள அக்கறையும் இயக்குநரின் சவாலான பணிகள். அதனையும் பிசிறில்லாமல் செய்திருக்கிறார் இயக்குநர்.

நடிப்பின் ருசியறிந்த பசுபதி, ஜி.எம்.குமார், ஜான் விஜய், சபீர், கலையரசன் போன்றவர்களின் நடிப்பும் உடல் மொழியும் பொருந்திப் போவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இதுவரை உடல்மொழியை அதிகம் பயன்படுத்தாத ஆர்யாவின் உடல்மொழியையும் குரலையும் மாற்றிக் காட்டியிருப்பதும், பெண் கதாபாத்திரங்களுக்கு அதிகம் வாய்ப்பில்லாத சினிமாவில் இரண்டு இளம் மனைவிகள், ஒரு தாய் என மூன்று பாத்திரங்களின் வார்ப்பும் அதனை ஏற்று நடிக்க அதிகமும் அறியப்படாத நடிகைகளையும் தேர்வுசெய்ததும் இயக்குநரின் நம்பிக்கை சார்ந்த ஒன்றே. நடிக முகங்களுக்காகப் படம் பார்க்க வரும் ரசிகர்களின் ரசனையை மாற்றிக் காட்ட முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டுள்ள இயக்குநர் பா. ரஞ்சித், தனது கதைத்தேர்வு, திரைக்கதையாக்கம், நடிப்புக்கலையின் ஆழம், அதன் வழியாக கடத்தப்படும் உணர்வுகள் ஆகியவற்றை முழுமையாக நம்பிச் செயல்பட்டுள்ளார். பாராட்ட வேண்டிய திசைமாற்றம் இது.

பெரிதும் காட்சிக்கலையாகவும் கேட்புக்கலையாகவும் மட்டும் கருதப்படும் சினிமாவை மற்றைய புலன்களுக்கும் உரிய நுண் உணர்வுகளைத் தூண்டி, விளிம்புநிலை மனிதர்களின் இருப்பு, குடும்பவெளியில் உறவுகளிடையே வெளிப்படும் இயல்பான அன்பு, உடைமை மனநிலை போன்றவற்றோடு பொதுவெளியில் ஏற்படக்கூடிய நட்பு, நெருக்கம், போட்டி, வெல்லவேண்டிய தேவை எனக் கலவையான உணர்வுகளைக் கச்சிதமாகத் தந்ததன் மூலம் சிறப்பானதொரு சினிமாவாகச் சார்பட்டா பரம்பரையை நிறுத்தியதின் மூலம், அதன் இயக்குநர் பா.ரஞ்சித் கொண்டாடத்தக்க இயக்குநராக மாறியிருக்கிறார். ■



# நீதிக்கான எழுச்சியை புரிந்து கொள்ளாத தலைவர்கள்

தாமிரன்

**புழுதிப் படுக்கையில்**
**புதைந்த எம் மக்களைப்**
**போற்றும் இரங்கற்**
**புகழ்மொழி இல்லை**
**பழுதில்லா அவர்க்கோர்**
**கல்லறை இல்லை**
**பரிந்தவர் நினைவுநாள்**
**பகருவார் இல்லை**

**ஊனையும் உடலையும்**
**ஊட்டி இம் மண்ணை**
**உயிர்த்த வர்க்(கு) இங்கே**
**உளங் கசிந் தன்பும்**
**பூணுவாரில்லை- அப்**
**புதைமேட்டிலோர் -கானகப்**
**பூவைப் பறித்துப்**
**போடுவர்ரில்லையே.**

**ஆழப் புதைந்த**
**தேயிலைச் செடியின்**
**அடியிற் புதைந்த**
**அப்பனின் சிதைமேல்**
**ஏழை மகனும்**
**ஏறி மிதித்து**
**இங்கெவர் வாழவோ**
**தன்னுயிர் தருவன்.**

**என்னே மனிதர்**
**இவரே இறந்தார்க்கு**
**இங்கோர் கல்லறை**
**எடுத்திலர்! வெட்கம்.**
**தன்னை மறைக்கத்**
**தானோ அவ்விறைவனும்**
**தளிர் பசும் புல்லால்**
**தரை மறைத்தனனோ!**

இது சி.வி வேலுப்பிள்ளையின் கவிதை. 1954 இல் 'in Ceylon's tea garden' என்னும் தொகுப்பில் இக் கவிதை வெளிவந்திருந்தது. இதனை சக்தி அ. பாலையா "தேயிலைத் தோட்டத்திலே" என 1969 ஆம் ஆண்டு மொழிபெயர்த்திருந்தார். இந்தக் கவிதை வெளிவந்து ஏறத்தாழ 67 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் இந்தக் கவிதையில் வெளிப்படுகின்ற துயர் இன்னும் மலையக மக்களின் வாழ்வில் படிந்திருப்பதையே காணமுடிகின்றது. கடவுளாலும் கைவிடப்பட்ட மக்களாக மலையக மக்கள் ஆகிவிட்டதன் வலியை சி.வி வேலுப்பிள்ளை வெளிப்படுத்தியிருக்கின்றார். இங்குள்ள எவரெவரோவெல்லாம் வசதி வாய்ப்புக்களோடு வாழ்வதற்காக மலையக தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் உயிரைக் கொடுத்து உழைக்கின்றார்கள். அந்த மக்களின் உழைப்பைச் சுரண்டி வாழுகின்றவர்கள் அவர்களின் துயரத்தைத் துடைப்பதற்கு தயாராக இல்லை. கால காலமாகத் தொடரும் இந்தத் துயரில் இருந்து மக்கள் வெளிவருவதற்குப் படாத பாடுபடுகின்றார்கள். அவர்களின் துயரமும், துயரத்தின் குரலும் மலையகத்தைத் தாண்டி வெளிவருவது இல்லை. மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைவர்களும் வாக்கினை ஈட்டுவதற்கான இயந்திரங்களாகவே இந்த மக்களைப் பயன்படுத்துகின்றனர். மலையக மக்களிடம் இன்று ஓரளவுக்கு விழிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் போராட்டங்களைச் சுயமாக முன்னெடுக்கின்றார்கள். எனினும் அவர்களது போராட்டங்கள் இன்னும் திரண்ட வடிவமாக எழுச்சி கொள்ளவில்லை. மலையக அரசியல் தலைமைகள், ஆளும் அரசுகளோடு கூட்டுச் சேர்வதிலும் தமக்கான நலன்களைப் பெற்றுக் கொள்வதிலுமே பெரிதும் கரிசனையோடு இருக்கின்றன. மக்களது போராட்டங்களை ஒழுங்கமைத்து அதன் ஊடாக அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு முனைப்புக் கொள்வதில்லை. இது வடக்குக் கிழக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாட்டை ஒத்த நிலையிலேயே மலையக அரசியல் கட்சிகளும் செயற்படுகின்றன என்பதனை வெளிப்படுத்துகிறது. மலையக அரசியலைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான அறிவுபூர்வமான அரசியல் தலைமைகள் இன்னும் உருவாகவில்லை என்றே சொல்ல வேண்டும். வெறும் ஊடகங்களுக்குக் குரல் கொடுக்கின்ற அரசியல் தலைவர்களாக அவர்கள் உருவாகி வளர்ந்து வருகின்றார்கள். அனர்த்தங்களின் போதும் இடர்களின் போதும் தோட்டத் தொழிலாளர்களைக் கண்டு கொள்ளாதவர்கள் தேர்தல் காலங்களில் மட்டும் அவர்களைச் சந்திக்கின்றனர். அப்போது அவர்களின் இடர்களைக் களைவதாக வாக்குறுதி அளிக்கின்றனர். வென்றபின் மக்களைக் கைவிட்டுத் தங்கள் நலன்களில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். இதுதான் மலையகத்தில் காலங் காலமாகத் தொடர்கின்ற நிலைமையாக இருக்கிறது.

ஹிஷாலினியின் மரணம் இன்று நாடு பூராகவும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது. இம் மரணம் தொடர்பில் பேசுபவர்களில் அநேகர் அச்சிறுமியின் குடும்ப வறுமையையே காரணமாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்த மரணத்திற்குப் பின்னால் மலையக அரசியலின் கையாலாகாத்தனமும் ஆளும் அரசுகளின் கையாலாகாத்தனமும் இருக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகக் காணப்படுகின்ற மக்கள் கூட்டம் வறுமையின் பிடியில் இன்னும் இருக்கின்றது என்றால் அந்த மக்களின் உழைப்பின் பெறுமதிதான் என்ன? பிறருக்காக உழைக்கப் பிறந்தவர்களா? இவர்கள் என்பதான கேள்வி முக்கியமானது. நீண்ட காலமாக பிறருக்காக உழைத்து அன்றாடம் தமது வாழ்தலுக்காகப் போராடும் நிலைமை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உயர்வுக்கான பொறிமுறைகளை அரசு எடுக்கவில்லை என்பதையே புலப்படுத்துகிறது. மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் மேம்படுத்தப்படவில்லை என்றால் அந் நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடு என்றோ அடைந்து வருகின்ற நாடு என்றோ சொல்ல முடியாது. அதை அபிவிருத்தியின் சுவட்டைக்கூட அடையாத நாடு என்றுதான் கொள்ள வேண்டும். வானுயர்ந்த கோபுரங்களும் காபெற் வீதிகளும் நாட்டின் அபிவிருத்தியைக் காட்டாது என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வை இந்த அரசாங்கம் அறிவித்த பின்னரும் முதலாளிமார் சம்மேளனங்கள் நடந்துகொள்ளும் விதம். ஆயிரம் ரூபா சம்பளத்தை முழுமையாகப் பெறமுடியாத நிலையும் அல்லது முன்னர் பெற்ற சம்பளத்திலும் குறைந்த சம்பளத்தையே பெறும் நிலையிலுமே மலையக மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டங்களில் கலந்து கொள்ளும் மலையக அரசியல் தலைவர்கள் மக்கள் இன்னும் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ஊடகங்களில் வெளிப்படையாகச் சொல்லுகின்றார்கள். அத்தகைய போராட்டங்களில் தங்களின் பங்களிப்பு என்ன என்பது பற்றியோ, அதன் மூலம் தாங்கள் இந்த மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுக்கப் போகிறோம் என்பது பற்றியோ தெளிவுபடுத்துவதில்லை. இங்கு முக்கியமான கேள்வி என்னவென்றால் அரசியல் தலைவர்களாக இருக்கின்றவர்கள் இம் மக்களின் வாழ்வினை மேம்படுத்த என்ன செய்தார்கள்? என்பதுதான் அரசில் அங்கம் வகித்துக்கொண்டு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை முறையான விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு எந்தளவுக்கு முயற்சிக்கிறார்கள்? அரசோடு முரண்படாது நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் தலைமைகள் முயலும் நிலையில் மக்களைக் கைவிட்ட நிலைமைதான் இன்னும் தொடர்கின்றது.

மலையக தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களது வறுமைதான் பிரதானமான பிரச்சினையாக இருக்கின்றது. அவர்களின் அடிப்படைத் தேவைகள் கூட உரிய விதத்தில் பூர்த்தி செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது. ஹிஷாலினி போன்ற சிறுவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்வதற்கு இதுதான் பிரதான காரணம். அடிப்படை வாழ்க்கையைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் உரிய விதத்தில் முன்னெடுக்கப்படுகின்ற போதே இத்தகைய மரணங்களைத் தடுக்க முடியும். நாட்டில் சிறுவர்கள் மீதான கரிசனை எழுவதற்கு ஹிஷாலினி போன்றவர்களின் மரணங்களே தேவையாக இருப்பதுதான் மிகவும் வேதனைக்குரியது.

ஹிஷாலினியின் மரணத்தை அரசியல்வாதிகள் அணுகுவதற்கும் சமூகச்செயற்பாட்டாளர்கள் அணுகுவதற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. அரசியல்வாதிகளின் அணுகுமுறை என்பது ஒரு செயலூக்கமுள்ள அணுகுமுறையாக இருக்காது. அது கட்சி, தனிநபர் நலன்களை முன்னிலைப்படுத்தியதாகவே அமைந்துவிடும். மலையகத்தைப் பொறுத்தவரை செயலூக்கமுள்ள அரசியல் கட்சிகள் உள்ளனவா? என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. அவை செயலூக்கமுள்ளவையாக இருந்திருந்தால் மலையக மக்களின் பிரச்சினைகளில் கணிசமானவை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான பிரச்சினைகள் ஆரம்பத் தீர்வுகளைக் கூட எட்ட முடியாத நிலையில்த்தான் இருக்கின்றன. மலையகத்தைப் பொறுத்தவரையில் புதிய அரசியல் எழுச்சி என்பது தேவையானதாக இருக்கின்றது. அது சாத்தியமாகும் போதே மலையக மக்களினது பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படும்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறிய கூற்று சமூக வலைத்தளங்களில் கண்டனத்துக்குரியதாகியிருக்கின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியுதீன் அரசினால் பழிவாங்கப்பட்டு மனவுளைச்சலுக்குள்ளாகியுள்ள நிலையில் அவரை மேலும் மனவுளைச்சலுக்கு உள்ளாக்குவதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தார். இவர் முன்னரும் மலையக மக்களை தோட்டக்காட்டார் என விளித்துக் குறிப்பிட்டிருந்தமையும் அதனால் சமூக மட்டத்தில் விமர்சிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இவரின் இந்தக் கூற்று எவ்வளவுக்கு வக்கிரமான கூற்று என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். ஒரு சிறுமியின் இறப்பை விடவும் றிஷாட் பதியுதீனின் மனவுளைச்சலே இவருக்கு வருத்தத்தையளிக்கின்றது. றிஷாட் பதியுதீன் தவறிழைத்தரா? இல்லையா? என்பதை உரிய முறையில் கண்டடைய வேண்டும். அவரது கைதின்பின் அரசின் பழிவாங்கல் தான் இருக்கிறதா? என்பதையும் கண்டறிய வேண்டும். ஆனால் ஹிஷாலினியின் மரணம் அதைவிட முக்கியமானது அதற்கான நீதிதான் முதலில் கண்டடையப்பட வேண்டும். தமிழ்மொழிச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து நீதிக்காகப் போராட வேண்டிய தேவை இருக்கிறது. இதைச் சிறிதரன் போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சமூகச் செயற்பாட்டாளர்களிடம் ஏற்பட்டிருக்கின்ற தன்னார்வ எழுச்சியே இங்கு முக்கியமானது. இவ்வெழுச்சி சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் விரிவுபடுத்தப்படுகின்றபோதே, ஹிஷாலினியின் மரணத்துக்கான தீர்வு எட்டப்படும். இன, மதம், மொழி கடந்த எழுச்சியாக அமைகின்ற போதே நீதி கிடைக்கும். எனவே இங்கு நீதிக்கான எழுச்சியே தேவையே தவிர அரசியல் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களோ எழுச்சியோ அல்ல. அதிகாரங்களுக்குள்ளும் சுய நலன்களுக்குள்ளும் ஆட்பட்டுப்போகாத குறிப்பாக, அரசியல் மயப்படாத தன்னார்வ எழுச்சியே நீதியைப் பெற்றுத் தரும். ■

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# இலங்கையின் மீட்பர்கள் யார்? இனவாதிகளா? இடதுசாரிகளா?

> **“விலையேற்றத்திற்கு எதிராக, தொழில் உரிமைகளுக்காக, சம்பள உயர்வுக்காக, இயற்கை வளங்களின் சுரண்டலுக்கும் அழிப்புக்கும் எதிராக, ஜனநாயகத்துக்காக, அதிகாரக் குவிப்புக்கு எதிராக, வெளிச்சக்திகளின் தலையீடுகளை எதிர்ப்பதாக, அரசியல் உள்நோக்கமுடைய கைதுகள், கொலைகள், தவறான அரசியல் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு எதிராக என இடதுசாரிகள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.”**








இடதுசாரி அரசியல் என்பது மக்கள் அரசியலாகும். மக்களையும் அவர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் மையப்படுத்திச் சிந்திப்பதாகும். விடுதலை என்பதை முழுமையான அளவில் கருதிச் செயற்படுவது, செயற்படுத்துவது. சுருக்கிச் சொன்னால் மக்களுக்காக அரசியற் கோட்பாடும் நடைமுறைகளும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது. கட்சியோ உறுப்பினர்களோ தலைமைகளோ அனைத்தும் மக்களுக்காக என்ற உறுதியுரைப்பையும் நிலைப்பாட்டையும் கொண்டது. ஆகவே மக்களுக்காகச் செயற்படுவது, அவர்களுக்காகத் தம்மை ஈந்து கொள்வது என்பதாகும்.

வலது அரசியல் இதற்கு நேர்மாறானது. கட்சிக்காக, அதன் கோட்பாட்டுக்காக, அதன் தலைமைக்காகவே மக்கள் என்பதாக அது வியாக்கியானம் கொண்டிருப்பது. நடைமுறைகளும் விதிமுறைகளும் கூட இந்த அடிப்படையில்தான் இருக்கும். இருக்கின்றது. மக்களோ கட்சிக்காகவும் தலைமைக்காகவும் செயற்பட வேண்டும், தியாகம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டது. ஆனால் இதை அது உருத்தெரியாமல் வெவ்வேறு பொருத்தமான தந்திரோபாயச் சொல்லாடல்களால் மறைப்புச் செய்து தன்னைத் தளைக்க வைத்துக் கொள்கிறது. இதற்கே தேசியவாதமும் இனவாதமும் துணையாகப் பயன்படுத்தப்படுகிறது.



இலங்கையின் 1948 க்குப் பின்னரான அரசியலானது வலது சக்திகளின் ஆதிக்கத்திலேயே இருந்துள்ளது. இடையிடையே இடதுசாரிகளின் பங்கேற்புடன் அவ்வப்போதான ஆட்சிகள் நடந்திருந்தாலும் அவையும் வலதுக்குக் கட்டுப்பட்டதாக அல்லது அதனோடு இசைவாக்கம் கொண்டதாகவே இருந்துள்ளது.

ஆகவே தொகுத்துப் பார்த்தால், எழுபது ஆண்டுகளுக்கு மேலான ஆட்சி என்பது வலதுகளின் ஆட்சியாகவே இருந்துள்ளது.

இந்த ஆட்சிக் காலத்தில்தான் பேரழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன. இனமுரண் உச்சமடைந்திருக்கிறது. கடன்பழுக் கூடியுள்ளது. பல லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு அகதிகளாகப் பெயர்ந்திருக்கின்றனர். வெளிச் சக்திகளின் தலையீடுகள் அதிகரித்த நிலை ஏற்பட்டுள்ளது. நாடு ஜனநாயகத்திலும் பொருளாதாரத்திலும் வீழ்ச்சிடையடைந்துள்ளது. லட்சக் கணக்கானோர் அங்கவீனர்களாகியுள்ளனர்.

ஒரு கணம் கண்களை மூடி நியாயமாகச் சிந்தித்தால் மக்கள் வழங்கிய ஆணையை இவர்கள் எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்று தெளிவாகத் தெரியும். நாட்டை அப்படியே கெடுத்துக் குட்டிச் சுவராக்கியுள்ளனர்.

அப்படியென்றால் இந்தத் தரப்பு தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருக்கத் தகுதியற்றது. இதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் வரலாறு இதை உணர்த்தி வருகிறது. இதனால்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மிகப் பின்னடைவைச் சந்திக்க வேண்டி வந்தது. இது வரலாற்று விதியாகும். ஆனாலும் அதை மீண்டும் மிகக் கடினமாகக் கட்டியெழுப்பினார்கள். இருந்தும் இப்பொழுது அது மறுபடியும் உடைந்து நலிந்துள்ளது.

பதிலாக அது பொதுஜன பெரமுன என்ற ஒரு புதிய லேபிளைக் கொண்டுள்ளது. ஆனால் அடிப்படையில் இரண்டும் ஒன்றே. அதே ஆட்கள், அதே கோட்பாடு, அதே நிலைப்பாடு, அதே மாதிரிகள் என.

இதே கதையும் கதியும்தான் ஐ.தே.கவுக்கும். ஐ.தே.க. இப்பொழுது உடைந்து நொருங்கியுள்ளது. சு.க வுக்கு எப்படிப் பொது ஜன பெரமுனவோ அப்படியே ஐ.தே. கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி. இவற்றுக்கிடையில் என்ன வித்தியாசம் என்று சத்தியமாக யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள். இது நாடகமன்றி வேறென்ன? ஏமாற்றன்றி வேறேது? இப்படித்தான் தமிழ்த் தரப்பிலும். தமிழரசுக் கட்சி சரியில்லை என்று (அதாவது அதன் மீது மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர் என்ற நிலையில்) தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய லேபிளை ஒட்டிக் கொண்டது.

இதைப்போலத்தான் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பதிலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற மாதிரி புதிய லேபிள்களை உருவாக்கியிருப்பது. இடையில் தமிழ் மக்கள் பேரவை என்ற இன்னொரு தில்லாலங்கடி...

அடிப்படையில் இவற்றுக்கிடையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. அதே குணவியல்பு. அதே ஆட்கள். அதே பம்மாத்து மற்றும் மக்கள் விரோத தன்மைய அரசியலும்.

மட்டுமல்ல, தமிழ்த்தரப்பிலும் இந்தச் சக்திகள்தான் மாறி மாறி அதிகாரத்தில் இருந்துள்ளன. மக்களிடம் செல்வாக்கைப் பெற்றிருந்தன. அப்படியிருந்தும் மக்களுக்கு ஏதாவதொரு விமோசனத்தையோ, சிறிய மாற்றத்தையோ செய்திருக்கின்றனவா?

இல்லையே!





பதிலாக முரண்பாட்டையே ஊக்கி வளர்த்துள்ளன.

மக்களின் வாழ்க்கையைக் கீழிறக்கியுள்ளன.

சமூகங்களைப் பிளவுற வைத்துள்ளன.

அரச ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுகிறோம் என்ற கோதாவில் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கி விட்டுத் தாம் மட்டும் அரசுடன் இணைந்த ரகசிய நடவடிக்கைகளில் கொழுத்திருக்கின்றனர்.

ஆகவேதான் இவை மக்களுக்கு எதிரான சக்திகள் என்கிறோம்.



இன்னும் பத்து ஆண்டுகளல்ல, ஐம்பது ஆண்டுகளை இவர்களிடம் கொடுத்தாலும் இவர்களால் ஒரு சிறிய மாற்றத்தையும் உருவாக்க முடியாது. அதையும் கரியாக்கி விடுவார்கள்.

எனவேதான் இவர்களை - இந்தச் சக்திகளை நாம் கழித்து விட வேண்டியுள்ளது. கழித்துக் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட வேண்டும்.

ஆமாம், வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்.

பதிலாக இலங்கையின் பல்லினத் தன்மைக்கும் பன்மைத்துவச் சூழலுக்கும் அமைய புதிய மக்கள் சிந்தனைப் போக்குடைய - இடது நிலைப்பட்ட தரப்பினரே ஆட்சிக்கு வர வேண்டும்.

அவர்களே மாற்று அரசியற் பண்பாட்டை உருவாக்கக் கூடியவர்கள். மக்கள் அரசியலைச் சிருஸ்டிக்கக் கூடியவர்கள்.

இதுவரையான வரலாற்றில் அவர்கள் - அந்தச் சக்திகள் - மையத்தில் நின்று ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கமுடியாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஆட்சியதிகாரத்தில் இருந்தோரை ஓரளவுக்கேனும் நெறிப்படுத்தியது இடதுசாரிகளின் மக்கள் நிலைப் போராட்டங்களேயாகும்.

இப்போது கூட ஜனநாயகத்துக்கும் உரிமைகளுக்கும் சமத்துவத்துக்கும் தேச நலனுக்கும் நாட்டின் இறைமைக்குமாக மெய்யாகவே போராடிக் கொண்டிருப்பது இடதுசாரிகளே.

விலையேற்றத்திற்கு எதிராக, தொழில் உரிமைகளுக்காக, சம்பள உயர்வுக்காக, இயற்கை வளங்களின் சுரண்டலுக்கும் அழிப்புக்கும் எதிராக, ஜனநாயகத்துக்காக, அதிகாரக் குவிப்புக்கு எதிராக, வெளிச்சக்திகளின் தலையீடுகளை எதிர்ப்பதாக, அரசியல் உள்நோக்கமுடைய கைதுகள், கொலைகள், தவறான அரசியல் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு எதிராக என இடதுசாரிகள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

இவர்களில் ஒரு சிறிய தரப்பே ஆட்சியில் - அரசோடு இணைந்து பங்கேற்கிறது.

ஏனைய இடது சக்திகள் அத்தனையும் மக்களோடு நின்று அரசை நெறிப்படுத்தவும் ஆட்சியைச் சீரமைக்கவும் உரிமைகளை நிலை நிறுத்தவும் போராடுகின்றன.

கொழும்பிலும் கண்டி, ஹற்றன், யாழ்பாணம் போன்ற நகரங்களிலும் நடக்கும் சிவப்புப் போராட்டங்களுக்கென்றொரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

இப்போது கூட கொழும்பு - கோட்டையிலும் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலும் இந்தச் சிவப்புகளின் ஆக்ரோஸமான குரலை நீங்கள் கேட்கலாம்.

மழையிலும் வெயிலிலும் நின்று இவர்கள் கூவுகிறார்கள். எதற்காக? யாருக்காக? எந்த அதிகாரமும் இல்லாத இவர்களுடைய இந்தக் குரல்தான் அதிகாரத்தையே ஆட்டுகிறது.

எனவேதான் சொல்கிறோம், அரசியல் வரலாற்றில் இடதுகளின் பாத்திரம் என்பது வலுவானது. வரலாற்று முக்கியத்துவமுடையது. மக்கள் இன்று அனுபவிக்கின்ற பாதி அரசியல் உரிமைகள் மற்றும் மக்கள் நலன்கள் எல்லாமே இடதுகளினால் உருவாகியவையே என்று.

இதை யாராலும் மறுத்துரைக்க முடியாது.

ஆகவே இனியாவது இலங்கைத் தீவை ஒரு புதிய நிலையை நோக்கி நகர்த்த வேண்டும் என்றால், இலங்கை ஒரு பல்லின சமூகங்கள் வாழும் நாடு என்ற வகையில் பன்மைத்துவப் பண்பையும் அதற்கான ஜனநாயக விழுமியங்களையும் உருவாக்கி வளர்க்க வேண்டும் என்றால் அதற்கு இடதுசாரிகளே பொருத்தமானவர்கள்.

இனவாதிகளோ மதவாதிகளோ அல்ல.

இடதுசாரிகளே சுதேசியப் பொருளாதாரத்தைக் குறித்துச் சிந்திக்கக் கூடியவர்கள். நவீனத்தைக் குறித்த புரிதலைக் கொண்டவர்கள். விரிந்த சிந்தனையை உடையவர்கள். நெறிமுறைகளை மீறத் துணியாதவர்கள். இதுவரையான வரலாற்றுப் பங்களிப்பிலும் பாத்திரத்திலும் அவர்களுடைய அடையாளத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இதை விளங்கிக் கொள்ளவோ விளங்கியும் ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை என்றால் அழிவு அரசியலையே நாம் விரும்புகிறோம். தொடரப்போகிறோம் என்றே அர்த்தமாகும்.

அழிவு அரசியற் சக்திகள் எத்தனை தடவை வென்றாலும் எதையும் புதிதாக ஆக்கப் போவதில்லை. வரலாற்று நிரூபணமும் அதுவே.

மீட்பர்கள் யார்? என்று அறியாமல் இன்னும் எத்தனை காலம்தான் நெருப்பில் எரிவது? குழிக்குள் வீழ்வது?

(முற்றும்)

சி.அ.யோதிலிங்கம்

> ஹிஷாலினி ஒரு குறியீடு மட்டும் தான் இந்தச் சிறுமியை போல 18 வயதிற்கு உட்பட்ட மேலும் பல சிறுமிகள் மலையகப் பகுதியிலிருந்து இலங்கையின் பல பகுதிகளுக்கும் வேலைக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக, கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அதிகமாக பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற நிலைமை மோசமாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்றியமைப்பது அவசியமானது.



# ஹிஷாலினி ஒரு குறியீடு மட்டும் தான்

நுவரெலியா, டயகமவைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினி முன்னாள் அமைச்சர் ரிஷாட்பதியுதீன் வீட்டில் வேலைக்கமர்ந்திருந்த காலத்தில் மரணமடைந்திருக்கிறார். அவருடைய மரணத்தில் பல சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது ஒரு கொலையாக இருக்கலாம் என்ற அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் முதலாவது விடயம், இச் சிறுமி வேலைக்கு சென்ற போது 15 வயதும் 8 மாதமும் ஆகவேயிருந்தது. ஆகவே 16 வயதிற்கு உட்பட்ட பிள்ளையை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். இது மிகப் பெரிய தவறும் குற்றமுமாகும். அதுவும் நாட்டு மக்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் இந் நிகழ்வு நடந்திருக்கிறது. ஆகவே இது வலுவாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

இரண்டாவது, படிக்கிற வயதில் ஒரு பிள்ளையை வேலைக்குச் சேர்த்தது தவறு. இத்தனைக்கும் ரிஷாட்பதியுதீன் தம்பதிகளுக்கு 16 வயதில் ஒரு சிறுமி இருக்கிறார். மூன்றாவது, இந்தப் பிள்ளை வேலைக்குச் சேர்க்கப்பட்டு கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு மேலாக இருக்கும் நிலையில் பெற்றோர்கள் 3 தடவைகள் சந்திக்க வந்த போதும் சந்திக்க வாய்ப்புக் கொடுக்கவில்லை.

நான்காவது, சம்மந்தப்பட்ட சிறுமி வீட்டுக்கு வெளியிலுள்ள அறையில் தான் தங்க வைக்கப்பட்டிருக்கிறார். வயது வந்த பிள்ளைக்குப் பாதுகாப்பான இடம் கொடுக்கப்படாதது தவறான விடயமாகும். ஐந்தாவது, மருத்துவ பரிசோதனை அறிக்கையின் படி தொடர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதோடு உடல் ரீதியான தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார் ஆகவே இது ஒரு மோசமான குற்றச்செயலாகும். இதனால் சரியான விசாரணை மேற்கொள்ளப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஹிஷாலினி ஒரு குறியீடு மட்டும் தான் இந்தச் சிறுமியை போல 18 வயதிற்கு உட்பட்ட மேலும் பல சிறுமிகள் மலையகப் பகுதியிலிருந்து இலங்கையின் பல பகுதிகளுக்கும் வேலைக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக, கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அதிகமாக பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற நிலைமை மோசமாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்றியமைப்பது அவசியமானது. மலையகப் பகுதிகளிலிருந்து வேலைக்குச் சென்றுள்ள பிள்ளைகள் மட்டுமல்லாமல் அங்கு வசிக்கின்ற ஏனைய பிள்ளைகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

மலையகப் பிரதேசம் என்பது தொழிற்சங்கக் கண்காணிப்பில் உள்ள ஒரு பிரதேசம். ஒவ்வொரு சிறிய சிறிய தோட்டங்களிலும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கிளைகள் உள்ளன. குறிப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்த வரையில் குட்டி குட்டித் தோட்டங்களிலும் கூட அவற்றிற்கு கிளை உள்ளதைப் பார்க்க முடியும். ஆகவே தொழிற்சங்கங்களினுடைய கண்காணிப்பை மீறி எதுவும் நடைபெற வாய்ப்பில்லை. இதனால் தொழிற்சங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடே அநீதிகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. அதே போல பெற்றோர் மீதும் தவறுண்டு. என்னதான் வறுமை இருந்தாலும் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளை கல்வியை நிறுத்தி வேலைக்கு அனுப்பியிருக்கக் கூடாது. அதே நேரம் அரச தரப்பிற்கும் பொறுப்பில்லை என்று சொல்லிவிட முடியாது. அங்கு உள்ளவர்கள் வேலைக்குச் செல்வது தொடர்பாக பதிவுக்குட்பட்ட கண்காணிப்புப் பொறிமுறையை வலுவாக மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அப்படியான ஒன்று அங்கு இருந்ததாகத் தெரியவில்லை. வேலைக்கு யாரையாவது அமர்த்த வேண்டுமானால் அரசாங்க வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு இருத்தல், எந்த கிராமத்திற்கு வேலைக்குப் போகிறாரோ அந்தக் கிராம சேவையாளரிடம் பதிவிருத்தல், பிரதேச செயலகத்தில் பதிவிருத்தல் என்பன அவசியமானதாகும். இச் செயற்பாட்டின் ஊடாக அரசு கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டும்.



இப்பொழுது எமக்கு உள்ள கேள்வி என்னவென்றால் இந்த நிலைமையை நாங்கள் எவ்வாறு மாற்றுவது? மலையகத்திலுள்ள சிக்கலான பிரச்சினை என்னவெனில் க.பொ.த (சாதாரணம் ) படித்து முடிந்த உடனேயே வேலைக்குச் செல்கின்ற நிலைமை உள்ளது. அதுவும் ஆண்பிள்ளை எனில் கொழும்பிற்குச் சென்று கடைகளில் நிற்பதும் பெண் பிள்ளைகள் என்றால் வீட்டு வேலைக்கு, ஆடைத் தொழிற்சாலைகளுக்குச் செல்வதும் வழமையாக உள்ளது. இந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளோம். எல்லாப் பிள்ளைகளுமே க.பொ.த (உயர்தரம்) வரை படிக்க வேண்டும். க.பொ.த (உயர்தரம் ) படிக்க முடியாதவர்கள் குறைந்தபட்சம் தொழில்நுட்பக் கல்வியாவது படிக்க வேண்டும். 12 வருடம் பிள்ளைகள் படிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காலம். ஆகவே அந்த 12 வருடம் கட்டாயம் படித்தே ஆக வேண்டும். அதற்குரிய ஒழுங்கையும் அழுத்தத்தையும் நாம் எவ்வாறு கொடுப்பது என்பதை யோசிக்க வேண்டும்.

முதலில் மலையக மட்டத்தில் மலையகக் கல்வியாளர்கள், மலையகத்தினுடைய மதத் தலைவர்கள், அரசியற் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சமூகத் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்பு அமைப்பொன்றை உருவாக்கலாம். அந்த அமைப்பிற்குக் கீழ் ஒவ்வொரு தோட்டங்களிலேயும் கண்காணிப்புக் குழுக்களை உருவாக்கலாம். இதன் மூலம் கண்காணிப்புப் பொறிமுறையை உருவாக்கி அப்பகுதி மக்களிடம் விழிப்புக் கொண்டு வர வேண்டும்

மற்றையது, அங்கு உள்ள பிள்ளைகள் படிக்க முடியாமல் இருப்பதற்கு ஒரு பிரதான காரணம் வறுமை. அதனால் பிள்ளைகள் பொது விடுதிகளில் தங்கியிருந்து படிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தலாமா? என யோசிக்கலாம். அதனை வேறு இடங்களில் செய்வதை விட மலையகத்திலேயே செய்வது பொருத்தமானது. மத்திய மலை நாட்டைப் பொறுத்த வரையில் ஹட்டன் பிரதேசம் கல்வியில் முக்கியமான பிரதேசமாக உள்ளது. கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு மாத்திரமல்லாமல் விஞ்ஞான, கணித பிரிவும் நன்கு வளர்ச்சியடைந்த பிரதேசமாக உள்ளது. அங்கு ஒரு பொது விடுதியை உருவாக்கி அதற்கு ஒரு பொது நிதியத்தை உருவாக்கி வசதி குறைந்த பிள்ளைகளைப் படிப்பிக்கலாமா? என யோசிப்பது நல்லது

மலையகத்தில் ஆசிரியர்கள் ஒரு சமூக சக்தியாக இயங்கி வருகின்றனர். அதனால் தற்போது மலையகத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த (சாதாரணம்) க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளிலும் நிறைய மாணவர்கள் சித்தியடைகிறார்கள். அதிலும் மாணவர்களை விட மாணவிகளின் கல்வித் தரம் தான் உயர்வாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தாலும் விஞ்ஞானக் கல்வியைப் பொறுத்த வரையில் மாணவர்கள் ஆர்வம் கொள்வதில்லை. அவர்களுக்கு அதில் அச்சம் இருப்பதாகத் தெரிகிறது. இதனால் விஞ்ஞானக் கல்வியை வளர்ப்பதற்கான ஏதாவது ஒழுங்குகளைச் செய்யலாமா? என்பதையும் ஆலோசிக்க வேண்டும்.

வடகிழக்கு மக்களைப் பொறுத்த வரை மலையகம் தொடர்பாக அவர்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது. ஒரே மொழியைப் பேசுபவர்கள், கலாசாரத்தில் தொடர்புபட்டிருத்தல் என்பதனால் அவர்கள் தொடர்பில் கரிசனை எடுத்துத் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது பற்றி யோசிக்க வேண்டும்.

தந்தை செல்வா காலத்தில் மலையகத்து மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் விடுதியில் தங்க வைத்து கல்வி வழங்கியிருந்த நிலைமை காணப்பட்டது. இதே போல குறைந்த பட்சம் விஞ்ஞானக் கல்வியைக் கற்கின்ற பிள்ளைகளுக்கு அவ்வாறான ஒழுங்கைச் செய்யலாமா? என்பது பற்றி வடகிழக்கில் உள்ளவர்கள் யோசிப்பது நல்லது. இதனூடாக மலையக மக்களோடு ஒரு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இதில் ஒரு விடயம் கவனத்திற் கொள்ள வேண்டும். வடகிழக்கில் வாழுகின்ற மலையக வம்சாவழியினரை அங்கே உள்ளவர்கள் கௌரவமாக நடத்தாது இரண்டாம் நிலைப் பிரஜைகளாகத்தான் நடத்துகின்றனர் என்ற அதிருப்தி மலையகத்திலுள்ள மத்திய வர்க்கத்தினரிடம் உண்டு. அவர்களுக்குரிய அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கொடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டையும் முன்வைக்கிறனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மலையக மக்களே அதிகளவில் வசிக்கின்றார்கள் ஆனால் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் போதியளவு கிடைப்பதில்லை. என்ற அதிருப்தியும் இருக்கின்றது. அதனைப் போக்குவதற்குரிய நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். எங்களுடைய நலனில் மலையக மக்கள் அக்கறைப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதைப் போல மலையக மக்களின் நலன்களில் வடகிழக்கு மக்கள் அக்கறை காட்ட வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலை பொறுத்த வரையில் இக்கட்டுரையாளர் அடிக்கடி சொல்வது வழக்கம், தமிழ் மக்கள் எண்ணிக்கையில் ஒரு சிறிய இனம். அவர்கள் தங்களை மட்டும் வைத்துக் கொண்டு முன்னேறிச் செல்ல முடியாது. புற ஆற்றலை வளர்த்துக் கொள்வதென்றால் சேமிப்புச் சக்திகளையும் நட்புச் சக்திகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். சேமிப்புச் சக்தி என வரும் போது மலையக மக்கள், தமிழக மக்கள், உலகெங்கும் வாழ்கின்ற தமிழக வம்சாவழி தமிழ் மக்கள் எல்லாமே வலுவான முக்கியமானவர்களாவர்.

அந்த அடிப்படையில் நாங்கள் மலையகத்தோடு உறவு பேண வேண்டியுள்ளது. கல்வியூடாக நாங்கள் அந்த உறவை வளர்த்துக் கொண்டு இரண்டு சமூகங்களிற்குமிடையில் இருக்கின்ற நல்ல விடயங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது தமிழர்களை பலமான சக்தியாக மாற்றும். மலையகத்தில் நிகழ்ந்த அநீதி தொடர்பாக இங்கு போராட்டங்கள் நடைபெறுகிறது. அது மகிழ்ச்சிக்குரிய விடயம் ஆனாலும் அந்தப் போராட்டத்தில் எங்கள் அரசியற் தலைமைகள் கவனம் செலுத்தியமை போதாது. போராட்டத்தை நடத்தியிருக்கின்றோம். ஆனால் இன்னும் வலுவாகச் செய்திருக்கலாம். அவ்வாறு வலுப்படுத்துவதன் மூலம் நீதியை நிலைநாட்ட முற்படலாம். ஹிஷாலினிக்கு நிகழ்ந்த அநீதி போல் ஏனைய பிள்ளைகளுக்கு நிகழாமல் பார்த்துக் கொள்வது அனைவரினதும் கடமையாகும். ■

புலோலியூர் வேல்நந்தன்





புதுப்புனல் - 02

# சிலப்பதிகாரம்
# நட்டாரியல் - செவ்வியல் - ஆய்வியல்

தீம்புனலின் இவ்வாரப் புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காணும் பிரதி பாஸ்கரன் சுமன் அவர்களது சிலப்பதிகாரம்; நட்டாரியல்- செவ்வியல் - ஆய்வியல் என்ற ஆய்வு நூலாகும். இவர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுதத்துவமாணி வரை பட்டங்களைப் பெற்று சில காலம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் உதவி விரிவுரையாளராக இருந்தவர். தற் போது தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். இளம் தமிழ் ஆய்வாளர்கள் அருகி வரும் சூழலில் இவரது வருகை நம்பிக்கையைத் தருகிறது. குமரன் புத்தக இல்ல வெளியீடாக 2020 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூலானது சிலப்பதிகாரம் குறித்து பல்வேறுபட்ட தளங்களில் ஈழத்தில் நிகழ்ந்துள்ள ஆய்வுகள், முயற்சிகள் என்பன குறித்து சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது.

ஈழத்துக்கும் சிலப்பதிகாரத்துக்குமான முதற் தொடர்பு வரந்தரு காதை



யிலும் உரைபெறு கட்டுரையிலும் இடம் பெற்று விடுகிறது எனக் கூறும் ஆசிரியர் அத் தொடர்பை மேலும் விரிவாக்கி தமிழரிடமும் சிங்களவரிடமும் நிலவும் கண்ணகி வழிபாடு, கண்ணகியம்மன் தோத்திரப் பாடல்கள், கண்ணகியம்மன் வழி பாட்டின் பாராயண நூல்கள் (சிலப்பதிகாரப் புத்தாக்கப் பிரதிகள்) சிங்கள மரபில் வழங்கும் சிலப்பதிகாரக் கதைகள் சிலப்பதிகாரத்தின் பயில்வும் அதன் பதிப்புக்கான ஈழத்தவரின் பங்களிப்புக்களும் ஈழத்தவரின் சிலப்பதிகார ஆராய்ச்சிகள், சிலப்பதிகாரப் புத்தாக்கப் பிரதிகளின் ஆராய்ச்சிகள் என்ற அடிப்படைகளில் நோக்கலாம் என்கிறார். உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்க எண்ணி 1880 களில் அதனைத் தேடி அலைந்த போது அதற்கு முன்பாகவே ஈழத்தவர் சிலப்பதிகாரத்தை அறிந்திருந்தனர். என்பதற்குச் சான்றாக சைமன் காசிச் செட்டி அவர்கள் இலங்கை வேத்தியல் ஆசிய சங்கத்தில் 1848 ஆனி 1849 மாசி மாதங்களில் வாசித்த தமிழ் நூற் பட்டியலில் சிலப்பதிகாரத்தையும் அதன் கதைப் போக்கையும் அதன் செய்யுளினையும் வெளிப்படுத்தி இருந்தமையைக் கொள்ளலாம். என்பது ஆசிரியரின் முடிவாகும். இவ் வகையில் உ.வே சாமிநாதையரின் சிலப்பதிகாரப் பதிப்போடு ஈழம் இரு வகையில் தொடர்புற்று நிற்கிறது. ஒன்று உ. வே சாமிநாதையரது பதிப்பின் பொருட் செலவை ஏற்றுக் கொண்டது. மற்றையது பதிப்பிக்க வேண்டிய பிரதிகளில் ஐந்து பிரதிகளை ஈழம் உ.வே சா.வுக்குக் கொடுத்தருளியது என்ற செய்திகளையும் பதிவு செய்யும் நூலாசிரியர், சிலப்பதிகார ஆராய்ச்சியை பிரக்ஞை பூர்வமாக தொடக்கி வைத்தவர் ஈழத்தவரான மல்லாகம் வி.கனகசபைப் பிள்ளையே என்பதும் ஆய்வாளரின் முடிவாக அமைகிறது.

அதே போல சிலப்பதிகாரப் புத்தாக்கப் பிரதிகளாக கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் ஆகிய மூன்று படைப்புக்கள் பிரதேச அடிப்படையில் ஈழத்தில் வழங்கி வருவதைக் குறிப்பிடும் ஆசிரியர் இவற்றுள் முன்னிரு பிரதிகளும் அச்சு வாகனம் ஏறியுள்ள போதும் சிலம்பு கூறலின் ஏட்டுப் பிரதிகளை தனது முதுகலைமாணி ஆய்வுக்காக யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் தற்போதைய தமிழ்த் துறைத் தலைவர் ம.ரகுநாதன் அவர்கள் சமர்ப்பித்திருந்த போதும் அப்பிரதி இது வரை அச்சில் வெளிவரவில்லை என்கிறார். ஆனால் மிக அண்மையில் அது வெளியிடப்பட்டது போன்றதொரு நினைவும் உண்டு. ஈழமும் சிலப்பதிகாரமும் என்ற பெருவெளிக்குள் இந்த ஆய்வு நூல் பயணிக்கிறது.

சிலப்பதிகாரம், ஈழத்துச் சிலப்பதிகாரப் புத்தாக்கப் பிரதிகள் குறித்த நான்கு கட்டுரைகளையும் ஈழத்தவரின் சிலப்பதிகார ஆராய்ச்சிகளை அடையாளம் காட்டும் ஒரு கட்டுரையையும் உள்ளடக்கியதாக இத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. இவ்வகையில் முதலாவது கட்டுரை இந்திரன் தொன்மத்தை மையப்படுத்தி "இந்திர விழவூரெடுத்த காதையை" அணுகும் ஆய்வாக அமைகிறது. இரண்டாவது கட்டுரை வேட்டுவ வரி எனும் காதையை இன வரையியல் நோக்கி அணுக முயல்கிறது. அடுத்து வரும் இரு கட்டுரைகளும் ஈழத்துச் சிலப்பதிகார புத்தாக்கப் பிரதிகள் குறித்தன. இறுதிக் கட்டுரை ஈழத்தவரின் சிலப்பதிகார ஆராய்ச்சிகளை விபரணப்படுத்துகிறது.

அதே வேளை அவ் ஆராய்ச்சிகளின் பலமும் பலவீனமும் மதிப்பிடப் பெற்றுள்ளது. நூலின் பின்னிணைப்பாக நூலாசிரியர் தந்துள்ள ஈழத்தவர்களால் நிகழ்த்தப்பட்ட சிலப்பதிகார ஆய்வுகள் குறித்த பதிவு இவ் இளம் ஆய்வாளரின் ஆய்வுத் தேடலை வெளிக் காட்டுவதுடன் ஓரளவிற்கு ஈழத்தில் சிலப்பதிகாரம் குறித்து கடந்த காலத்தில் நிகழ்ந்த ஆய்வுகளை ஒன்று சேர நோக்குவதற்கான தேடற்பொறியாகவும் அமைந்து சிறப்புப் பெறுகிறது. இவ் ஆய்வுக்கு பயன்பட்ட மூல நூல்களும் உசாத்துணை நூல்களும் இறுதியிலே தரப்பட்டுள்ளன. நூலை முழுமையாகப் படித்து முடிக்கும் போது சிலப்பதிகாரத்தை இப்படியும் நோக்கலாம். என்ற புதிய ஆய்வுத் தரிசனங்கள் ஏற்படுவதுடன் இவ் இளம் ஆய்வாளர் குறித்து ஒரு பெருமிதம் ஏற்படுகிறது. ஈழத்தில் வெளிவந்த சிலப்பதிகார ஆய்வு நூல்கள் வரிசையில் தனிச் சிறப்போடு விளக்கும் இந் நூலைத் தந்த பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை தந்த இளம் ஆய்வாளர் பாஸ்கரன் சுமன் அவர்களைப் புதுப்புனல் வாழ்த்துகிறது. ■



ந.குகபரன்

# நின்ற சொல்லர்

இன்பத்தை அவாவுவது உயிர்களின் பொதுஇயல்பு. உயிர்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வழிகளில் இன்பத்துக்காகப் பிரயத்தனப்படுகின்றன. இன்ப நாட்டமென்பது உலகியலோடு பின்னியது. அதில் ஆண் பெண் உறவுச்சேர்க்கை பிரதானமானது. பேரின்பத்தின் உயர்வைப் புரிய வைப்பதற்கும் சிற்றின்பத்தின் திளைப்பு துணையாகிறது. தலைவனும் தலைவியும் தம்மை மறந்து கொள்ளும் இன்பம் சிற்றின்பமெனின் எந்தச் சலனமும் அற்று இடையறாது பெருகுவதே பேரின்பமாகும்.

காதலரின் இணைவைக் குறித்துக் களவியலில் தொல்காப்பியர் மேல்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே"

ஒருவனும் ஒருத்தியும் கூடுதற்கு அடிப்படையாக யாவற்றையும் கடந்து நிற்கும் தொடர்பு ஆதாரமாக இருந்துள்ளமையை இச்சூத்திரம் வெளிப்படுத்துகிறது. மனமொத்துக் கலப்பது அன்புப்பிணைப்பாகும். அவ்வாறு பிறந்த காதலரின் இன்பச் சேர்க்கைக்கு இறையருள் காரணமாய் இருக்கவேண்டும் என்பது குறிப்பால் உணர்த் தப்படுகிறது. இங்கு "ஒன்றி உயர்ந்த பாலதாணை" என்ற அடியானது மேலான சக்தியை குறித்து நிற்கிறது எனலாம். இயற்கை நெறிக்காலத்தில் தலைவ-னும் தலைவி யும் கண்டு அகங்கலந்து காதலராவதற்கு அவர்களுடைய வாழ்வியல் சூழல் வாய்ப்பாக இருந்துள்ளது. கண்டுகலந்து உயிர்த்து காதலாகி, வாழ்வு நெடுகிலும் நீளும் இன்பத்தைச் சங்க இலக்கியங்கள் பதிந்துள்ளன.

நற்றிணையில் ஒரு காட்சி. தனது தலைவியின் காதலன் பொருள் தேடும் நிமித்தம் பிரியக்கூடும் என்பதை உணர்ந்த தோழி வாட்டமுறுகிறாள். அதனைத் தலைவியி டத்து வெளிப்படுத்துகிறாள். அச்சூழலில் தன்னிலை உணர்ந்த தலைவி தனது உணர்வை தோழியிடத்து வெளிப்படும் கருத்துகள் உணர்வுச்செறிவானவை.

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்னும் என்றோன் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல
புரை மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே" என்ற தலைவி கூற்றுப் பாடல் காதலின் மாண்பை தெளிவுறுத்தி நிற்கிறது. இருவரும் மாறிப்புக்கு இதயமெய்திய நாளில் தலைவன் கூறிய மொழி தலைவியின் நம்பிக்கை வித்தானது. அது வாழ்வு முழுமைக்கும் தொடரும் தன்மையது. எந்த வேளையிலும் தான் வழங்கிய வாக்கில் இருந்து மாறாதவனாகத் தலைவனைத் தலைவி காண்கிறாள். சொற்கள் எவ்வாறு உணர்வையும் உயிரையும் ஆளுகின்றன என்பதற்கு இது தக்க சான்று. தன்தலைவன் "நின்ற சொல்லர்" என்கி றாள் தலைவி. களவில் களித்து காலவெளியில் கலைந்து போகும் உறவு இதுவன்று. இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் தொடரும் தூயகாதலாக நிலைப்பது. தன் தலைவன் "நீடு தோன்று இனியர்" என்ற தன் நம்பிக்கையை தலைவி வெளியிடுகிறாள். "என்தோள் பிரிவு அறியலரே" என்ற வகையில் தலைவன் எப்பொழுதும் தலைவியைப் பிரியாதவனாக இருந்துள்ளான். இதனைத் தலைவி கூறுவது அவள் மனதை உள்நின்று அழுத்தும் சோகத்தின் வெளிப்பாடாகும். தலைவன் மேல் அவள் நம்பிக்கை உடையவள் எனினும் அவன் பொருளீட்டலை விரும்பிப் புறப்பட்டால் அதனைத் தாங்கும் மனம் அவளுக்கு இல்லை என்பதை இது உணர்த்துகிறது.

வண்டானது தாமரை மலரின் குளிர்ந்த தாதினை ஊதிச் சந்தன மரத்தின் கட்டிய இனிய தேனடை உயர்ந்த சுவைதரத்தக்கது. அதுபோல தலைவனோடு தான் கொண் டுள்ள நட்பு உயர்வானது என்பதைச் சுட்டுகிறாள் தலைவி. என்றும் கூடி வாழும் வாழ்வே நலம் பயப்பது. தலைவன் பிரிந்து செல்ல நேரிடின் அதனைத் தலைவி விரும்பாள். எப்படி இந்த உலகத்தின் ஆதாரம் நீரோ அதுபோல தலைவன் இன்றி தான் வாழேன் என்று குமைகிறாள் தலைவி. "நீரின்றி அமையாது உலகம்" என்பதன் முக்கியத்துவத்தை பிரிவை எதிர்கொள்ள இயலா மனநிலைக்கு ஒப்பிட்டுள்ள பாங்கு கவனிப்பிற்குரியது. தலைவன் பிரிந்து சென்றால் தோன்றும் பசலை குறித்துத் தலைவி பேசுகிறாள். மணம் வீசும் நெற்றி பசலை நிறமாகும் என்பதை நினைத்து அஞ்சி என்னை விட்டுப்பிரியமாட் டார் என்று தன்னைத் தேற்றுகிற பாங்கு மென்னுணர்வின் தவிப்பாய் விரிகிறது. தலை வனும் கூடிவாழ்தற்கே விருப்புடையவன். தலைவியின் தோள் தழுவி மகிழ்ந்திருப்பவன். இருந்தும் வாழ்வதற்கான வழியை கண்டடைவதும் அவன் கடமையாகிறது. அச்சூழலில் வினைவழி பிரிவதா தலைவியின் துயர்வழி கரைவதா என அவன் உளத்திலும் பெரும் போர் நிகழ்ந்திருக்கக்கூடும். இந்த வலிதரும் உணர்வு, பிரிதல் கணத்தில் மட்டும் நிகழ்வதில்லை ஒருவாறு வினையை அவாவி மனதைத் திடமாக்கி புறப்பட்டு வந்த போதும் தலைவியோடு அருகிருக்கும் தருணத்தை மனம் பற்றித்தாவும். அப்பொழுது புறப்படத் தூண்டும் உணர்வுக்கும், வினையை முடித்துச் செல்வதே உசிதம் எனச் சொல்லும் அறிவுக்கும் இடையே மனம் "தேய்புரி பழங்கயிறுபோல" துன்புறும். இது போலும் காட்சிகளையும் சங்க இலக்கியங்களில் காணமுடியும். இவையாவும் தூயகாதலின் உயிர்ப்பை உலகுக்கு என்றும் சொல்லியபடியே உள்ளன. ■

இ.சு.முரளிதரன்

# ஆண்களைக் குற்ற உணர்வுக்குள் தள்ளும்

## “தி கிரேட் இந்தியன் கிச்சன்”

இந்திய சமையலறையின் நடப்பியல் அம்சங்களை, கம்பிகளற்ற இல்லச் சிறைக்குள் வாழும் பெண்களின் அவலத்தை “The Great Indian Kitchen” மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. திருமணமாகி கணவனது வீட்டுக்குள் நுழையும் நாயகி மீது, மரபுவழி உரிமம் என்னும் மூடு திரையுள் வன்மம் கட்டவிழ்க்கப்படுகிறது. குடும்ப நுண்ணரசியலைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நாயகி திரைகிழித்து வெளியேறுவதோடு படம் நிறைவு பெறுகிறது.

ஆணாதிக்க அடிப்படை வாதத்தை, திருமண ஒப்பந்தத்தால் பறிக்கப்படும் சுதந்திரத்தை, மண வாழ்விலே பகிரப்படாத ஆதாயத்தை, இயக்குநர் ஜியோ பேபி நம்பகத்தன்மைமிகு காட்சியடுக்குகளில் பதிவு செய்துள்ளார். இந்தியப் பண்பாட்டில் எதுவிதமான உறுத்தலுமின்றிப் பெண்களின் உழைப்புச் சுரண்டப்படுவதையும், சமையலின் பின்நிகழ்வுச் சுமையின் சலிப்பினையும், கடவுளின் பெயரால் நடக்கும் அபத்தங்களையும் நம்பகத் தன்மையோடு இயக்குநர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

அதிகமான சட்டகங்கள் ஆண்களைக் குற்றவுணர்வுக்குள் தள்ளுகின்றன. உணவுத்தட்டு மற்றும் தேநீர்க் கோப்பையினைக் கழுவாது வைத்தல், மேசை நாகரிகமின்றி உணவு அருந்திவிட்டுத் தூய்மைப்படுத்தாமல் எழுந்து போதல், சமையலை மேற்கொள்பவரின் உடல் வலி அறியாது விருப்பிற்குரிய உணவில் குறியாய் இருத்தல் போன்ற பலகாட்சிகள் கூனிக்குறுகச் செய்கின்றன. தாயிடம், சகோதரியிடம், மனைவியிடம் மீமதிப்பினைக் கட்டியெழுப்புகின்றன.



முகநூல், தொலைக்காட்சி, பத்திரிகை, சீட்டாட்டம் எனப் பொழுதைக் கழிக்கும் மாமனார் கதாபாத்திரத்தின் விருப்புகள் இறுதி முடிவுக்கு வலுச் சேர்க்கின்றன. ஆண்மைய வாதத்தின் பிரதிநிதியாக நாயகன் அமைகின்றான். இக் கதாபாத்திர வடிவமைப்பின் சிறப்பம்சம் யாதெனில், இந்தியக் குடும்ப அமைப்பின் (ஈழம் உட்பட) பொதுப் புத்தியில் வெளிப்படும் நல்ல கணவனுக்கான அத்தனை பண்புகளையும் கொண்டமைகின்றான். ஆனாலும் ஆணாதிக்கத்தின் மெய்யுருவாக வெளிப்படுகின்றான். தவறைச் சுட்டிக் காட்டியதற்காக மனைவியை மன்னிப்புக் கேட்க வைத்தல், ‘Plumber’ ஐ ஒழுங்கு செய்யும் விருப்பமின்மையை ஏளன முகபாவனையில் வெளிப்படுத்தல், புணர்தலுக்கு முன்னரான மகிழ் குறும்பு வேட்கையினை ஒவ்வாமையோடு நிராகரித்தல் என அதிகாரரூபனாக அமைகிறான். சுராஜ் நாயகனாகவும், சுரேஷ் பாபு மாமனாராகவும் சிறப்பான அளிக்கையினை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் நாயகியான நிமிஷா சஜயன் பிரமிக்க வைக்கிறார். இயலாமை, சலிப்புத் தன்மை, ஏக்கம், வெறுப்பு, கோபம் என அனைத்தையும் முகபாவத்திலும், உடல் மொழியிலும் அற்புதமாக முன்வைக்கிறார்.

மிதமிஞ்சியவனான சமையற் காட்சிகள் இடம்பெறினும் சலிப்பூட்டாமல் இருக்க ஒளிப்பதிவாளரும், படத் தொகுப்பாளரும் எடுத்துக் கொண்ட சிரத்தை பாராட்டுக்குரியதாகும். எல்லாக் கார்களும் அகன்று செல்ல மணமக்களின் ‘கார்’ தனித்து நிற்றல், கழிவு நீரை முகத்திலே ஊற்றுதல். சுதந்திரமான நடன ஆசிரியையாகப் பயணிக்கும் கோணத்தைப் பறவைக் கோணத்திலே காட்சிப்படுத்தல் எனக் குறியீடுகள் அந்தச் செறிவோடு அமைகின்றன. எஞ்சிய உணவின் சிதறல் எந்த மேசை மீது தென்பட்டாலும் “தி கிரேட் இந்தியன் கிச்சன்” நினைவுக்கு வரும்! உலகத் தரமான சினிமாவுக்கான அண்மைய எடுத்துக்காட்டாக இந்த மலையாளத் திரைப்படத்தினைத் துணிந்து கூறலாம். ■




அபூர்வன்

# நீதியைத் தேடும் தாயின் போராட்டம்

## “பாங்சு”




2019 இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த திரைப்படத் திருவிழாவில் என்னை வெகுவாகக் கவர்ந்த திரைப்படம் Paanshu. திரள் மாந்தரின் கேளிக்கையாக மட்டுமே நகரும் படிமங்களைக் கருதாமல், கூர்மையான அரசியல் தரிசனத்தை முன்னிறுத்தும் கருவியாகவும் கையாள்வதால் சிங்கள சினிமா கவன ஈர்ப்பினைப் பெற்றுள்ளது. சிங்கள அரசு மாற்று இனத்தின் மீது மட்டுமன்றிச் சொந்த இனத்தின் மீதும், காலந்தோறும் அதிகார வன்மங்களைக் கட்டவிழ்த்து விட்டபடியே தான் பயணிக்கிறது. காணாமற் போன உறவுகளைத் தேடுகின்ற துன்பியல் நிலை சிங்கள மக்களுக்கும் உரித்தானதுதான். விழுக்காட்டிலே வித்தியாசமிருக்கலாம். ஆனால் ஆட்சியாளர்கள் பரிசளித்த கண்ணீரின் உப்புக்கரிப்பு மாறாப் பெறுமானமுடையதே. தற்போதைய சூழலில் அரசியல் நீரோட்டத்தில் கலந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியினர் (JVP) ஒரு காலத்தில் ஆயுததாரிகளாகக் கட்டற்ற வன்மாளிகளாக வாழ்ந்திருந்தனர். அவர்களது கிளர்ச்சியினை ஒடுக்க, அரசு மேற்கொண்ட வன்மமானது பேரவலங்களைக் கட்டியெழுப்பியது. அத்தகைய வன்மத்தினால் பாதிக்கப்பட்ட தாயொருத்தியின் துன்பியலை Paanshu மிகவும் வெளிப்படையாகப் பேசுகின்றது.

எண்பதுகளின் இறுதியில் நிகழ்ந்த ஜே.வி.பியினரின் கிளர்ச்சியில் பாப னோனா (Nita Fernando) என்ற தாயின் மகன் காணாமற் போகிறான். ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த அந்தத் தாய், தன் மகனை அழைத்துச் சென்றவனுக்குத் தண்டனை கொடுக்கச் சட்டத்தினை நாடுகிறாள். அழைத்துச் சென்றவனின் மனைவி (Nadee Kammellaweera) கர்ப்பிணியாகக் காணப்படுகிறாள். கருணை முகிழ்க்க தாய்மை உணர்வின் வெளிப்பாட்டால் புதிய உறவின் இணைப்பாக்கமாகப் படம் நிறைவு பெறுகிறது. முதிர்தாயின் அவலத்தை நிதா பெர்ணான்டோ அற்புதமாக அளிக்கை செய்துள்ளார். அதே போலக் கர்ப்பிணிப் பெண் கதாபாத்திரத்தில் நதீகம்மெல்ல வீராவும் மிகச்சிறப்பாகப் பொருந் திப்போகிறார். இயக்குநர் விசாகேசா சந்திரசேகரம் சட்டநிபுணர் என்பதால், துறைசார்ந்த விடயங்களையும் நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார். தேசத்தின் அனைத்து நிலமும் அவலப் பண்பிலே ஒத்திசைவான தன்மையைத் தலைப்புப் புலப்படுத்துகிறது. (Paanshu என்றால் மண் என்று பொருள்) முள்ளிவாய்க்கால் அவலத்தை எப்படியாவது மூடி மறைத்து, சர்வதேசத்தை ஏமாற்றி விட அரசு எத்தனிக்கிறது. அனைத்தும் அறிந்தும் அறியாதது போல உலக நாடுகளும் நன்றாகவே நடிக்கின்றன. இந்நிலையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கப் பல்லாயிரக்கணக்கான உயிர்களை அரசு காவு வாங்கியமை உண்மையே என Title card வைத்த இயக்குநரின் நேர்மை பாராட்டுக்குரியதாகும். இறந்த காலம் இருண்மையானதே. எனினும் ஒளிமயமான எதிர்காலத்தினை நோக்கி ஒன்றிணைந்து பயணிப்பதே சிறந்ததெனப் படம் வலியுறுத்துகின்றது. காட்சி ஊடகத்தின் மூலம் வலிமையான அரசியல் விமர்சனத்தை எவ்வாறு நிகழ்த்தலாம் எனக் கற்றுக் கொடுக்கும் Paanshu நிறைவான படைப்பாகவே அமைந்துள்ளது.



வேதநாயகம் தபேந்திரன்



# சின்னனா ஒரு பிஸ்னஸ்

**1984** ஆம் ஆண்டு யாழ்ப்பாண நகரச் சூழல்.

அந்தச் சிறுவனுக்குப் பன்னிரண்டு வயது. நான்கு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் அவன் இரண்டாவது. படித்து முன்னேற வேண்டுமெனத் தீவிரமான ஆசை. ஆனால் தந்தையாரின் வருமானம் போதாது. தாயார் குடும்பப் பெண்.

தனது கல்விக்குத் தானே வருமானம் தேட என்னவழியென யோசித்தான். இயல்பாகவே வியாபாரம் தொடர்பான நாட்டம் அவனிடம் இருந்தது. அந்தப் பிஞ்சு மனதில் சிறுவியாபாரம் செய்வோமென ஓர் எண்ணம் வந்தது. போர் தீவிரம் பெற ஆரம்பித்த காலம். அப்போது அடிக்கடி மண்ணெண்ணைத் தட்டுப்பாடு வரும். மின்சாரம் என்பது எல்லா வீடுகளிலும் இல்லாத நிலைமை. ஆகவே வீதியோர மண்ணெண்ணை வியாபாரம் செய்யலாமென நினைத்தான்.

தனது சேமிப்பிலிருந்த சிறுதொகைக் காசுடன் உற்றவர் ஒருவரிடம் கடன் வாங்கி சைக்கிளில் பிளாஸ்ரிக் கானை வைத்துக் கொண்டு மண்ணெண்ணைக் குதம் உள்ள இடத்திற்குப் போனான். 5 லீற்றர் கிடைத்தது. யாழ் நகரம் சென்று மண்ணெண்ணை அளக்கும் தகர அளவீடுகளை வாங்கி வந்தான்.

பாடசாலை இல்லாத நேரங்களில் தனது அயலில் வீதியோரம் வைத்து விற்றான். சிறியதொரு தொகை இலாபம் வந்தது. இப்படியே மண்ணெண்ணை விற்று உழைத்துத் தாய்க்கும் சகோதரர்களுக்கும் கொடுத்தான்.

கிறிஸ்மஸ் காலத்தில் லொத்தர் மட்டை தயாரித்துக் கடைகளுக்கு விற்றான். அந்த வேலைகளைச் செய்வதற்குத் தனது வகுப்புச் சகமாணவன் ஒருவனை வேலைக்கு அமர்த்தினான்.

> **“வியாபாரத்தில் உழைத்த பணத்தை மீண்டும் வியாபாரத்தில் முதலிடும் ஒருவர் தான் முன்னேறுவார். உழைத்த காசின் பெரும் பகுதியைத் தமது சொந்தத் தேவைக்குப் பாவிப்பவர்கள் தொழிலில் வங்குரோத்து நிலையை அடைய வேண்டியது தான். வியாபாரம் ஒன்றை ஒருவர் ஆரம்பிக்கும் போது பெருமளவு முதல் அவரது சொந்த சேமிப்பாக அல்லது நன்கொடையாக இருக்க வேண்டும். வியாபாரத்தின் 80 வீத முதல் கடன் முதலாக இருப்பின் அவரால் உழைத்து நிமிரவே முடியாது.”**

அந்தச் சிறுவன் இளைஞர் பருவத்தை அடைந்த போது போரின் தீவிரம் காரணமாகவும் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடனும் மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு 1990 இல் புலம்பெயர்ந்தான். அங்கு போயும் எத்தகைய வியாபாரம் செய்து எப்படி முன்னேறலாம் எனப் பார்த்தான். துணிந்து சிறு முதலுடன் வியாபாரம் தொடங்கினான். காலத்துக்கு ஏற்ற வியாபாரங்களைச் செய்தான். இன்று ஒரு தொழிலதிபராக உயர்ந்து நிற்கிறான். சகோதரர்களையும் உறவினர்களையும் கூட வாழ வைத்துள்ளான்.

இந்தப் பதிவின் மூலமாகச் சொல்ல வரும் செய்தி யாதெனில் வியாபாரம் என்பது கூடப் பிறந்த ஒன்றாகவோ அல்லது இரத்தத்தில் ஊறிய ஒன்றாகவோ தான் இருக்க முடியும்.

வியாபாரம் செய்து பொருள் ஈட்டுவது என்பது மிக லேசான விடயமல்ல. திறமை மட்டும் போதாது. வாழ்வில் தியாகங்களையும் செய்ய வேண்டும். மேலே சொல்லப்பட்ட அந்தச் சிறுவன் தனது பொழுதுபோக்கிற்காக விளையாடி நேரத்தைக் கழிக்கவில்லை. அந்தச் சிறுவயதிலேயே உழைக்க வேண்டுமென்ற ஓர்மத்துடன் சிந்தித்தான் . செயல்பட்டான். உழைத்தான். முன்னேறினான்.

சிலரைப் பார்த்துள்ளேன் ஒரு பலசரக்குக் கடை போடுவோமெனப் பல இலட்சங்களை முதல் விட்டுத் தொடங்குவார்கள். ஆனால் கடை இடையிடையே ஒரு சில மணி நேரமோ அல்லது ஓரிரு நாள்களோ பூட்டப்பட்டிருக்கும். கேட்டால் கூறுவார்கள். ஒரு செத்த வீடு போனனான். சொந்தத்துக்குள்ள ஒரு கல்யாணக் கொண்டாட்டம்.

அந்த ஊரில் கோயில் திருவிழா. இப்படியே ஒரு காரணம் சொல்லி மூடுவிழாக்கள் தொடரும். விளைவு இவரது கடையை நம்ப இயலாது என வாடிக்கையாளர் வேறு கடைகளை நாடிப் போவார்கள். போன கடைக்காரனும் வந்த புதிதில் மலிவு விலையில் பொருளைக் கொடுத்து வாடிக்கையாக்கித் தன் வசமாக்கி விடுவார்.

வியாபாரம் எனப் புறப்பட்டால் இரவு பகல் பாராது கடையைத் திறக்க வேண்டும். தரமான பொருள்களை நியாய விலைக்கு விற்க வேண்டும். கடன் கொடுத்துக் கடனை நுட்பமாக வசூலிக்கத் தெரிய வேண்டும். எந்த வாடிக்கையாளருடன் எப்படிப் பழக வேண்டுமெனத் தெரிய வேண்டும். அப்போது தான் முன்னேற முடியும்.

சில பெயர் பெற்ற சாப்பாட்டுக் கடைகளைப் பார்த்திருக்கிறேன். முதலாளி தான் சமையல்காரராக நிற்பார். அவருக்கு மிக நம்பிக்கையான தொழிலாளி காசு வாங்கும் கவுண்டரில் நிற்பார். முதலாளிக்குச் சமையலின் கைப் பக்குவம் தெரிந்திருக்கும். அதனால் கடைக்குத் தேடி வரும் வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவார்.

சமையல் கட்டில் நிற்பதால் உணவுப் பொருள்களது சிக்கனங்கள், உணவு விநியோகத்தின் சிக்கனங்கள் பேணப்படும். தொழில் இலாபகரமாக ஓடும்.

கடை ஒன்றில் கூலிக்கு நின்று கஸ்டப்பட்டு பிறகொரு காலம் சொந்தமாக வியாபாரம் தொடங்கி உயர்ந்த முதலாளிகள் பின்னாளில் பிள்ளைகளால் அழிந்து போனதைக் கண்டுள்ளேன். தனது பிள்ளைகளை வியாபாரத்திற்குக் கொண்டு வந்து நேரடியாகக் காசாளர் வேலைக்கு விட்டிருப்பார்கள். அல்லது பிள்ளைகளின் ஆடம்பரங்களுக்கு எடுபட்டு வாகனங்களை வாங்கி அழிந்திருப்பார்கள்.

பிள்ளைக்குத் தனது தந்தை எப்படிக் கஸ்டப்பட்டு முன்னேறினாரெனத் தெரியாது. அதனால் வியாபாரத்தில் எப்படிச் சிக்கனமாகக் காசைச் செலவளிக்க வேண்டுமெனத் தெரியாமல் வியாபாரத்தை அழித்து விடுவார்கள்.

தனது மகனைக் கடையில் சாமான் நிறுக்க, கடையைத் துப்பரவாக்கவெனக் கூலித் தொழிலில் விட்டுப் பழக்கிய ஒருவரின் வியாபாரம் செழிப்பாகவும் சிறப்பாகவும் வந்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

தொழில் தெரிந்து கொண்டு வியாபாரம் செய்தவர் தான் முன்னேறுவார். அவர் நன்றாக இலாபம் உழைக்கின்றார். நாமும் வியாபாரம் செய்து பார்ப்போமென வியாபாரத்துக்கு வந்தவர்கள் தாமும் அழிந்து மற்றவரையும் அழிக்கும் கழுத்தறுப்பு வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

போர் முடிவுற்றதன் பின்னர் இப்படியான வியாபாரத்தில் ஈடுபடுவோர் தொகை தான் அதிகம். எந்த இடத்தில் என்ன வியாபாரம் செய்யலாம். எந்தக் காலத்தில் என்ன வியாபாரம் செய்யலாமெனத் தெரிந்து வைத்திருப்பவர்களே வெற்றி காண்கிறார்கள்.

வியாபாரத்தில் உழைத்த பணத்தை மீண்டும் வியாபாரத்தில் முதலிடும் ஒருவர் தான் முன்னேறுவார். உழைத்த காசின் பெரும் பகுதியைத் தமது சொந்தத் தேவைக்குப் பாவிப்பவர்கள் தொழிலில் வங்குரோத்து நிலையை அடைய வேண்டியது தான்.

வியாபாரம் ஒன்றை ஒருவர் ஆரம்பிக்கும் போது பெருமளவு முதல் அவரது சொந்த சேமிப்பாக அல்லது நன்கொடையாக இருக்க வேண்டும். வியாபாரத்தின் 80 வீத முதல் கடன் முதலாக இருப்பின் அவரால் உழைத்து நிமிரவே முடியாது.

கடன் முதலீடு வங்கிக் கடனாயின் ஓரளவு பரவாயில்லை. மீற்றர் வட்டிக்கு வாங்கிய கடனாயின் நிமிரவே முடியாது. குடும்ப உழைப்பும் வெற்றிக்குத் தேவையானது. குடும்ப அங்கத்தவர்கள் வியாபாரத்துக்குத் தமது நேரத்தை அர்ப்பணிப்பதன் மூலமாகவே செலவைக் குறைக்கலாம். எல்லாவற்றுக்கும் சம்பள ஆள்களை நம்பி இருந்தால் செலவு அதிகமாகி வருமானம் குறைந்து தொழில் படுத்து விடும்.

வேலைக்கு எடுக்கும் தொழிலாளரை வேலை நேரத்தில் உச்சமாக வேலை வாங்கத் தெரிந்த ஒரு முதலாளி தான் உயர்ந்த வருமானத்தைப் பெறுவான்.

வியாபாரம் தொடர்பாக வெற்றிக் கொடி நாட்டியவர்களது அனுபவப் பாடங்களைப் படிப்பது சிறந்தது. இன்று எம்மவர் பலர் எந்த வித முன்னறிவும் இல்லாமல் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கடனாளியாகி உள்ளனர்.

பணக்காரராகும் ஆசையில் அனுபவமற்று வியாபாரத்துறையில் காலடி எடுத்து வைக்கக் கூடாதென்பதே அறுதியான தகவல்.

■

# ஒரே நாடு – பௌத்த சிங்கள நாடு ஒரே சட்டம் மத்திய அரசின் கீழ்

◒ மு.தமிழ்ச்செல்வன்

ஒரே நாடு ஒரே சட்டம் என்பதற்கு அதனை அறிமுகப்படுத்தியவர்கள் என்ன விளக்கத்தைக் கொடுத்தாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரே நாடு ஒரே சட்டம் என்பது தற்போதைய சூழ்நிலையில் ஒரே நாடு அது பௌத்த சிங்கள நாடு, ஒரே சட்டம் எல்லாம் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் என்பதாகவே நோக்க வேண்டியிருக்கிறது.

காரணம் ஒன்று, மாகாண சபை அதிகாரங்களுக்குக் கீழ் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கை. இரண்டு, மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்ற பெயரில் மத்திய அரசின் கீழ்க் கொண்டு செல்லல். மூன்று, வடக்கு மாகாணத்தின் மிக முக்கிய பதவியான பிரதம செயலாளர் பதவிக்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரை நியமித்தமை. நான்கு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் பதவிகளுக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல். ஐந்து, மாவட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஊழியர்களிடம் மத்திய அரசின் கீழ் வருவதற்கான விருப்பத்தைக் கோரி விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டமை போன்ற பல நடவடிக்கைகளின் விளைவாகவே தமிழர்கள் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதனை மேற்படி நோக்கு நிலையில் பார்க்கின்றனர்.

மாகாணசபை உருவாகும்போது, அதிகாரப் பகிர்வினை எதிர்பார்த்திராத மாகாணங்களுக்கும் அந்த அதிகாரப் பகிர்வை வழங்கியமை. பசியுடன் இருந்தவர் உணவு கேட்டபோது பசி இல்லாதவர்களுக்கும் உணவுப் பொதி வழங்கியமைக்கு ஒப்பாகும். பசி இல்லாதவர்கள், கொடுத்தவர் திரும்பக் கேட் டால் தயக்கம் இன்றித் திரும்பக் கொடுப்பார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தான் பசி இல்லையே. அது போலவே வடக்கு, கிழக்கிற்கு வழங்க வேண்டிய மாகாண முறைமையை நாடு முழுவதும் கொடுத்தாலும் அந்த அதிகாரத்தைப் பிரித்து எடுக்கும்போது பிற மாகாணங்கள் மனம் உவந்து கொடுக்கும். ஆனால் வடக்கு கிழக்கின் நிலை அது அல்ல.

கடந்த மாதம் 14 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் பவித்திர வன்னியாராச்சி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

அதாவது 13 ஆவது அரசியலமைப்பின்படி மாகாணங்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஒன்பது மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்த யோசனையை முன் வைத்த போது அதற்கான நியாயப்படுத்தல் பின்வருமாறு இருந்தது.

இலங்கையில் தேசிய மருத்துவமனைகளில் காணப்படும் மருத்துவ சிகிச்சைகள், அறுவைச் சிகிச்சை மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கு சமமான வசதிகளை வழங்கி அனைத்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனை ஒன்றை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, தற்போது மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படுவதும் மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் நிறுவன வகைப்படுத்தலின் கீழ் காணப்படும் மாத்தளை, நாவலப்பிட்டி, எம்பிலிப்பிட்டி, அவிஸ்ஸாவெல, கம்பஹா, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளின் சேவை வழங்கலின் தரம், சமத்துவம் மற்றும் வினைத்திறன் போன்றவற்றை அதிகரிப்பதற்காகவும் இலகுவாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அவற்றை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவது பொருத்தமென இனங்காணப்பட்டுள்ளது. என கூறப்பட்டிருந்தது.

அபிவிருத்திக்கும் எந்த அமைச்சின் கீழ் அந்த வைத்தியசாலை வருகிறது என்பதற்கும் சம்பந்தம் இருந்தால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அதற்குப் பின்னர் மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட்ட காலிகராப்பிட்டி போதனா வைத்தியசாலையைக் காட்டிலும் பௌதீக மற்றும் ஆளணியில் பின்தங்கியிருப்பது ஏன் எனப் பலர் கேள்வி எழுப்புகின்றனர். இடிந்து விழும் அபாயத்திலிருந்த மகப்பேற்றுப்பிரிவு இடித்து அகற்றப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை ஒரு மகப்பேற்று விடுதிக் கட்டடத்தைக்கூட கட்டியெழுப்ப முடியாத நிலையில் மகப்பேற்றுக்கு செல்லும் தாய்மார்கள் அவலத்திற்குள் தள்ளப்பட்ட நிலை யாழ் போதனா வைத்தியசாலையில் காணப்படுகிறது.

ஆனால் மாகாணசபையின் ஆளுகைக்குள் இருக்கும் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் மாகாண சுகாதார அமைச்சராக இருந்த சத்தியலிங்கம் அவர்களது முன்முயற்சியால் நெதர்லாந்து அரசானது மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக வடமாகணத்திற்குரிய விசேட மகப்பேற்று பெண்ணோயியல் பிரிவினைப் பிரமாண்டமாக கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது.




எனவே கட்டடங்கள் கட்டப்படுவதற்கும் மாகாண அரசுக்கும் சம்பந்தமில்லை. அது உரிய அதிகாரிகளது செயலூக்கத்திலேயே தங்கியுள்ளது.

அண்மையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பல வருடகாலமாக அபிவிருத்தி எதுவும் செய்யப்படவில்லை என அந்த வைத்தியசாலையின் வைத்திய சங்கத்தினர் குற்றம் சுமத்தியிருந்தனர். இவ் வைத்தியசாலை மத்திய அரசின் ஆளுகையின் கீழ் உள்ள வைத்தியசாலையாகும்.



> அபிவிருத்தியைக் காரணம் காட்டி மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கை என்பது நாட்டின் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகப் பேசப்படும் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானதாகவே இருக்கும். மாகாண சபைகளுக்கு என அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பினும் அவையும் நாட்டின் மத்திய அரசின் கீழ் உள்ள ஒரு கட்டமைப்பே.

உதாரணமாக, மத்திய சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சில குடும்ப நல மாதுக்களும், கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் சில குடும்ப நல மாதுக்களும் ஒரே காலப்பகுதியில் சேவையில் இணைந்தவர்களாக இருந்தும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றுவோருக்கான தரநிலை உயர்வுகள் உரிய காலத்திற்குள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. காரணம் கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட அலுவலர்களுக்கான தரநிலை உயர்வுகள் கிழக்கிலேயே செய்யப்பட்டதால் உரிய காலத்தில் அவை செய்யப்பட்டுவிட்டன. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கிழக்கில் இருப்பினும் அவர்களது பெயர்வழிக் கோவைகள் கொழும்பில் இருப்பதால் தொடர் அவதானம் செலுத்த முடியாத பின்னூட்டங்களைப் பெற முடியாத நிலை, மொழிச் சிக்கல் எனப் பல்வேறு பாதகமான காரணிகளால் உரிய காலத்தில் தரநிலை உயர்வு கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

எனவே அபிவிருத்தியைக் காரணம் காட்டி மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கை என்பது நாட்டின் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகப் பேசப்படும் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரானதாகவே இருக்கும். மாகாண சபைகளுக்கு என அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பினும் அவையும் நாட்டின் மத்திய அரசின் கீழ் உள்ள ஒரு கட்டமைப்பே. எனவே அவற்றுக்கு அதிக வளங்களை ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி செய்வதற்கு அதனைத் தங்களது அதிகாரத்திற்குக் கீழ் கொண்டு சென்றே மேற்கொள்ள வேண்டும் என்பது பொருத்தமற்ற நியாயப்பாடு. மத்திய அரசு மாகாணங்களுக்குக் கீழ் வருகின்ற மாவட்ட வைத்தியசாலைகளுக்கு விசேட நிதி ஒதுக்கீடாக நேரடியாக ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முடியும் அல்லது மாகாணத் திறைசேரிக்கு ஊடாகவும் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய முடியும் அதில் பாரிய அளவு தடை இருப்பதாக இல்லை. கடந்த காலத்தில் அவ்வாறு இடம்பெற்றிருக்கிறது.

எனவே இது ஒரு புறமிருக்க வடக்குக் கிழக்கில் உள்ள பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் வடக்கில் மாத்திரம் சுமார் 51 பாடசாலை கள் அண்மைய காலத்தில் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதனை வடக்கைச் சேர்ந்த அரசின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் சாதனையாக ஊடகங்கள் மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் போட்டி போட்டுக் கொண்டு உரிமை கோரி வருகின்றனர். இதேவேளை பொது மக்கள் சிலர் அறிந்தும் அறியாமலும் தங்களுடைய பாடசாலைகளையும் தேசிய பாடசாலையாக மாற்றுமாறு கோரி மகஜர்கள் அனுப்பியும் போராட்டங்கள் நடத்தியுமுள்ளனர்.

இந்த நிலைமை என்பது பட்டுவேட்டிக்காக போராடிய ஒரு சமூகம் தான் கட்டியிருக்கும் கோவணத்தை தானே கழட்டிக்கொடுத்தமைக்கு ஒப்பானது.

தேசிய பாடசாலைகள் என்று பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு சென்றுதான் அப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு தேவையற்ற ஒன்று. அரசு தான் நினைத்தால் வளங்கள் குறைந்த பாடசாலைகளுக்கு விசேட நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய முடியும். இதனை தவிர ஏற்கனவே உள்ள தேசிய பாடசாலைகளுடன் ஒப்பிடும் சிறந்த, சிறப்பான செயற்பாடுகளுடன் மாகாண நிர்வாகத்தின் கீழ் பல பாடசாலைகள் காணப்படுகின்றன.

எனவே தேசிய பாடசாலைகள் என்பது ஒரு போர்வை. அபிவிருத்தியைக் காட்டி அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கு போர்த்தப்படுகிறது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் குறைப் பிரசவமாக இந்தியாவால் அறுவைச் சிகிச்சை மூலம் பெறப்பட்டதே 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம். இந்த அரசியலமைப்பு திருத்தம் மூலம் வழங்கப்பட்ட காணி பொலீஸ் அதிகாரங்கள் அரசியலமைப்பு உருவாக்கம் தொடக்கம் இன்று வரை மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனைத் தவிர அவ்வவ்போது வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்று நிருபங்கள் மூலமும் அதிகாரப் பறிப்புக்கள் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது வெளிப்படையாகவே மாகாணங்களுக்குக் கீழ் உள்ள நிர்வாக அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெற்று வருகிறது. கல்வி, சுகாதார துறைகளுக்குள் மாகாணங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் இவ்வாறு மீளப்பெறப்படுகின்றபோது மகாணா சபை என்பது தோல் இருக்க சுளை இல்லாத பழமே.

ஆகவே நாட்டின் நீண்ட காலப் பிரச்சனைக்குத் தீர்வாக ஒரு புறம் அதிகாரப் பரவலாக்கல், 13 பிளஸ் பற்றி பேசிக் கொண்டிருக்க, மறுபுறம் இருக்கின்ற அதிகாரங்களை மத்தி பறித்தெடுத்துக்கொள்ளும் செயற்பாடுகள் இனிதே நடந்து வருகிறது. ■





செல்வழகன்

# சமூகச் சீரழிவிற்கு வழிகோலும் வேலையின்மை

> **7 வீதமாக இருந்த நாட்டின் வேலையற்றோர் வீதம் 16 வீதமாக உயர்ந்துள்ளது. இது பொதுவான ஒரு கணிப்பீடாயினும் கொரோனாவின் பின்னரான காலத்தில் இருக்கின்ற வேலைகளில் இருந்தும் ஊழியர்கள் பணியில் இருந்தும் நிறுத்தப்படும் சூழலில் இந்த வீதமானது மேலும் உயர்வானதாகவே இருக்கும். இது 25 வீதம் வரை உயரக்கூடும்.**

மன்னாரில் இருந்து முதல் தமிழ்ப் பெண் விமானியான இவாஞ்சலினைப் பற்றி ஊடகங்களில் செய்தி வெளிவந்து இரண்டு தினங்களின் பின்னர் நான் இன்னொரு விமானியைச் சந்தித்தேன். அவர் மலையகம் நுவரெலியாவைச் சேர்ந்தவர். கொழும்பிலும், இங்கிலாந்திலும் சில கோடிகள் செலவு செய்து படித்து விமானியாகி இருந்தார். தென்கிழக்காசிய நாடொன்றின் விமான சேவையில் விமானியாகப் பணியில் சேர்ந்தார். நான்கரை இலட்ச ரூபா சம்பளத்தில் சில மாதங்கள் பணியாற்றினார். கொரோனா வந்து விமான சேவைகள் தடைப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்குத் திரும்பியவர் ஒரு வருடம் கடந்தும் இன்னமும் வேலைக்கு அழைக்கப்படவில்லை. சம்பளமும் இல்லை. நல்லவேளை அவர்களுக்கு இருந்த தேயிலை மற்றும் மரக்கறித் தோட்டங்களை நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்.

விமான சேவைகள் தடைப்பட்டதால் - மட்டுப்படுத்தப்பட்டதால் வேலையிழந்தோர் பலர். அங்கு பொருட்களை ஏற்றி இறக்குவோர் உட்பட ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் அனைவருமே வேலையின்றித்தான் உள்ளனர். விமான நிலைய சேவைக்காகவே ஓடும் ஆயிரக்கணக்கான வாடகை வாகன மற்றும் பயணிகள் சொகுசு வாகன ஓட்டுநர்கள், நடத்துநர்கள் வேலையிழந்து போயுள்ளனர். நாடு முழுவதிலும் இருந்தும் விமான நிலைய சேவைக்காக ஓடுகின்ற ஹயஸ் வாகனங்கள், அழைப்பு ரக்சிகள் (Call Taxi) என்பனவற்றின் உரிமையாளர்களும் சாரதிகளும் வேலையின்றி கஷ்டப்படுகின்றனர். விமான நிலையத்துக்குள் தீர்வையற்ற பொருட்களை விற்கும் கடைகளை நடத்துவோரும், அங்கு பணி புரிபவர்களும் வேலையின்றியே கஷ்டப்படுகின்றனர்.

இன்னொரு நாள் ஊடக நண்பரொருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்காவது வேலை எடுக்கலாமா? என்று கேட்டார். ஒரு பியோன் வேலை என்றாலும் பரவாயில்லை என்றார். அவர் ஒரு ஒளிப்பதிவாளர், படத் தொகுப்பாளர், தயாரிப்பாளர் எனப் பல நிலைகளிலும் பணியாற்றியவர். ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றிய அவர் புதிதாகத் தொடங்கப்பட்ட தொலைக்காட்சி ஒன்றில் கூடிய சம்பளத்தில் பணியில் இணைந்து செயற்பட்டிருந்தார். இப்போது குறித்த தொலைக்காட்சி நிறுவனம் சம்பளம் வழங்க நிதியில்லை எனத் தெரிவித்து சுமார் 40 பணியாளர்களைப் பணியில் இருந்து இடைநிறுத்தி உள்ளது. இவர் முன்னர் கடமையாற்றிய நிறுவனமும் கூட தனது பணியாளர்கள் சிலரை நிறுத்தியுள்ளது. சிலருக்கு அரைவாசிச் சம்பளமே வழங்கப்படுகிறது.

ஊடக நிறுவனங்கள் பலவற்றின் கதவுகளைத் தட்டியும் எந்தப் பலனுமில்லை. எல்லாமே வருமானமில்லை என்ற ஒப்பாரியையே முன்வைக்கின்றன. திருமண வைபவங்களுக்கான வீடியோ எடுக்கும் சில நிறுவனங்களை அணுகியும் பார்த்தார். எல்லாமே தொழிலின்றி அல்லற்படுகின்றன. இந்த நிலையில் யார் வேலை கொடுப்பார்? இறுதியில் எங்காவது பியோன், காவலாளி அல்லது பாதுகாப்புச் சேவை வேலையாவது கிடைத்தால் பரவாயில்லை என்ற நிலையில் என்னிடம் தொடர்பு கொண்டார்.

வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு இலக்கு எல்லைகள் (Target) விதிக்கப்படுவது வழமையாகும். குறித்த இலக்கு எல்லையை அடைந்தால்தான் மேலதிக நன்மைகள் கிட்டும். இந்த எல்லை அடையப்பட வேண்டும் என்பது கண்டிப்பானது. அதற்காக நாயாய் பேயாய் அலைந்துதான் காரியமாற்ற வேண்டும். அதற்கும் இப்போது சவாலான காலமாகும். எவ்வளவு கீழிறங்கி வந்தும், தமது இலக்கினை நிறைவேற்ற முடியாமல், தலைமையலுவலக நெருக்கடிகளை நிறுவன முகாமையாளர்களும், ஊழியர்களும் எதிர்கொள்கிறார்கள். இந்த நிறுவனங்களில் அமைய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் இது போதாத காலம். அவர்கள் நிரந்தரமாக்கப்படும் சந்தர்ப்பங்கள் அருகி வருகின்றன.

உலகெங்கும் கொரோனா நெருக்கடியின் பின்னர் பல இலட்சம் மக்கள் வேலையிழந்துள்ளனர். பெரிய நிறுவனங்கள் பலவும் தமது ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்து விட்டன. புலம்பெயர்ந்த எம்மவர்களே வேலைக்குப் படாதபாடுபடுகின்றனர் எனில் இலங்கை எம்மாத்திரம். நாடு வங்குரோத்து நிலையை அண்மித்துள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் அபாயச் சங்கு ஊதும் ஒரு நாட்டில் எப்படி வேலை வாய்ப்பை எதிர்பார்க்க முடியும்?

7 வீதமாக இருந்த நாட்டின் வேலையற்றோர் வீதம் 16 வீதமாக உயர்ந்துள்ளது. இது பொதுவான ஒரு கணிப்பீடாயினும் கொரோனாவின் பின்னரான காலத்தில் இருக்கின்ற வேலைகளில் இருந்தும் ஊழியர்கள் பணியில் இருந்தும் நிறுத்தப்படும் சூழலில் இந்த வீதமானது மேலும் உயர்வானதாகவே இருக்கும். இது 25 வீதம் வரை உயரக்கூடும்.

இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பாக, குறிப்பாக இலங்கையின் வருமான மார்க்கங்கள் தொடர்பாக ஒரு தெளிவான நிலைப்பாடில்லாமல் எடுத்த எடுப்பில் மேற்கொண்ட அரசியல் நியமனங்களின் விளைவுகள் ஒரு புறம். ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு, பட்டதாரிப் பயிலுநர் வேலைவாய்ப்பு எனப் பெருமளவானோர் அரச வேலைக்குள் இணைக்கப்பட்டு, அவர்களுக்கு சரியான கடமைப் பொறுப்புக்கள் வழங்கப்படாமல் சம்பளம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் மக்களின் வரிப் பணம் வீண் விரயமாக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு அரசாங்கத்தை நோக்கித் திரும்பியுள்ளது. உண்மையும் அதுதான். பிரதேச செயலகங்களில் வேலையில்லாமல் இருக்கும் அத்தகையவர்களை நாம் தரிசிக்க முடிகிறது. மறுபுறம் அவர்களுக்கான நிரந்தர நியமனமும் தள்ளிப் போகும் நிலையே உள்ளது.

தனியார் துறை நிறுவனங்கள் பலவும் பணியாளர்களைக் குறைத்து விட்டன. பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டவர்கள் தொழிலின்றி முடக்கப்பட்டுள்ளனர். தொழிலின்மை என்பது சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றது. குடும்ப வன்முறைகள், குடும்பச் சண்டைகள், சமூகக் குழு மோதல்கள், சமூகச் சீர்கேடுகள் என இவை விஸ்வரூபமெடுக்க ஆரம்பித்து விட்டன. ஒட்டுமொத்த சமூகச் சீரழிவிற்கு வித்திடும் காரணிகளில் ஒன்றாக இந்த வேலையின்மை மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■



கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

ஆசிரியர்



# தொடரும் அநீதி நீதி மறுப்பும் நீதி கோரலும்

*(04)*

“பிறத்தி என விலக்கி வைத்தல் நீதியின் எந்த முறையிலானது நண்பரே! சேர்ந்திருப்போம் என்பது உங்களின் கீழே அடங்கியிருத்தல்தானா?”

புறம்போக்கு நிலத்தில் பிறத்தியாரை இருத்துவதைப்போலவே எரிந்த காட்டின் நடுவிலும் ஓரங்களிலும் குடிசைகளைப் போட்டுக் கொண்டிருந்த மக்களைப் பாம்புக்கும் நுளம்புக்கும் யானைக்கும் உலைத்துக் கொண்டிருந்தன.

ஏறக்குறைய, காட்டுவாசிகளைப் போலவே இருந்தனர். கொழுத்தும் வெயிலும் கொட்டும் மழையும் பாடாய்படுத்தியது.

“அப்பெல்லாம் புள்ளைங்கள எப்பிடிக் காப்பாத்துறது எண்ணே புரியல்லப்பா. ஒரு மழைக்கே தாக்குப் பிடிக்க முடியாம இருக்கும். அந்த மழையில ஐஞ்சு பத்து எண்ணு பிஞ்சிப் புள்ளைங்கள்ளாம் செத்துத் தொலையும். வேற என்னதான் வழி?” என்று அந்த நாட்களைத் துயரத்தோடு நினைவு கூருகிறார் தருமபுரத்திலிருக்கும் மூதாட்டி கருப்பாயி முத்துச்சாமி. எண்பத்தியாறு வயதுடைய இந்த முதிய பெண்ணிடம் சொல்வதற்கு ஏராளம் கதைகள் உள்ளன. அத்தனை கதையும் நம் மனச்சாட்சியை உலுக்குவன. கேள்விகளை எழுப்புவன.

பகல் முழுதும் எறிக்கும் வெயிலில் போய் வேலை செய்ய வேண்டும். அல்லது கொட்டும் மழையில் நின்று உழைக்க வேண்டும். தினக்கூலிகளின் விதி இதை விட வேறு எப்படி இருக்கும்?

இரவு யானைக்கும் பாம்புக்கும் நுளம்புக்கும் அஞ்சிப் பாதித் தூக்கத்தில் விழித்திருக்க வேண்டும். நெருப்பை நாலு திக்கிலும் மூட்டிவிட்டு வீட்டைச் சுற்றிக் காவலிருக்க வேண்டும்.

இதை விட நல்ல நீரில்லை, நல்ல சாப்பாடில்லை, நல்ல சூழல் இல்லை என்ற காரணங்களினால் போசாக்கில்லாத நிலையில் நோய்த்தாக்கம் வேறு ஆட்டிப்படைத்தது. “பனையால் விழுந்தவரை மாடு ஏறி மிதித்தது” பழைய கதை என்றால் “மலையால் வந்தவரை காடேறி மிதிக்கிது” என்று புதிய கதை தொடர்ந்தது.

அடுத்தது, போக்குவரத்துப் பிரச்சினை, பள்ளிக் கூடப் பிரச்சினை என்று எல்லாமே பிரச்சினையாகவே இருந்தன. ஏழைகளுக்கும் கூலிகளுக்கும் பிரச்சினையன்றி வேறு எதுதான் கிடைக்கும்?

இந்த நிலையில் முதல் தலைமுறை எதுவுமே செய்ய முடியாமல் அப்படியே கூலிகளாக உக்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் எவரும் தொடர்ந்து படிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இதைப்பற்றி அக்கறைப்படுவதற்கு அன்று யாரும் இருக்கவுமில்லை. அப்பொழுது இன்றுள்ளதைப்போல என்.ஜீ.ஓ (NGO)க்களும் பெரிதாக வளர்ச்சியடைந்திருக்கவில்லை. ஆகவே இப்போதையைப் போல வாழ்வாதாரம் வழங்குகிறோம். அகதிகளுக்கு உதவுகிறோம். வீடு கட்டித் தருகிறோம். இலவச மின்னிணைப்புக் கிடைக்கும். குறைந்த கட்டணத்தில் நீர் விநியோகம் கிடைக்கும் என்று யாரும் வந்து எதிரே நிற்கவில்லை. இவர்களுக்காக எந்தக் கொடிகளும் அசையவுமில்லை.

“காடோ மேடோ முள்ளோ கல்லோ நீயாகவே எழுந்து வா”

**நல்ல நீரில்லை, நல்ல சாப்பாடில்லை, நல்ல சூழல் இல்லை என்ற காரணங்களினால் போசாக்கில்லாத நிலையில் நோய்த்தாக்கம் வேறு ஆட்டிப்படைத்தது. “பனையால் விழுந்தவரை மாடு ஏறி மிதித்தது” பழைய கதை என்றால் “மலையால் வந்தவரை காடேறி மிதிக்கிது” என்று புதிய கதை தொடர்ந்தது.**

என்று விதியுரைத்தது.

மனித நேயம் அநேகமாகப் பொய்யுரைத்தது.

ஆனால் மனித இயல்பென்பது எந்த நெருக்கடிச் சூழலிலும் தன்னைத் தக்க வைத்துக் கொண்டு முன்னகர எத்தனிப்பதல்லவா. ஏன், உயிர்களின் இயல்பே அப்படித்தானே.

குளிர் அடர்த்தியாகும்போது துருவத்துப் பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் வலசைகளாகப் பறப்பது எதற்காக? தம்மைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத்தானே. யானைகளும் பன்றிகளும் மான்களும் கூட ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எதற்காக நகர்ந்து செல்கின்றன? தமக்கான உணவுக்காகவும் நீருக்காகவும் அல்லவா!

சின்னஞ்சிறு எறும்புகள் கூட எப்படியோ தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்கின்றன.



அப்படித்தான் இந்த மக்களும் அவ்வளவு அலைச்சல்கள், புறக்கணிப்புகள், ஒடுக்குதல்கள், துயரங்களின் மத்தியிலும் மெல்ல மெல்லத் தங்களை நிலைப்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால் அது எளிதாக இருக்கவில்லை.

பாருங்கள் என்னவெல்லாம் நடந்திருக்கிறது என்று. “வெட்டித்துப்புரவு செய்த காட்டுக் காணிகளில் குடிசைகளை மட்டும் போட்டுக் கொள்ளுங்கள். வீடு கட்டுகிற வேலையை எல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம்” என்று அப்போது கிளிநொச்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வீரசிங்கம் ஆனந்தசங்கரியே இந்த மக்களை எச்சரித்திருக்கிறார். இதை இன்னும் சிலர் துயரத்தோடு நினைவு கூருகிறார்கள்.

1970 களில் கிளிநொச்சியில் தீவிரமான அரசியல் செயற்பாட்டில் இயங்கிய செல்லையா குமாரசூரியர் கூட இந்த மக்களுடைய நலன்களைக் குறித்து விசேட கவனமெடுக்கவில்லை. ஆனால் அவர் அப்போது ஏறக்குறைய மூவாயிரம் வரையான கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய மக்களுக்கு வேலை வாய்ப்புகள், காணி போன்றவற்றில் வாய்ப்புகளை அழித்திருக்கிறார். குறைந்த பட்சம் இந்த மக்கள் வாழ்கின்ற இடங்களில் பொதுக்கிணறுகளைக் கூட அமைக்கவில்லை.

இதெல்லாம் இன்று முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளல்ல. வரலாற்றுண்மைகளாகும். இப்படி வஞ்சிக்கப்பட்ட வரலாற்றிற்கூடாகவே இவர்கள் தங்களை மெல்ல மெல்லக் கட்டியெழுப்பத் தொடங்கினர்.

இதில் இடத்துக்கிடம் வேறுபாடுகள் காணப்பட்டன. வவுனியாவில் தங்கியிருந்த இந்த மக்களை காந்தியம் அமைப்பைச் சேர்ந்த டொக்ரர் ராஜசுந்தரம், டேவிட் ஐயா போன்றோர் கவனித்தனர். இவர்கள் செய்த வேலை இந்த மக்களை வவுனியாவின் எல்லைப் புறங்களில் கொண்டு சென்று குடியமர்த்தியதே.

ஆனால் இந்தக் குடியேற்றங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக இந்த மக்களோடு இணைந்து வேலைகளைச் செய்தனர்.

ஒரு கட்டம் வரையில் இந்த மக்களுக்கு அது தேவையாகவும் ஆறுதலாகவும் இருந்தது. ஆனால் இவர்கள் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட கையோடு இவர்களுடைய நிலை நெருக்கடிக்குள்ளாகியது.

எல்லைப் புறங்களில் குடியமர்த்தப்பட்டதால் இன வன்முறையும் அரச படைகளின் அத்துமீறல்களும் இவர்களை நேரடியாகப் பாதித்தது. ஏனென்றால் இவர்களே அடி வாங்கக் கூடிய முன்னரங்கினராக (Buffr) நிறுத்தப்பட்டிருந்தனர் அல்லவா!

இதனால் மலையத்திலிருந்து அடிவாங்கி வந்தவர்கள் இங்கும் அடிவாங்க வேண்டியிருந்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தோருக்கு இந்த அவலம் இல்லை என்றாலும் புறக்கணிப்பின் அரசியலால் நிறையக் கஸ்ரங்களை எதிர் கொண்டனர்.

கிளிநொச்சியில் ஒரு தொகுதியினர் ஒன்று சேர்ந்து ஒரு பிரதேசத்தைத் தெரிவு செய்து காடுகளை வெட்டி அங்கே குடியேறினர். அல்லது பின்னாளில் இந்த இடங்களில் விடுதலை இயக்கங்கள் குடியேற்றங்களைச் செய்தன.

அந்தக் கிராமங்கள்தான் இன்றுள்ள பாரதிபுரம், தொண்டமான் நகர், மலையாளபுரம், செல்வா நகர், ஊற்றுப்புலம், ஜெயபுரம், ஆனைவிழுந்தான், மணியங்குளம், இந்திராபுரம், சதாபுரம், முறிப்பு, காந்தி கிராமம், பொன்னகர், அம்பாள்குளம் போன்றவை.

நாற்பது ஆண்டுகளாகியும் இந்தக் கிராமங்கள் இன்னும் எப்படியுள்ளன என்று பார்த்தால் எல்லாமே புரியும்.

(தொடரும்)

# யார் அந்த மின்னல் வேக வீரர்?

சி.விமலன்




கொரோனாத் தொற்றுக் காரணமாக நடக்குமா? நடக்காதா? என்று சந்தேகப்பட்ட டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஒரு வாரத்தைக் கடந்து வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒலிம்பிக்கைப் பொறுத்தவரை அதில் இடம்பெறும் அனைத்து விளையாட்டுக்களும் ரசிகர்களைக் கவர்ந்தாலும் 100 மீற்றர் ஓட்டப் போட்டிக்கு என்று ஒரு தனி மவுசு இருக்கின்றது. காரணம் இந்த உலகின் அதிகவேக ஓட்டக்காரர் யார் என்பதை அறிவதற்கான ஆவல் தான் அது. நடைபெற்ற அனைத்து ஒலிம்பிக் போட்டிகளினதும் 100 மீற்றர் ஓட்டப் போட்டிகள் குறித்தும் எழுதுவது இந்தப் பத்தியின் நோக்கம் இல்லை என்றாலும் 1984 லொஸ் ஏஞ்சல்ஸ் போட்டிகளில் இருந்து 100 மீற்றர் புள்ளி விபரங்களைக் கவனத்தில் கொள்கின்றேன்.

ஏனென்றால் அந்த ஒலிம்பிக்கில் இருந்துதான் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி 10 செக்கன்களுக்குள் ஓடி முடிக்கப்பட்டது. அந்தவகையில் அன்றில் இருந்து இறுதியாக நடைபெற்ற 2016 றியோ ஒலிம்பிக் போட்டிகள் வரை ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரத்தை கீழ் வரும் அட்டவணை மூலம் ஒரே பார்வையில் அறிந்து கொள்ளலாம்.


| ஆண்டு | நகரம் | வெற்றியாளர் | நாடு | நேரம் |
|---|---|---|---|---|
| 1984 | லொஸ்ஏஞ்சல்ஸ் | கார்ல் லெவிஸ் | அமெரிக்கா | 9.99 செக்கன் |
| 1988 | சியோல் | கார்ல் லெவிஸ் | அமெரிக்கா | 9.92 செக்கன் |
| 1992 | பார்சிலோனா | லிங்போர்ட் கிறிஸ்ரி | பிரிட்டன் | 9.96 செக்கன் |
| 1996 | அட்லாண்டா | டொனவன் பெய்லி | கனடா | 9.84 செக்கன் |
| 2000 | சிட்னி | மௌறிஸ் கிறீன் | அமெரிக்கா | 9.87 செக்கன் |
| 2004 | ஏதென்ஸ் | ஜஸ்ரின் கட்லின் | அமெரிக்கா | 9.85 செக்கன் |
| 2008 | பீஜிங் | உசைன் போல்ட் | ஜமைக்கா | 9.69 செக்கன் |
| 2012 | லண்டன் | உசைன் போல்ட் | ஜமைக்கா | 9.63 செக்கன் |
| 2016 | றியோடி ஜெனீரோ | உசைன் போல்ட் | ஜமைக்கா | 9.81 செக்கன் |

2004 வரை ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் ஆதிக்கமே இருந்து வந்த நிலையில் இந்த வரலாற்றை 2008 இல் இருந்து சிறிய தீவான ஜமைக்காவில் இருந்து வந்த உசைன் போல்ட் மாற்றி எழுதியிருந்தார்.

அந்தவகையில் 1999 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் மௌறிஸ் கிறீன் 9.79 செக்கன்களில் ஓடிப் படைத்த உலக சாதனையைத் தான் 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் உசைன் போல்ட் 9.69 செக்கன்களில் ஓடி முறியடித்தார். பின்னர் 2009 பேர்லினில் நடைபெற்ற தடகளப் போட்டியில் 100 மீற்றரை 9.58 செக்கன்களில் ஓடி முடித்து தனது சாதனையைத் தானே முறியடித்திருந்தார். அது போலவே 1996 ஆம் ஆண்டு அட்லாண்டா ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் மைக்கல் ஜோன்சன் 19.32 செக்கன்களில் ஓடிப் படைத்த உலகசாதனையைத் தான் 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் உசைன் போல்ட் 19.30 செக்கன்களில் ஓடி முறியடித்தார். பின்னர் 2009 பேர்லினில் நடைபெற்ற தடகளப் போட்டியில் 200 மீற்றரை 19.19 செக்கன்களில் ஓடி முடித்து தனது சாதனையைத் தானே புதுப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.




அது மாத்திரமல்லாமல் இறுதி 3 ஒலிம்பிக் போட்டிகளிலும் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் உசைன் போல்ட் தங்கம் வென்றதோடு 4 X 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் ஜமைக்காவே தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்தது. ஆனாலும் துரதிர்ஸ்டவசமாக 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் 4 X 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஜமைக்கா அணியின் நெஸ்ரா கார்டெர் ஊக்கமருந்து பாவித்தமை கண்டு பிடிக்கப்பட்டமையால் பின்னர் அந்தத் தங்கப்பதக்கம் இரண்டாவதாக வந்த ரினிடாட் & டுபாக்கோ அணிக்கு வழங்கப்பட்டது.



இதை ஏன் தற்போது நினைவு படுத்துகிறேன் என்றால் 2017 ஆம் ஆண்டு உசைன் போல்ட் சர்வதேச தடகளப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே இம்முறை 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கத்தை வெல்லப்போகும் அந்த வீரர் யார் என்ற கேள்வி இயல்பாகவே ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. இது குறித்து உசைன் போல்டிடமே ஊடகம் ஒன்று, கேள்வி கேட்டிருந்தது. அதற்கு அவர் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீராங்கனைகள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீரர்களின் பெறுபேறுகள் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். ஏனென்றால் நடைபெற்று முடிந்த இந்தப் பருவகாலத்தில் அவர்களது பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லை.

ஜமைக்காவின் தற்போதைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர் ஜொகான் பிளேக். அவர் இந்தப்பருவகாலத்தில் 100 மீற்றர் தூரத்தை 9.95 செக்கன்களில் ஓடி முடித்தது தான் சிறந்த பெறுதியாக உள்ளது. அவர் அதனை மேம்படுத்த வேண்டி உள்ளது. ஆனால் இந்தப் பருவகாலத்தில் அமெரிக்க வீரர்களான ட்ரைவோன் ப்ரோம்மல் 9.77 செக்கன்களிலும் றொனி பேகர் 9.85 செக்கன்களிலும் பிரெட் கெர்லி 9.86 செக்கன்களிலும் தென்னாபிரிக்காவின் அகானி சிம்பைன் 9.84 செக்கன்களிலும் 100 மீற்றரை ஓடியுள்ளார்கள்.

அதுபோல 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அமெரிக்காவின் ஆதிக்கமே மேலோங்கி உள்ளது. 2019 டோகாவில் தங்கப்பதக்கம் வென்ற நோவா லைல்ஸ் சென்ற மாதம் அமெரிக்காவில் நடைபெற்ற போட்டியில் 200 மீற்றரை 19.74 செக்கன்களிலும் கென்னி பெட்னாரெக் 19.78 செக்கன்களிலும் இருபது வயதுக்குட்பட்ட 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் உலக சாதனை படைத்த 17 வயதான எரியன் நைற்றன் 19.84 செக்கன்களிலும் ஓடி முடித்துள்ளார்கள். அத்தோடு 2019 டோகாவில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 X 100 அஞ்சலோட்டப் போட்டியில் ஜமைக்கா ஆண்கள் அணி எந்தவொரு பதக்கத்தையும் வெல்லவில்லை.


இவற்றைக் கருத்திற்கொண்டே இம்முறை ஒலிம்பிக்கில் மேற்படி போட்டிகளில் ஜமைக்கா வீரர்கள் பதக்கம் வெல்வதற்கான வாய்ப்பை நான் காணவில்லை என்று கூறியுள்ளார். அத்தோடு மேற்படி 3 போட்டிகளில் இரண்டில் அமெரிக்கர்கள் பதக்கம் வெல்வதற்கான வாய்ப்பு உள்ளது. குறிப்பாக ட்ரைவோன் ப்ரோம்மல் மற்றும் றொனி பேகர் ஆகியோரை வெற்றி மேடையில் எதிர்பார்க்கிறேன். அமெரிக்கர்கள் மேற்படி போட்டிகளில் ஒலிம்பிக் மேடையில் முதலிடம் பெற்று சில காலம் ஆகி விட்டதனால் இம்முறை அவர் கள் மீளவும் அதனை அடைவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தோன்று கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.




உசைன் போல்ட் தவிர ஜமைக்கா மண் ஜொகான் பிளேக், அசாபா பவல், நிக்கல் ஆஷ்மீட், மைக்கல் பிறேரர் போன்ற திறமையான குறுந்தூர ஓட்ட வீரர்களையும் உருவாக்கி உள்ளது. காரணம் அந்த மண்ணின் தனித்துவமாக விளங்குவதே விளையாட்டுக் கலாச்சாரம் தான். ஜமைக்காவில் ஆண்டுதோறும் பள்ளிகளில் நடைபெறும் தடகளப் போட்டிகள் Champs என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. அரங்கு நிறைந்த போட்டிகளாக அவை நடத்தப்பட்டு தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. அந்தளவிற்கு தடகளப் போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளித்துவரும் ஒரு மண்ணில் இருந்து தோன்றி உலக சாதனை படைத்து ஓய்வு பெற்ற உசைன் போல்ட்டின் வெற்றிடம் நிரப்பப்படாமல் போனால் அது நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாததாகவே இருக்கும். ■




## வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- ..............................................................................

தரம்:- ..............................................................................

கற்கும் பாடசாலை:-..............................................................................

விலாசம்:- ..............................................................................

..............................................................................

தொலைபேசி இலக்கம்:-..............................................................................

**பிள்ளைகளே!**

**உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.**

***அனுப்பவேண்டிய இறுதித் திகதி 04.08.2021***

# திருடனின் நேர்மை



ஓர் ஊரிலே அழகப்பன் எனும் திருடன் இருந்தான். அவன் பகற் பொழுதிலே வீடுகளை நோட்டமிடுவான். இரவிலே சென்று திருடுவான். ஒருநாள் வழக்கம் போல வீடுகளை நோட்டமிட்டவாறு சென்றான். அப்போது ஒரு பாட்டி அவனை அழைத்தார். “இன்று எனது மகனின் நினைவு நாள் எங்கள் வீட்டிலே சாப்பிட்டு விட்டுச் செல்லப்பா” என்றார். அவனும் திருப்தியாக உணவருந்தி விட்டு நன்றி கூறிச் சென்றான். பாட்டியின் செயலைக் கண்ட அயலவர்கள் ஏசினார்கள். “இன்று இரவு உங்கள் வீட்டிலே தான் திருடுவான். கவனமாக இருங்கள்” என எச்சரித்தார்கள். அவ்வூரிலே தொடர்ச்சியாகப் பலவீடுகளில் களவு போனது. ஆனாலும் அந்தப் பாட்டியின் வீட்டிலே எதுவுமே திருட்டுப்போகவில்லை. வியப்படைந்த அயல் வீட்டுக்காரி ஒருத்தி “அவன் உங்கள் வீட்டிலே திருடாதது ஆச்சரியமாக இருக்கிறது” என்று அந்தப் பாட்டியிடம் கூறினாள். “அவன் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதில்லை என்பதை அறிந்தேன். அவனை அழைத்து உணவு கொடுத்தேன்” என்று சிரித்தபடியே கூறினார் பாட்டி!

**த.அக்ஷிகா**
யா/இந்து மகளிர் கல்லூரி
தரம் -07




கல்வி போலொரு
செல்வமில்லையே - கலைச்
செல்வி போலொரு
தெய்வமில்லையே
முப்பொழுதும் கல்வியே
கண்ணாய்
எப்பொழுதும் சுமந்திடுவோம்
மனதினிலே

**ச.பூர்விகா**



**கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
செல்வி வி.சுவர்ணவி
தரம் - 02
யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி**

### பாராட்டு பெறுபவர்கள்

| | |
|---|---|
| **பி.அக்ஷையா**<br>தரம் - 01<br>யா/கட்டைவேலி மெ.மி.த.க.பா | **ச.சதுமிதா**<br>தரம் - 05<br>யா/கெருடாவில் இ.த.க.பா |
| **ச.கஜனிகன்**<br>தரம் - 04<br>மு/பண்டாரவன்னியன் அ.த.க.பா | **த.பிருத்வி**<br>முன்பள்ளி<br>மகாத்மா முன்பள்ளி |

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564






# vacancy

**Programmer(web)**

**Qualification**

- ✯ Bsc in computer science or eqwlent north (1-2 years) experiance
- ✯ Knowledge in PhP and or Asp.Net technology
- ✯ Clear understanding in RDBMS (Preterably MYSQL)
- ✯ HTML, CSS, Javascript and or any JS framework preferably node.Js
- ✯ Knowledge in mobile app development
- ✯ Should be a team runner



**Web designer**

**Qualification**

- ✯ Diploma /Nvq in web designing
- ✯ 1 -2 Year (5) experience
- ✯ Clear knowledge in HTMl, CSS and Adobe technology ( Photo shop frame work) Bootsfrap and / or any web design
- ✯ Knowledge in PHP/ ASP. Net and javascript preferred
- ✯ Shuld be a team runner

**Please sent your resume to careers@needogroup.com**

**Kanakasabai Building Block, Point Pedro Road, Nelliyadi.**
**021 226 25 64**
**077 7317 712**

## தேவை

பருத்தித்துறை, மந்திகை, கரவெட்டி, துன்னாலை ஆகிய பகுதிகளில் 4 - 5 பரப்பில் வீடு கட்டக்கூடிய காணி தேவை.

**தொடர்புகளுக்கு:- 0771102395**



## விற்பனைக்கு

பருத்தித்துறை, கிராமக்கோடு பகுதியில் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

**தொடர்புக்கு - 0771102395**


இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் *31.07.2021* அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,